Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
ஏப். 30 - மே.05, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 354

## பேச்சுவார்த்தைக்கு புலம் பெயர்ந்தவர்கள் பலிக்கடாவா?





ஆசை ஆசை... வளருங்கள் ஆசையை

நில் கவனி முன்னேறு

சின்னச் சின்ன ஆசை... அழகியாக ஆசை...!

—லேடீஸ் ஸ்பெஷல்—

தோற்றத்தை மாற்றுகிறார் பிரசாந்த்

ரம்பா நடனமாடத் தடை

# முரசம்

## நியாயத்துக்கான போராட்டம்

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

யுத்தத்துள்
சிக்கிய மக்களை
விடுவிப்பதே
இப்போது
இன்னொரு யுத்தமாக
மாறிவிட்டது.

யாழ்ப்பாணத்தில்
வெடித்த யுத்தம்
தென்மராட்சியின்
ஒருபகுதி மக்களை
இருதரப்பு
மோதல்களுக்கிடையேயும்
சிக்கித்தவிக்க
வைத்துவிட்டது.

முற்றிலும் பேராபத்துச்
சூழ்ந்த நிலையில்
வாழிடங்களிலிருந்து
குடிபெயர்ந்து
அகதிகளாகச் சேர்ந்த
இந்த மக்களையும்
யுத்தத்தின் கேடயமாகப்
பயன்படுத்தும்
துர்ப்புத்தி
சிலரிடம்
முளைவிட்டிருந்தது.

அதனால் அவர்களைப்
பாதுகாப்பான
யாழ்நகருக்கு
இடம் பெயராதவாறு தடுத்து
தமது கட்டுப்பாட்டுக்குள்
நிறுத்தி வைக்க
படையினர் தரப்பில்
முயற்சிக்கப் பட்டது.

இதன் மூலம்,
இவ்வகதிகளைக்
கருத்திற் கொண்டு
புலிகள் தரப்பு
கடுமையான தாக்குதலை
மேற்கொள்ளாதவாறு செய்யும்
ஒரு வகைப்
பணய நாடகத்தை
நடத்த விளைந்தனர்.

அதையும் மீறித்
தாக்குதல் நடந்தால்
புலிகள்
தமது மக்களையே
தாக்கவும் துணிந்துவிட்டனரென
சர்வதேச மட்டத்தில்
பிரசாரப் படுத்தவும்
முடியுமென எண்ணினர்.

அதனால்
அவசியமான
எவ்வித காரணமுமின்றி
அந்த மக்கள்
உயிராபத்துக்கு
உட்படுத்தப் பட்டிருந்தனர்.

யாழ் நகருக்குள் செல்லும்
அகதிகளின் போர்வையில்
புலிகளும் உள்ளே
ஊடுருவி விடலாமென்ற
காரணமொன்றும்
கூறப்பட்டது.

ஆனால் அது
அவசியமற்ற அச்சமென்பது
சுலபத்தில் புரிந்துவிடும்.
ஏனெனில்
யாழ் நகருக்குள்
இடம் பெயர்ந்த பின்னரும்
அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே
இருக்கப் போகும் அகதிகளை
அணுவணுவாகச் சோதிக்க
அவர்களால் முடியும்.

இத்தகைய போலிச் சாட்டுடன்
தடுத்து வைக்கப்பட்ட அகதிகளை
விடுவிப்பதற்கான
பலத்த போராட்டமொன்றை
பல்கலைக்கழக மாணவர்களும்
மனிதாபிமான அமைப்புக்களும்
ஒன்றிணைந்து எடுத்தன.
அதே வேளை
ஒரு சில தமிழ் கட்சிகளும்
அரசின் மீது
அழுத்தம் தெரிவித்தன.

இவற்றின் காரணமாக
படையினரின் உள்நோக்கம்
அம்பலமாகும் நிலைமை
தோற்றம் பெற்றதையடுத்து
தடுத்துவைக்கப்பட்ட
அகதிகள் வெளியேற
அரசாங்கம் அனுமதித்தது.

இத்தகைய ஜனநாயகப் போராட்டங்களின்
அத்தியாவசியத்தை
மீண்டும் ஒருமுறை
இங்கு காண்கிறோம்.

ஆனாலும் இங்கு
சுட்டிக் காட்டவேண்டிய
ஒரு விடயம் உள்ளது.

நியாயத்துக்கான
போராட்டமானாலும்,
அந்தப் போராட்டமும்
நியாயமான வழிமுறையில்
நடாத்தப்படுவது அவசியம்.

கடையடைப்புகளுக்காக
குண்டாந்தடிகளுடன்
பலாத்காரம் செய்வது
சாத்வீகப் போராட்டத்துக்கே
இழுக்கேற்படுத்தி விடும்.

பொது நோக்கத்திற்கான
ஆதரவைவிட
வழிமுறையின் தவறுகள் மேல்
விசனம் திரும்பிவிடும்.
தவறுகளை முளையிலேயே
திருத்திக்கொள்வது
எதிர்காலத்தில் பயன்தரும்.

இதேவேளை
திருமலை, மட்டுநகர், வன்னி
தொண்டர் ஆசிரியர்கள்
நிரந்தர நியமனம் கோரி
நடத்தி வந்த
உண்ணாவிரதப் போராட்டம்
சாதகமான வாக்குறுதிகளைப்
பெற்றுக் கொள்ள வழிசெய்து
வெற்றியளித்தமைக்கும்
முரசு தன் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.**

# ஆன்மீகம்



## நழுவும் நதிகள் முடிவதெங்கே...!

*மற்ற மதங்களைச் சகித்தல் என்ற அரிய தத்துவத்தை உலக மக்கள் அவசியம் உணர வேண்டும். சகிப்புத்தன்மை மாத்திரமல்ல, அனைவரிடமும் அன்புடன் ஒழுகுதல் என்ற இந்த மகத்தான கருத்தை இந்து மதம்தான் அவர்களுக்கு அளிக்க முடியும்.*

*பல ஆறுகள், பல்வேறு மலையுச்சிகளில் உற்பத்தியாகி, பலவிதமாக நேராகவோ வளைந்தோ ஓடி, ஒரே சமுத்திரத்தில் விழுகின்றதைப் போல், மக்கள் தங்கள் பல்வேறு சுபாவங்களின் காரணமாக பல்வேறு துறைகளில் முயற்சி செய்து, கடைசியில், 'சிவபெருமானே! உன்னையே வந்தடைகின்றார்கள்' என்று மகின்ம ஸ்தோத்திரத்தில் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.*

*வேறு வேறு துறைகளில் சென்றாலும் எல்லோரும் ஒரே இடத்திற்குத்தான் செல்லுகிறார்கள். சிலர் வளைந்து செல்லலாம்; சிலர் நேராக செல்லலாம்; ஆனால் அனைவரும் ஒரே ஆண்டவனைத்தான் அடைகிறார்கள். எப்பொழுது, சிவ பெருமானை வணங்கும் நீங்கள், லிங்கசொரூபத்தில் மாத்திரமல்லாமல், எல்லா உயிர்களிலும் அவனைக் காண்பீர்களோ அப்பொழுதுதான் உங்கள் பக்தி பூரணமாகும்.*

*ஹரியை எல்லோரிடமும் எங்கும் காண்பவன் தான் ஹரியின் உண்மையான பக்தனாவான். நீங்கள் சிவபெருமானுடைய பக்தர்களாக விருந்தால் அவரை எல்லா உயிர்களிலும் எங்கும் காணவேண்டும். வழிபாடுகள் எத்தகைய நாமரூபத்திலிருந்தாலும் அவையனைத்தும் அவனுக்குத்தான் செய்யப்படுகின்றனவென்பதை நீங்கள் உணரவேண்டும்.*

*வழிபாடு எந்த ரூபத்தில் எந்த முறையிலிருந்த போதிலும், அவை அனைத்தும், எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்கும் அத்தனிப்பெரு முதல்வனுடைய திருவடிகளுக்கே செலுத்தப்படுகின்றனவென்பதை உணர்வீர்களாக....."*

*இவ்வாறு சுவாமி விவேகானந்தர் தெரிவித்துள்ளார்.*

தொகுப்பு :
கொஸ்லாந்தையூர்-அஞ்சன்.

## அண்ணல் நபி கூறிய அளப்பரிய நன்மை

*கலீபா ஹஸரத் உமர்(ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் தெருவோரம் கிடந்த குழந்தை ஒன்றை எடுத்துக் கொண்டு கலீபாவிடம் ஒருவர் வந்தார்.*

*குழந்தை யாருடையது? என்று தெரியவில்லை குழந்தையைக் கொண்டு வந்தவர் நன்னடத்தைக்கும் நன்நம்பிக்கைக்கும் உரியவர்தான் என்பதை அப்போது கலீபா தெரிந்து கொண்டார்.*

*உடனே அக் குழந்தையை பேணிப் பாதுகாக்குமாறு குழந்தையைக் கொண்டு வந்தவருக்கு கட்டளையிட்டார் ஹஸரத் உமர்(ரலி) அவர்கள்.*

**ஆதாரம்: மவ்தா**

*இன்று மனித நேயம் கொஞ்சம் கூட இல்லாதவர்களின் அநியாய தாக்குதலில் சிக்கி உயிரிழந்த ஆயிரமாயிரம் சகோதரர்களின் குழந்தைகள் அநாதைகளாகியுள்ளன.*

*இத்தகைய அநாதைகளின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது அவர்களுடைய வளர்ச்சி, கல்வி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துவது போன்றவை அல்லாஹ்விடத்தில் அளப்பரிய நன்மைகளை அள்ளித்தரவல்லது என்று அண்ணல் நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.* எம்.சி.கலீல்-கல்முனை 05.

## உம்மிடம் அடைக்கலம்!


*ஆண்டவரே! உம்முடன் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். நான் ஒரு போதும் வெட்கமடைய விடாதேயும்; உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும்; உம் செவிகளை என் பக்கம் திருப்பியருளும்; விரைவில் என்னை மீட்டருளும்; எனக்கு அடைக்கலம் தரும் கற்பாறையாய் இரும்; என்னை பாதுகாக்கும் வலிமை மிகு கோட்டையாய் இரும்.*

*ஆம், என் கற்பாறையும் கோட்டையும் நீரே; உமது பெயரின் பொருட்டு எனக்கு வழிகாட்டி என்னை நடத்தி அருளும்.*

*அவர்கள் எனக்கென விதித்து வைத்துள்ள வலையில் இருந்து என்னை விடுவித்தருளும்; ஏனெனில், நீரே எனக்கு அடைக்கலம். உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்; வாக்குப் புரளாத இறைவனாகிய ஆண்டவரே நீர் என்னை மீட்டருளினீர்!- (திருப்பாடல்கள் 31)*

தொகுப்பு: ஜோண்மேரி-கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.354



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிக மில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.05.2000

கவிதைப் போட்டி இல.354
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.351

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### பரிசுக்குரிய கவிதை

### இழப்பு......

வெகு தூரத்தே இருந்த
கிரகங்கள் இன்று எம்
கரத்தில்...!
எம் கரத்தில் இருந்த
அமைதியோ இன்று வெகு
தொலைவில்!

அ.சந்தியாகோ-கண்டி.

### அடைக்கலம்

சர்வமும் அடைக்கலம்
உலக உருண்டையினுள்-இங்கே
அந்த உலகமே அடைக்கலம்
ஓர் உள்ளங்கையில்!

சரஸ்வதி மயில்வாகனம்-
ஆரையம்பதி-02.

### வரும் இனி வண்டு!


கையில் இருப்பதோ குண்டு!
அதை வைத்திருப்பவரோ பாண்டு!
இதைப் பார்ப்பவரோ மண்டு!
இதைச் சுற்றி படமெடுக்க வரும்
இனிவண்டு!

சிவஸ்கந்தா சசிதரன்-கொழும்பு-13.

### அறியாமை

அகிலம் என் கரத்தில்
அடக்கம் என்றிருந்தேன்....
எரி மலையும், நில அதிர்வும்
இருப்பதை மறந்தே!

சி.மதியழகன்-கண்டி வீதி,
திருகோணமலை.



### பறிபோனது

உந்தன் கையில்
நானும் வந்ததால்
எந்தன் சுதந்திரமும்
பறிபோய் விட்டதே!

மெற்றில்டா மரியதாஸ்-
பண்டாரவளை.

### விசித்திரம்!!!

உலகம் நம் கையில்
என எளிதாக எடை
போட்டு விடாதீர்கள்!
இதன் உள்ளேதான்
இருக்கிறது விசித்திரமே!

சி.சர்மிளா-பதுளை.

### உருண்டை

உலக உருண்டையை
விட ஒரு
உருண்டை
சோறு கிடைத்தால்
அதுதான் எங்களுக்கு
உலக உருண்டை!

த.நகுலேஸ்வரன்-மட்டக்களப்பு.

### உன்கையில்

பூவுலகம் உன்
கையில் இருப்பதால் தானோ
எம்மவர் எல்லாம்
மேலுலகம் அனுப்பப்படுகிறார்?

தி.கலைவாணி-வவுனியா.

### அதிசய தேசம்

எதிர்த் திசையில் எடுத்த காட்சியோ...?
அதுதான் நீரோட்டம் மட்டும் தெரிகிறது!
எங்கள் பொன்னான இலங்கை
பக்கம் எடுங்களேன்-திரள் திரளாக
திசைமாறும் தமிழ்க் கூட்டம் தெரியும்!
அவ்வளவு சிறப்பு இந்த மண்ணுக்கு!

எம்.சிவக்குமார்-வவுனியா.

### உன்னைப்போல் நாம்!

பந்தான உலகில்
பிறந்திட்ட எம்வாழ்வும்
நிலையென ஓரிடத்தில்
நிம்மதியாய்க் கழியாது,
பலபக்கம் உருள்கிறது
பரிதவிப்பைத் தருகிறது!

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

### உருண்டையுலகு

போர் அரக்கனின் கையில்
மிலேனிய உலகு அடக்கம்.

செல்வி ஞானராஜா ஞானரூஜினி-
வாழைச்சேனை.

### இனவாதம்

இலங்கை மட்டுமல்ல;
இந்த உலகமே என்-
கையில்தான்!

எம்.ரமேஷ்-கொழும்பு-15.

### கையடக்கம்

அறிவியலால் உலகம் ஒரு கைக்குள்ளே-போரினால்
அகதிக்கு இல்லம் ஒரு பைக்குள்ளே!

வி.கீதாஞ்சலி-முல்லைத்தீவு.

# வாசக(ர்)சாலை

*ஆசிரியருக்கு வணக்கம்,*

*எனது குமுறல் என்னவெனில், நான் முரசுக்கு அறிமுகமானது 1993ல், 36வது முரசிலிருந்து 351 வது வரையாகும். ஆனபடியினால் ரமேஸ் அற்புதராசா இறந்த பின்னர் முரசில் பல மாற்றம் கண்டுள்ளது. உதாரணமாக 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அதிரடி ஐயாத்துரை', நான் கிரிக்கெட் பிரியன். ஆதலால் 18ம், 20ம் பக்கங்களில் வரும் ஸ்போர்ட்ஸ் தகவல்களை காணவில்லை. எக்ஸ்ரேரிப்போர்ட் தரம் குன்றியுள்ளது, அதிரடி ஐயாத்துரை பின்னர் தான் வந்தார் (நன்றி). 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' தொடரைக் காணவில்லை. இதனால் மிகவும் முரசு ஈர்ப்பை குறைத்துள்ளது. இதனால் கவலையும் ஏற்படுகின்றது. ஆனபடியினால் என் குமுறலை தயவு செய்து நிவர்த்தி செய்வீர்கள் என நினைக்கிறேன்.*

முரசு வாசகன்
ஏ.ஜெயக்குமார்-கிரான்.

ஆயிரமாயிரம் தினமுரசு வாசகர்களில் யானும் ஒருவன். தவறாமல் தினமுரசு பத்திரிகை பார்த்து வருகின்றேன். பிரசுரிக்கப்படும் அனைத்து செய்திகளும் போற்றுவதற்குரியனவே. இளம் கவிஞர்களுக்கு களமமைத்துத்தரும் 'தேன் கிண்ணம்' பகுதி எனக்கு மிகவும் பிடித்தமானது. நான் இதற்கு முன் எழுதிய 'நெஞ்சத்தின் தேடல்' கவிதை முரசு 242 இல் பிரசுரமாகியிருந்தது. அது கண்டு எல்லையற்ற ஆனந்தமடைந்தேன். இன்று பத்திரிகை உலகில் தனி இடத்தினை பிடித்துக் கொண்ட தினமுரசு வாரமலரின் பணிகள் வளர வாழ்த்தி விடைபெறும்..

வாசகன் திருமலை நி.குகன்.

எனது இனிய
*முத்தான முத்தமிழ் முரசே!*
நீ வாழ்க வளர்க
முரசே,
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறப்பிலும் சிறப்பு.

அதனால் உனக்கு தனி சிறப்பு. அதிலும் சில இனிமையோ இனிமை.

அவை 'இடி அமீன்' 'சிகப்பு வணக்கம்' ஆகியன. பிரமாதம்.

மேலும் முத்தான முரசின் இனிய பணி தொடர....

வாசகனின் வாழ்த்துக்கள்.

சம்சுதீன் துவான் நஜீம்
திருகோணமலை.

## ஆட்சியை விமர்சித்தவர்கள்



*அன்பின் முரசே,*

*முரசு 327ல் ஆசிரியர் தலையங்கத்தில்*

*ஐ.தே.க. ஆட்சியில் - ரிட்சார்ட்.டி.சொய்ஸா பொ.ஐ.மு. ஆட்சியில் 'சட்டன' (ஆசிரியர்) இவர்களெல்லாம் ஆட்சியாளரை விமர்சித்தவர்கள் இன்று உயிருடன் இல்லை என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்த பட்டியலில் அமரர் அற்புதனும், குமார் பொன்னம்பலமும் சேர்க்கப் பட்டுவிட்டார்கள். எனது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள். 'சட்டன' ஆசிரியர் படுகொலைக்கு முரசு தன் வலிய கண்டனத்தை பதிவு செய்தது. ஆனால் முரசு ஆசிரியர் படுகொலைக்கு எந்தப் பத்திரிகையும் கண்டனத்தை வெளிப்படுத்தவில்லை.*

*வாழ்க பத்திரிகை சுதந்திரம்!*

எம்.எஸ்.றமீம், வேப்பங்குளம்,
வவுனியா.

*என் அன்பின் முரசே*

*உன் ஆயிரக்கணக்கான இரசிகர்களில் நானும் ஒருவன். உன்னை நான் ஒவ்வொரு கிழமையும் தவறாமல் வாசிக்கிறேன். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுவையானதாகவே இருக்கின்றன. உன்னில் வரும் ஆக்கங்கள் ஒன்றையும் தவற விடுவதில்லை. எல்லாவற்றையும் முழுவதுமாக வாசிக்கின்றேன். வாசகர்சாலை தொடக்கம் விளையாட்டு செய்திகள் வரை அனைத்தையும் முழுவதுமாக வாசிக்கிறேன். எனவே என் முரசே இதுபோல் நீ எப்போதும் ஜொலிக்க வேண்டும் என்று கூறி விடைபெறும் உன் அன்பு வாசகன்.*

எச்.எம்.றிபாஜி
திருகோணமலை

முத்தான முரசின் இருபது பக்கங்களும் ஏட்டிக்குப் போட்டியாக இனிமையிலும் இனிமை ஊட்டுகின்றன சத்தாக. தடைகள் பல தாண்டி, 350வது முரசினை கடந்து வெற்றியுடன் வீறுநடை போட்டு வாசகர்களை வசீகரிப்பதில் வியப்பொன்றுமில்லை,

'சிகப்பு வணக்கம்' வாராவாரம் திகிலடையச் செய்கின்றது.

முரசு சார்ந்த சகலருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு-10.

**மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266**

# ஆனையிறவில் புலிகளின் தாக்குதல்!

# இண்டர் நெற் மூலம் உலகனைத்தும் பார்த்தது

**இண்டர் நெற் உடன் இணைந்த கணனிப் பொறி மூலம் உலகனைத்துமுள்ள செய்திகள் யாவும் உடனுக்குடன் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவி விடுகின்றன. இவ்வாறு இருக்கும்போது எமது நாட்டில் வடபுலத்தில் நடைபெறும் மோதல்கள் பற்றிய செய்திகளை தணிக்கைமூலம் மூடி மறைக்க முயல்வது எந்த வகையிலும் பொருந்தாது என்றே நோக்கர்கள் கருதுகிறார்கள்-ஆனையிறவில் நடைபெற்ற சம்பவங்களை அவ்வப்போதே இண்டர் நெற் பொறி மூலம் பெரும்பான்மையான மக்கள் பார்த்துத் தெரிந்து கொண்டனர். ஆகவே செய்தித் தணிக்கையால் எந்தப் பயனும் இல்லை.**

## செய்தித் தணிக்கையால் கண்ட பலன் என்ன?

வடபுலத்தில்-போர் முனையில் என்ன தான் நடைபெறுகிறது என்ற உண்மை நிலவரத்தை தெளிவாக அறிய முடியாதிருக்கிறது. இதனால் ஒவ்வொருவரும் தாங்கள் கேள்விப்படும் செய்திகளை திருத்தியும் கூட்டியும் குறைத்தும் வதந்திகளாக பரப்பி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, கொழும்பில் பிரசுரமாகும் தினசரிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான செய்திகளை வெளியிடுகின்றன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரமாகும் செய்திகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டும் முரண்பட்டும் பிரசுரமாகி வருகின்றன.

இதுதவிர, அரச வானொலி, தொலைகாட்சி செய்திகளும் ஏனைய தனியார் வானொலி மற்றும் தொலைகாட்சி செய்திகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகளைத் தந்த வண்ணமுள்ளன.

இதற்கிடையில் நாட்டில் பரவலாக ஒளி-ஒலி பரப்பப்பட்டுவரும் பிறநாட்டு வானொலிகளும், தொலைக்காட்சிகளும் உள்நாட்டில் வெளிவரும் ஊடகச் செய்திகளை மழுங்கடிக்கும் வகையில் பரபரப்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

கடந்த 22ம் திகதி சனிக்கிழமையன்று மாலையான பின்னர் மேற்குலக நாடுகளிலிருந்து இலங்கையிலுள்ள தமது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தொலைபேசிகள் மூலம், அந்நாடுகளில் உள்ளவர்கள் பரபரப்பூட்டும் செய்திகளை கூறத் தலைப்பட்டனர். பன்நாட்டு இண்டர் நெற் உடன் தொடர்புடைய கணனிப் பொறிகளில் ஆனையிறவு முகாம் தாக்குதல் தொடர்பான செய்திப் படங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன என்றும் மேற்குலக நாடுகளில் இருந்து தொடர்பு கொண்டவர்கள் இங்குள்ளவர்களுக்கு அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இண்டர் நெற் தொடர்பு வசதியுடைய இங்குள்ளவர்களும் செய்திகளை நேரடியாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

'புலிகளின் குரல்' வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கக் கூடியவர்களும் ஆனையிறவு போர்பற்றிய செய்திகளை கேட்கத் தலைப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் வெளியான தமிழ்த் தினசரிகள் 'ஆனையிறவு முகாம் புலிகள் வசமாகிவிட்டது' என்று நாசுக்காக செய்திகளை வெளியிட்டன. ஆனால் இதனை அரச ஊடகங்கள் மூடி மறைக்கவே செய்தன. அதுமட்டுமல்லாமல் ஆனையிறவு முகாமை புலிகள் கைப்பற்றி விடாமல் அரச படைகள், விடுதலைப் புலிகளை மும்முரமாகத் தாக்கி அவர்களுக்கு பேரழிவினை ஏற்படுத்தி வருவதாக செய்திகளை வெளியிட்டுவந்தன.

படையினருக்கும் பெரும் உயிர் சேதத்தை விளைவித்தும் படைக் களங்களை பெருமளவில் கைப்பற்றியும் விட்டதாக புலிகள் வெளியிட்ட செய்திகளும் இப்பத்திரிகைகளில் இடம் பெற்றிருந்தன. இத்தனைக்கும் அரசினர் உத்தியோகப் பூர்வமாக இத்தகவலை வெளியிடவில்லை.

செய்தி ஊடகங்கள் இராணுவ பேச்சாளரை இது தொடர்பாக வினவியபோது இச் செய்தியை ஏற்கவோ மறுக்கவோ முடியாதென அவர் கூறி விட்டாராம்.

தொடர்பு சாதனங்கள் உலகளாவிய ரீதியில் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ள இக்கால கட்டத்தில் உண்மையான செய்திகள் வந்து சேரவொட்டாமல் பொதுமக்களின் காதுகளையோ கண்களையோ மூடிமறைக்க முடியாது.

இலங்கையில் போர்ச் செய்திகளை வெளியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. செய்தி தணிக்கை அதிகாரியின் அனுமதியின்றி போர் முனை செய்திகள் பிரசுரிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பிறநாடுகளில் உள்ள ஊடகங்களுக்கு அவற்றின் நிருபர்கள் கட்டுப்பாடு எதுவுமின்றி செய்திகளை அனுப்பத் தடையில்லை.

இலண்டன் மாநகரிலிருந்து ஒலிபரப்பாகும் பிபிஸி தமிழ் சேவை, சந்தேசிய சிங்கள சேவை ஆகிய ஒலி பரப்புகளில் அன்றாடம் போர் முனைச் செய்திகள் தாராளமாக வெளியிடப்படுகின்றன.

இந்நாட்டிலுள்ள ஏறத்தாழ 70 சத விகிதமான (சிங்கள, தமிழ்) மக்கள் தவறாமல் இச் செய்திகளைக் கேட்டு வருகின்றனர்.

இத்தகைய வசதிகள் இருக்கும்போது அரசாங்கம் செய்தித் தணிக்கையை எவ்வாறு-எதற்காக அமுல் நடத்த வேண்டும் என்று நோக்கர்கள் வினா எழுப்புகின்றனர்.

# ஆனையிறவு முகாம் தாக்குதலும் பொதுமக்கள் இடம் பெயர்வும்

(எமது யாழ். செய்தியாளர்)

**வி**டுதலைப் புலிகள் ஆனையிறவு முகாம் மீது ஏப்ரல் 17ம் திகதி முதல் 3 நாட்கள் தொடர்ந்த தாக்குதல் காரணமாக, படையினர் 20ம் திகதியன்று முதல், உயர் மட்ட இராணுவ அதிகாரிகளின் பணிப்பின் பேரில் ஆனையிறவு முகாமில் இருந்து பின்வாங்கி ஆனையிறவுக்கு வடக்கே நகர்ந்து சென்றனர்.

இத்தாக்குதலில் படையினர் தரப்பில் 7 அதிகாரிகள் உட்பட 79 பேர் இறந்துள்ளதுடன் 483 பேர் காயப்பட்டும், 100 பேர் வரை காணாமலும் போய் உள்ளனர் என்று அரசினால் அறிவிக்கப்பட்டது. இவர்கள் இறந்திருக்கலாம் அல்லது புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டி ருக்கலாம் எனவும் தெரியவருகிறது.

இறந்த 7 அதிகாரிகளில் ஆனையிறவு கட்டளைத்தளபதி பிரிகேடியர் பேர்சி பெர்னாண்டோ உட்பட 3 கேணல்தர அதிகாரிகளும் அடங்குவர்.

இத்தாக்குதலை நடத்துவதற்கும் புலிகள் ஊடுருவல் செய்வதற்கும் காரணமாக இருந்தது, அண்மைக்காலங்களில் இராணுவ நிலைகள் முற்றாக விலக்கப்பட்டமையாகும். வடமராட்சி கிழக்குப் பகுதியான, செம்பியன், மருதங்கேணி, தாளையடி, வக்ரியான், உடுத்துறை, மாமுனை, குடாரப்பு ஆகிய நிலைகளுக் கூடாக புலிகள் ஊடுருவியது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப் படையில் இயக்கச்சி, கரந்தாய் புதுக்காட்டுச் சந்தியுடன் கிழக்கை நோக்கி சோரன்பற்று, மாஸார், முகாவில் ஆகிய இடங்களிலும் புலிகள் ஊடறுத்து இந்நிலைகளை தம் வசப்படுத்தியதுடன் ஆனையிறவுக்கான சகல தொடர்புகளையும் துண்டித்திருந்தனர்.

இவ்வாறு தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்த காரணத்தினாலேயே படைகள் ஆனையிறவு முகாமை விட்டு வடக்கு நோக்கி நகர வேண்டியேற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### தொலைத்தொடர்புகள் துண்டிப்பு

ஆனையிறவு-இராணுவ முகாம் தாக்குதலுக்குப் பிறகு சேதம் விவரமாக புலிகளின் வானொலியான 'புலிகளின் குரல்' மூலம் தெரிவிக்கப்பட்ட செய்திகளின் படி அவர்கள் தரப்பில் 35 பேர் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டதோடு, தம்வசம் ஆனையிறவு முகாம் வந்தவுடன் புலிக் கொடியை புலிகளின் பீரங்கிப் படைத் தளபதி பாலு ஏற்றி வைத்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலால் யாழ்ப்பாணத்துக்கான தொலைத் தொடர்புகள் அனைத்தும் செயலிழந்திருப்பதும் இதற்கான காரணம் இதுவரை வெளியிடப்படாமலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை, ஆனையிறவு தாக்குதலில் படையினரிடம் இருந்து பல வகையான ஆயுதங்களை கைப்பற்றியதாக புலிகள் அறிவித்திருந்தனர். ஆனால் யாழில் வெளியாகும் பத்திரிகைகள், ஏனைய செய்திகளின் பிரகாரம் ஆனையிறவு முகாம் கைப்பற்றப்பட்டபோது, எவ்வித ஆயுதங்களையும் புலிகளால் எடுக்கமுடியாத நிலையில் அழிக்கப்பட்டதாகவும்,கொண்டு செல்லக் கூடியவற்றை படையினர் எடுத்துச் சென்றுவிட்டதாகவும், தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் ஓயாத அலைகள் மூன்றாம் கட்ட நடவடிக்கையின் பின்னர் இடம் பெயர்ந்துள்ள மக்களின் விபரம் வருமாறு:

### இடம் பெயர்ந்தோர்

பளை உட்பட பச்சிலைப் பள்ளி பகுதிகளில் இருந்து 1854 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

வட மராட்சி கிழக்கு மருதேங்கேணி உட்பட மொத்தம் 1847 குடும்பங்களில் 1167 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

வக்கிரியாய் பகுதியிலிருந்து 23 குடும்பங்கள் இடம் பெயர்ந்து உள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து 1847 குடும்பங்களில் 1161 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 686 குடும்பங்கள் இடம் பெயராது உள்ளனர்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இரும்புப் பைப்புகளால் ஆன தற்காலிக வீடுகள் அமைத்துக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதே வேளை, ஏனைய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு வரணியில் மேற்குறிப்பிட்டவாறு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, நாவற்குளியில் இருந்த களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யாழ். களஞ்சியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ●

## அரசியல் தீர்வே ஒரே வழி

### கருணாநிதி அறிவிப்பு

**இ**லங்கையில் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்த்து வைப்பதற்கு ஓர் அரசியல் தீர்வே ஒரே வழி என்று முதல்வர் மு.கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த 18ம் திகதி புதுடில்லி போய் சேர்ந்த திரு.விக்கிரமசிங்க பிரதமர் வாஜ்பேயியை சந்தித்து இலங்கைப் பிரச்சனை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

24ம் திகதி திங்கட்கிழமையன்று ரணில் விக்கிரமசிங்க தமிழ் நாட்டு முதல்வர் மு.கருணாநிதி அவர்களை சென்னையில் சந்தித்தார். அப்போதே முதல்வர் அரசியல் தீர்வே இலங்கை பிரச்சினைக்கு வழி கோலும் என்று வலியுறுத்தினார். ■

## அமரரான எஸ்.டி.எஸ்.

**ஈ**ழத்தின் இணையற்ற தமிழ் எழுத்தாளர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் ஏப்ரல் 22ம் திகதி சனியன்று மறைந்த துயரச் செய்தி தமிழ்கூறும் நல்லுலகை உலுக்கியது.

அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கு முரசு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

எஸ்.டி.எஸ் பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த முரசில் வெளிவரும். ■

## வேல் ஆனந்தன் நடனக் குழுவினர்

### கனடா பயணம்

**ஈ**ழத்தின் பிரபல நாட்டியக்கலைஞரும் பரதக்கலை விற்பந்நருமான திரு.வேல் ஆனந்தன் தமது குழுவினருடன் கனடா பயணமாகின்றார். இவரது குழுவில் வேல் ஆனந்தனோடு ஏழு நாட்டியத்தாரகைகளும் செல்லவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவிலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை தனது நான்காவது ஆண்டு நிறைவு விழாவை மே மாதம் 6ம், 7ம் திகதிகளில் கனடாவில் கொண்டாடுகின்றது. அதனையொட்டி இடம்பெறவுள்ள மாபெரும் கலைவிழாவில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு.ஆர்.என்.லோகேந்திரலிங்கத்தின் அழைப்பின் பேரில் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினர் நடன விருந்தளிக்க உள்ளனர்.

சுமார் ஒரு மாதகாலம் கனடாவில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இந்தக் குழு கலந்துகொள்ளும். அத்துடன் மே மாதம் 13ம் திகதி கனடா ஸ்காபுரோ நகரில் இடம்பெறவுள்ள செல்வி ஜனனி லோகேந்திரலிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியிலும் திரு.வேல் ஆனந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க உள்ளார். ●

## புலிகளெனக் கூறி கொள்ளையடிப்பு!

### முன்னாள் புலி மற்றும் இராணுவச் சிப்பாய்கள் கைது!

(நமது நிருபர்)

**ம**ட்டக்களப்பு-ஓட்டமாவடி மற்றும் காத்தான்குடி முஸ்லிம் பகுதிகளில் புலிகள் எனக் கூறிக் கொள்ளையிட்டு, பல்வேறு குற்றச் செயல்கள் புரிந்து வந்த பாதாள உலகக் குழுவொன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி முஸ்லிம் பகுதியில் எட்டுப்பேரும் காத்தான்குடியில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தேடப்பட்டு வருகிறார்கள்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடமிருந்து ரி-56 ரகத் துப்பாக்கி, தொடர்புக் கருவி, துப்பாக்கி ரவைகள், வெடிமருந்து, வாள், கத்தி என்பனவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புலிகள் எனக்கூறி பல்வேறு திருட்டுச் சம்பவங்களிலும், குற்றச் செயல்களிலும் ஈடுபட்டுவந்த இவர்களில் ஒருவர் முன்னாள் புலி உறுப்பினர் என்றும் அவர் பின்னர் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்பட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர் புலிகளாலும் தேடப்பட்டு வந்தவராகும். கைது செய்யப்பட்ட மேலும் இருவர் இராணுவத்திலிருந்து தப்பி தலைமறைவாகி இயங்கியவர்கள் என்றும் பொதுமக்கள் கூறுகிறார்கள்.

இக்குழுவினர் கடைசியாக ஓட்டமாவடிப் பகுதியில் அரிசி ஆலை, மற்றும் வீடொன்றில் பல இலட்ச ரூபா பணத்தையும் நகைகளையும் கொள்ளையிட்டனர். புலிகளின் சாயலிலேயே அக்கொள்ளைகள் கன கச்சிதமாக நடந்துள்ளன. அதனைத் தொடர்ந்தே இவர்கள் பொலிசாரின் வலையில் மாட்டவேண்டியேற்பட்டது. ■

## அம்பாறை கரையோர வயல்களில் சிறுபோகம் செய்ய படையினர் தடை!

(காரைதீவு நிருபர்)

**அ**ம்பாறைமாவட்டத்திலுள்ள கஞ்சிக்குடியாறு, காஞ்சிரங்குடா,சாவாறு, கோம்பக்கரைச்சி ஆகிய பிரதேசங்களில் சிறுபோக வேளாண்மை செய்ய படையினர் அனுமதி மறுத்துள்ளதாக விவசாயிகள் புகார் செய்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேச விவசாய பயிர்ச் செய்கைக் கூட்டம் பிரதேச செயலாளர் எஸ். அமலநாதன் தலைமையில் தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நீர்ப்பாசன பொறியலாளர் கே.இராஜேந்திரா, பெரும்பாக உத்தியோகத்தர் எம்.சிதம்பரநாதன் ஆகியோரும் சமூகமளித்திருந்த இக் கூட்டத்தில் விவசாயிகள் மேற்கண்டவாறு கவலையுடன் கூறினர்.

மேற்படி பிரதேசங்களில் சுமார் 10 வருடகாலம் வேளாண்மை செய்ய முடியாமலிருந்தது. ஆனால் கடந்த இரண்டரை வருடங்களாக இப்பிரதேச விவசாயிகள் வேளாண்மை செய்து வந்தனர். ரூபர்ஸ்குளத்திலிருந்து 600 ஏக்கர் வயல் நிலத்திற்கும், கஞ்சிகுடியாறு குளத்திலிருந்து 1700 ஏக்கர் வயல் நிலத்திற்கும் நீர்பாசனம் செய்யப்பட்டு வந்தது.

இதேவேளை காஞ்சிரங்குடா (மத்தி), வட்டி, பாவட்டான், போட்டாக்குளம் ஆகிய பகுதிகளிலும் வேளாண்மை செய்ய வேண்டாமென மற்றத்தரப்பு கூறுகிறதாம்.

மொத்தத்தில் ஆயிரக்கணக்கானோர் ஜீவனோபாயமின்றி நடுத்தெருவில் நிற்கப் போகின்றனர். சுமார் 1600 ஏக்கர் தரிசாகப் போகின்றது.

## தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிக்கு

### தமிழர் எவரும் நியமிக்கப்படவில்லை

(கண்டி நிருபர்)

**ம**த்திய மாகாணத்தில் இயங்கும் 1431 தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்தி கருதி கடந்த வாரம் மத்திய மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட 15 வலயப் பிரதி கல்விப் பணிப்பாளர்கள் நியமனங்களில் தமிழர் ஒருவரும் இடம்பெறவில்லையென அதிருப்தியும் கவலையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிருப்தியை முதலில் தெரிவித்த மத்திய மாகாண இந்து, கலாசார தமிழ் கல்வி அமைச்சர் திரு.வீ.இராதா கிருஷ்ணன். மத்திய மாகாண சபை அதன் தலைவர் திரு.மகிந்த அபயகோன் தலைமையில் கூடிய பொழுதே மேற்கண்ட அதிருப்தியை அமைச்சர் பகிரங்கமாக சபையில் வெளியிட்டார். என்றாலும் முதலமைச்சர் திரு. நந்தமித்திர ஏக்கநாயக்க இது குறித்து ஆராய்வதாக உறுதிமொழி தெரிவிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பான எதிர் நடவடிக்கைகளையும் அமைச்சர் இராதா கிருஷ்ணன் கைவிட்டார். ■

## வெளிநாடுகளில் கொண்டாட்டம்

**வெ**ளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள், ஆனையிறவு புலிகளின் தாக்குதலுக்கு உட்பட்டு கைப்பற்றப்பட்ட செய்தி கிடைத்தவுடன் பெரு விழா போல் ஆர்ப்பரித்து கொண்டாடினார்கள். சுவிஸ் நாட்டில் உள்ள சூரிச் நகரில் தமிழ் வர்த்தகர்கள் இலவசமாக இனிப்புப் பண்டங்களையும், பாரிஸ் நகரில் புலிக்கொடிகளுடன் வீதிகளிலும் தமிழ்க் கடைகளிலும் மக்கள் காணப்பட்டார்கள். மற்றும் ஜேர்மனி, இலண்டன், நோர்வே இத்தாலி, ஹொலண்ட் தமிழ் மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் சம்பெயின் பானம் அருந்தி ஆனையிறவு வெற்றியை கொண்டாடினார்கள். ■

## வவுனியாவில் செவிப்புலனற்றோர் கல்வி நிலையம்?

(நமது நிருபர்)

**செ**விப்புலனற்றோருக்கான கல்வி நிலையமொன்று வவுனியா தோணிக்கல் பகுதியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது:

சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர்கள் அமைப்பு (சீட்) செவிப்புலனற்றோர் சங்கம், வலுவிழந்தோர் சங்கம் என்பனவற்றினால் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இந்த நன்முயற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேசமுடியாத அதேவேளை செவிப்புலனற்றிருப்போருக்கு இப்பாடசாலையில் கல்வி போதிக்கப்படும்.

'சீட்' நிறுவனத் தலைவரும், வவுனியா அரசுசாரா நிறுவனங்களின் ஒன்றியத் தலைவருமான திரு.பி.நரசிங்கம் அவர்களின் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் உட்பட நலன்விரும்பிகள் பலரும் கலந்து கொண்டனர்.

செவிப்புலனற்றோர் கல்வி நிலையத்திற்கான கட்டடத்தையும் காணியையும் அரசு வழங்கியுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் சுமார் 400 பேர் அங்கவீனமுற்றோராக உள்ளனர் என்று அறியப்பட்டுள்ளது ■

## மலையக மக்கள் மேம்பாடு பற்றி

### ஆராய குழு நியமனம்!

(கண்டி நிருபர்)


**தோ**ட்டப்புறங்களில் வாழும் மலையக மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கை குறித்து ஆராய மத்திய மாகாண சபை ஐ.தே.கட்சி மாகாண சபை உறுப்பினர் தலைமையில் அறுவர் அடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது.

மாத்தளை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் திரு.சஞ்சீவ கவிரத்ன தலைமையிலான இக்குழுவில் மேலும் ஐந்து மாகாண சபை உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர்.

மத்திய மாகாண சபை மேற்கொண்ட ஏகமனதான தீர்மானத்தின் கீழ் இக் குழு நியமிக்கப்பட்டிருப்பதுடன் ஆறு மாதங்களில் இக்குழு தனது ஆலோசனைகளை சபையில் முன்வைக்கவும் உள்ளது.

கடந்த சில காலமாக மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி, மாத்தளை, நுவரெலிய மாவட்டங்களில் வாழும் மலையக தோட்டப்புற மக்களின் பிரச்சினைகள் பலவற்றுக்கு எதுவித ஆக்க பூர்வமான நன்மைகளும் கிட்டவில்லை என்ற புகார் இப்பொழுது மேலோங்கி வருகின்றது. ■

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு ✡ 03 ☼ 02 ☼ 1927

உதிர்வு ✡ 21 ☼ 03 ☼ 2000

### அமரர் திரு.வீரசிங்கம் அருளம்பலம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வீரசிங்கம் அருளம்பலம், சிவபாக்கியத்தின் (ஒய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், கமல சேகரம் நில அளவையாளர்-உரும்பிராய், சுதர் ஜனா (நீர் கொழும்பு); கனேஸ்வரி (நீர் கொழும்பு); குணசேகரி (உரும்பிராய்); ஞானசேகரி (சுவிஸ்); பவான் (சுவிஸ்); தனேஸ்வரி (கனடா); தேவதயாநிதி (சுவிஸ்); தயாபரன் (நீர்கொழும்பு); ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும், ஏனைய பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களிற்கும் எமது துயரங்களில் பங்கு கொண்டவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அந்தியேட்டிக் கிரியைகள் 2000.04.20 வியாழக்கிழமை நீர் கொழும்பில் நடைபெற்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

---

## 45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் ♦ 13 ○ 06 ○ 1931



மறைவு ♦ 15 ○ 03 ○ 2000

### திருமதி அன்னபூரணம் பேரம்பலம்

15.03.2000 அன்று No.14/2, பீரிஸ் பிளேஸ், தெஹிவளையில். சிவபாதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியையில் நேரில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும். மரணச் செய்தி கேட்டு உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் சாத்தி எமது துயரில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகிறோம். 14.04.2000 அன்று அந்தியேட்டி கிரிகைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்தித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

No.14/2, பீரிஸ் பிளேஸ்,
குவாரி றோட், தெகிவளை.

இங்ஙனம்
கணவன், பிள்ளைகள்.

---

## நினைவஞ்சலி

தாய் மடியில் ❖ 02 ◆ 06 ◆ 1912



இறையடியில் ❖ 02 ◆ 04 ◆ 2000

### அமரர் உயர்திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி சில்வா வீதியை, வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த உயர்திரு ஆ.சின்னத்தம்பி அவர்கள் கடந்த 02.04.2000 அன்று வட்டக்கச்சியில் அமரத்துவப் பேறுபெற்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மைந்தனும், செல்லாச்சி அவர்களின் அன்புத் துணைவரும், வேலுப்பிள்ளை மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா, அன்னப்பிள்ளை, செல்லாச்சி முதலியோரின் பாசஞ் செறிந்த சகோதரரும், அருணாசலம், தவமணி, கனகசபாபதி, நாகராசா ஆகியோரின் அன்புத்தந்தையாரும் கைலாயபிள்ளை, காந்திமலர், இராஜேஸ்வரி, ரஞ்சனி ஆகியோரின் மாமனாரும், பிரபாகரன், கிருபாகரன், ஜெயா, தாரணி, நிரஞ்சன், பிரசன்னா, தர்சினி, கலா, காந்தன், கேதினி, ஜெயசீலன், கீதா, நகுலேஸ்வரன், றஜனி, சுதன், மதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அமரரின் இறுதிச் சடங்குகள் 02.04.2000 அன்று மாலை கிளிநொச்சி வட்டக்கச்சியில் நடைபெற்றன. இறையடி சேர்ந்த எமது குடும்பத்தின் மூலவரான எம் தந்தையின் மறைவுகுறித்து அனுதாபந்தெரிவித்து எம்துக்கத்தில் பங்குகொண்ட சகல அன்புள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சி.அருணாசலம், கனடா - (416)425-2594,
சி.கனகசபாபதி, சுவிஸ் - 792736239
சி.நாகராசா, ஜேர்மன் - 7231440364

---

**CGP for A/L** பல்கலைக்கழகத் தெரிவுப் பரீட்சையான பொதுச்சாதாரண பரீட்சையில் இலகுவாக சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்ல விரும்புகிறீர்களா? A/L படிக்கும் சகல மாணவர்களுக்கும் மிகப் பிரயோசனமான முறையில் தொகுக்கப்பட்ட 20 மாதிரி வினாத் தாள்களும் மற்றும் முக்கிய குறிப்புக்களும் உள்ளடக்கியது. இவற்றைப் பெற விரும்பினால் ரூபா 250/= பெறுமதியான Money orderஐ அனுப்பி உடன் பெற்றுக்கொள்ளுங்கள். அனுப்பவேண்டியது: M.I.Abdul Jaleel, "Riffa Nest", Sammanthurai-02.

---

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

* காய்ச்சல்
* தலைவலி
* தலைச்சுற்று
* தலைப்பாரம்
* ஜலதோஷம்
* இருமல்
* மூக்கடைப்பு
* பல்வலி
* காதுவலி
* வயிற்றுவலி
* வாதத்தால் வரும் வலிகள்
* உணர்ச்சியற்ற பாகங்கள்
* சுளுக்கு
* தசை வலிகள்
* பூச்சிக் கடிகள்
* பிரயாணக் களைப்பு
* மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர்:

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984

---



## மஹாசக்தி வசிய மருத்துவம்

(எல்லாப்புகழும் இறைவனுக்கே)

*மட்டக்களப்பு மலையாள மாந்திரீக கடல் கடந்த விஷேட வெற்றிகள்.*

பலதலைமுறை பரம்பரை தெய்வீக இராஜ வைத்தியம்
குருசக்தி நிலையம் கல்லடி, மட்டக்களப்பு, இலங்கை.
GONT APPROVED CHARICABLE SERVICES CENTER Reg.No.HA14/BT/176

**மஹாசக்தி உபாசனா பூசகர்**
புரதன நவீன மருத்துவ மனோதத்துவ "(மந்திரயோகி)"
YOGI-DR.T.MYLVAGANAM (M.B.B.S.H. (இந்தியா)
R.H.M.P.DAe அக்குப்பஞ்சர் (இலங்கை)
MINISTRY OF HEALTH REGISTERED MEDICAL PRACTITIONER Ree.No.061

கர்மவினைகளினால் தீயசக்திகளினால் தீயவர்களினால், ஏற்பட்ட தீராத உடல்நோய், மனநோய், வேறு பிரச்சனைகளை தீர்த்து எத்துன்பங்களும் அணுகாமல் காவல்செய்து, காதல் திருமணம்,கல்வி,தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளை நீக்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற்றுச் சந்தோஷமாக வாழ காதலர்கள் ஒன்று சேர கணவன்-மனைவி குடும்பப்பிரச்சனைகள் இன்றி பிரியாமல், இன்னபமாக இருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக தகாத ஆண்-பெண் உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க வேறு நன்மையான காரியங்களுக்கு மஹா சக்தி மந்திர யந்திரவசியங்கள் செய்துகொள்ள-வரமுடியாத கடல் கடந்த,வெளி நாட்டவர்கள் தபால் பாக்ஸ் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு இறைபரிகாரப்பொருட்களை விஷேட தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

(SEX) செக்ஸ்-ஆண்பெண்களின் சகலவிதமான பாலியல் பால் உறுப்பு பிரச்சனைகள், மலடு ஆண் பெண்மை வீரியக் குறைவு, குழந்தைகள் இல்லாக் குறைபாடுகள்.
ASTHMA (ஆஸ்த்மா) ஈனை, மூச்சு, தொய்வு, இரைப்பு, இழுப்பு, இளைப்பு கடுமையான களைப்பு பலவீனம், சகலவிதமான கர்மநோய்கள் உட்பட இவைகளோடு சேர்ந்திருக்கும் வேறுநோய்களும், பைத்தியம் சகல விதமான மனநோய்கள், தீராத தலையிடி, கண்பார்வைக்குறைவு, தலைமுடி பழுத்தல், கொட்டுப்படல், வளர்ச்சியின்மை, ஞாபசக்தி குறைவு உடல்மெலிவு இவைகளுக்கு விஷேட அனுபோக மருத்துவ மனோத்துவ யோகாசன தியான ஆண்மீக அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ளலாம். விரும்பிய குருதட்சணையை அளித்து நேரில் வந்து மாந்திரீக சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

YOGA HOMOEOPATHY INDIAN MEDICAL RESEARCH & SERVICE

**நாடவேண்டிய விலாசம்**

GRUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)
தொ.பே. 065/24872 பாக்ஸ்:- 065-23796
**கொழும்பில் சந்திக்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.**

---

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SOCIETIES

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ⁛பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

---



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ⁛பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA**
**UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET,**
**MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

---

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஏப்ரல் 26 முதல் மே 03வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் மே 06, 07 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் மே 13, 14 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் ரமீன் / செல்வி ரமீனாபானு

இலங்கை ஏறாவூர் மற்றும் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் ஜெர்மனி Rennerod இல் வசிப்பவர்களுமான கலீலுர் ரஹ்மான் ஜரூஷியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரமீன் மற்றும் செல்வப் புதல்வி ரமீனாபானு இரட்டையர்கள் தமது முதலாவது பிறந்த தினத்தை இலங்கையிலுள்ள தந்தையின் இல்லமான ஏறாவூரில் 21.04.2000 அன்று வெகு விமர்சையுடன் கொண்டாடினர்.

இவர்களை அன்பு உம்மா, வாப்பா, நானாமார் ஆக்கில், ஆஷிட், வாப்பம்மா, வாப்பப்பா, மாமாமார் இக்பால், ஜஹீர் (கட்டார்) மாமிமார் பரீனா, பகீதா, சியானா, சாச்சாமார் கரீம் (ஜேர்மன்) சமட், சஹீட், சாதிக், சாச்சிமார் கஸ்ஸான் நஸ்வின், றொசான், பாராஸ், மற்றும் புத்தளம் உம்மம்மா, உம்மப்பா, மாமா குடும்பத்தினரான மஹ்பூப் றிஸ்னா (ஜேர்மன்), தவ்ஷீத் றபீக்கா (புத்தளம்), ஜிப்ரி சகீலா (அனுராதபுரம்), பெரியம்மா குடும்பத்தினரான றபீக் உவைஸியா, சம்சுதீன் பரூஷியா மற்றும் மதினிமார், மச்சான்மார், தாத்தாமார், தங்கைமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

Rennerod.
56477. Hingweg-11, Germany.

---



## 1வது பிறந்தநாள் வாழ்த்து

சாவகச்சேரி எழுதுமட்டுவாழைச் சேர்ந்த நல்லகுரு நாதன்-கவிதா தம்பதிகளின் தவப் புதல்வன் பிருந்தாளன்

**பிருந்தாளன் 27.04.2000**

தனது முதலாவது பிறந்த நாளை 27.04.2000 ல் எழுதுமட்டுவாழ் சிவன் வீதியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா-அம்மா, அம்மப்பா-அம்மம்மா, அப்பம்மா, அண்ணாமார்-அக்காமார், மாமாமார்-அத்தைமார், சித்திமார்-சித்தப்பாமார், மச்சான்மார்-மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எழுதுமட்டுவாழ் சோமேஸ்ரநாதனின் அருளோடு பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

---

## மல்டி ஷொப்

உங்களுக்கு தேவையான அனைத்து தகரப் பெட்டிகளும், பலகைப்பெட்டிகளும், ப்ளாஸ்டிக் கதிரைகள் உட்பட நவீன வடிவமான பிரயாண பேக்குகளும், உங்களுக்கு எந்த நேரத்திலும் கொண்டு வந்துதரப்படும்.




**Tel: 6637872**

MULTI SHOP
BL: 12 - ST:05
JADA:06
AM 'AN STREET,
SALMIYA,
KUWAIT.

**நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் உங்களுக்கு அன்பளிப்பு உண்டு.**

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சுவார்த்தைக்கு புலம் பெயர்ந்தவர்கள் பலிக்கடாவா?



இலங்கைத் தமிழர்களின் புலம் பெயர்வானது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. தன்விருப்பச் செயலுமல்ல. இந்த நாட்டில் கோலோச்சிய கொடுமைகளே புலம் பெயர்வின் அடிப்படைக் காரணி.

இந்த அடிப்படைக்கு மேலாகவே ஏனைய காரணிகளான பொருளாதாரக் காரணிகள் விளைந்துள்ளன. பொருளாதாரம் என்ற அம்சமும் புலம் பெயர்ந்தோரின் அக்கறைக்குரிய விடயமாக இருந்தாலும்கூட, பொருளாதார நலன்களுக்காகவே இப் புலம்பெயர்வுகள் நிகழ்வதாகக் கணிப்பது இப் புலம் பெயர்வுகளின் உண்மைத் தாற்பரியத்தைக் கொச்சைப் படுத்துவதாகும். அத்தோடு, இப் பொருளாதாரக் காரணியும்கூட இத்துணை அழுத்தம் பெற்றதற்கும், இந்நாட்டின் யுத்தச் சூழ்நிலையால் தமிழ் மக்களின் பொருளாதார வழிமுறைகள் இழுத்து மூடப்பட்டமையும் மற்றோர் காரணம்.

யுத்தத்தால் பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகளான, விவசாயம், மீன்பிடி என்பன தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளன. மீன்பிடி வலயக்கட்டுப்பாடு, நேரக்கட்டுப்பாடு, விவசாய உரக்கட்டுப்பாடு போன்றவை ஒருபுறமும், விளைபொருள்களுக்குச் சந்தை வாய்ப்பு அற்ற சூழ்நிலை மறுபுறமுமாக நெருக்குகின்றன. இதேவேளை தமிழர்களின் பிரதான மூலதனமான கல்வி என்பதே வேலைவாய்ப்பின்மையின் காரணமாக கேள்விக்குறியாகி வருகின்றது.

யுத்தக்காரணத்தால் நாட்டில் நிலவும் பாதுகாப்புக் கெடுபிடிகளும் வேலைவாய்பை மிகச் சிரமத்துக்குள்ளாக்கி விட்டுள்ளது. சிங்களப் பிரதேசங்களில் வேலை செய்யும் சூழ்நிலையும் இதன் காரணமாக மிகப் பதற்றமானதாகவுள்ளது. இத்தகைய காரணங்களால் இலங்கைத் தமிழர்களுக்குப் பொருளாதார நெருக்கடியொன்று ஏற்பட்டிருப்பது உண்மையே. இதற்கான நிவாரணமாக இவ் வெளிநாடுகளுக்கான புலம்பெயர்வுகள் உதவுகின்றன என்பதும் உண்மையே. ஆனால் அவை வெறும் பொருளாதாரத்துக்கான புலம் பெயர்வுகள் அல்ல.

அரசியலே இப்புலம்பெயர்வுகளைத் தீர்மானித்த அடிப்படைக் காரணி. இலங்கையின் அரசியல் வரலாற்றில் உருவாகிய இனப்பிரச்சினையுடன் விளைந்த ஒரு கூறுதான் இப்புலம் பெயர்வுகளும். இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பெரும் தொகையான பகுதி பிற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ள இந் நிகழ்வை எவரும் அவர்கள் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட முடிவாகக் கருத முடியாது. தனித்தனியாகவே புலம் பெயர்வு இடம்பெற்றாலும் இது ஒரு சமூகத்தீர்மானமாகவே விளைந்துள்ளது. இலங்கைத் தமிழர் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்வதை ஒரு சமூகத்தீர்மானமாக வகுத்துக் கொண்டுள்ளனர் என்பதையே இது காட்டுகிறது. அதனால் இப் புலம் பெயர்வுக்கான வழிமுறைகளில் இருக்கக்கூடிய சட்டவிரோத அம்சங்கள் இங்கு எடுத்துப் பார்க்கப்பட வேண்டிய விடயமல்ல. அவை ஒரு அரசியல் நெருக்கடியில் விளைந்த உடைப்புகளாகவே ஏற்கப் படவேண்டியவை.

இந்த அரசியல் நெருக்கடியையும் அதனால் உருவான புலம் பெயரும் சமூக முடிவையும் ஏற்றுக் கொள்ள வேண்டியது சர்வதேச சமூகத்தின் கடமை. இவற்றைத் தனிப்பட்ட சட்டவிரோதக் குடிபெயர்வுகளாகக் கருதுவது தவறு. எனினும் இவ்வாறு புலம் பெயர்ந்த தமிழ் மக்களில் பெரும்பகுதியினர் அந்தநாடுகளிலும் ஒரு அந்தரமான நிலமையிலேயே வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அந் நாடுகளில் தங்கியிருக்க, தொழில்செய்ய, சிவில் உரிமைகளைப் பயன்படுத்த அருகதையற்றவர்களாகவே பேணப்பட்டு வருகிறார்கள். இப் புலம் பெயர்வுகளால் அவர்களுக்கு இலங்கையின் அரசியல் நெருக்கடிகளிலிருந்தும், யுத்தம் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகளிலிருந்தும், விடுதலை பெற்றுக் கொடுத்துள்ளபோதிலும் அந்நாடுகளில் ஒரு முழுமையான இயல்பு வாழ்க்கைக்குச் செல்ல வழிசமைக்கவில்லை.

ஒருபுறம் இப் புலம்பெயர்வு அவர்களை தாய்நாட்டிலுள்ள சொந்த பந்தங்களைப் பிரிந்து அவர்களின் இன்பதுன்பங்களிலும் பங்கேற்க முடியாத அவல நிலமைக்கு உள்ளாக்கியுள்ளது. பல இளைஞர் யுவதிகள் தங்கள் சொந்தக் கணவன், மனைவி, பிள்ளைகளோடுகூட ஒன்று சேர முடியாத நிலையிலும், தமது, தாய் தந்தை உறவினர்களின் மரணச் சடங்குகளிற்கூட கலந்து கொள்ள இயலாத நிலமையிலும், வாழ்கிறார்கள். பல திருமணங்கள் பெற்றோரின்றியே நிகழ்கிறது. சில மணமக்கள் இல்லாமலேகூட நிகழ்வது வேடிக்கையாக இருந்தாலும், எமது சமூக அவலத்தின் சாட்சியமாக அமைந்துள்ளது. மணமகளையும் மணமகனையும் ஒன்றிணைப்பதென்பதே பல குடும்பங்களுக்கு அதி சிரமமான ஒரு காரியமாகிப் போய்விட்டது.

இவ்வாறான ஒரு திரிசங்கு சொர்க்க நிலையில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் அவலங்களை, அவர்கள் அங்கு பொருளீட்டுவதை மட்டும் கொண்டு திருப்திகரமானதென, மதிப்பிடுவதும் தவறு. இலங்கைப் பணத்துடனான அன்னியச் செலவாணி வேறுபாட்டால் பெருமளவாகத் தோன்றும் புலம்பெயர்ந்தவர்களின் வெளிநாட்டு உழைப்பு, அந்நாடுகளின் வாழ்க்கைத்தரம் மற்றும் வருமானங்களோடு ஒப்பிடுகையில் மட்டமானதே. அதையும் அவர்கள் ஈட்டிக்கொள்ளப்படும் சிரமங்கள் அளப்பெரியவை.

இத்தகைய நிலையிலும் விரும்பியோ, விரும்பாமலோ, புலம்பெயர்ந்து வாழவேண்டிய ஒரு சமூக நிர்ப்பந்தம் இங்கு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் இப் புலம் பெயர்வு வாழ்க்கைக்கும் சில அச்சுறுத்தல்கள் எழுந்தவண்ணம் உள்ளன. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்திருப்பவர்களை திருப்பியனுப்பும் முனைப்புகள் அடிக்கடி மேற்கொள்ளப் படுவதுதான் இங்கு அச்சுறுத்தலாக எழுந்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, தன்னிடம் மனித உரிமை மீறல்கள் இல்லையென சர்வதேச நாடுகள் மத்தியில் பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. தனக்கான தற்பெயரை நிலைநாட்டிக் கொள்வதற்கு மட்டுமன்றி, வெளிநாட்டுக் கடனுதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் இது அதற்கு அவசியமாக உள்ளது. அத்தோடு வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு அந்நாடுகளை ஆதரவளிக்க வேண்டாமெனக் கோருவதற்கும் இத்தகைய தோற்றப்பாட்டை நிலைநிறுத்துவது ஒரு பிரதான முன் நிபந்தனையாக அதற்கு உள்ளது.

ஆனால் அது தன் பிரசாரத்தை மேற்கொள்ளும் சர்வதேச நாடுகளிலும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். இப் புலம்பெயர்வுகள் இலங்கையின் மனித உரிமை மீறல்களின் அடையாளமாக அங்கு விளங்குவதால் அவர்களைத் திருப்பி எடுக்க விரும்புவதான சமிக்ஞையை வெளிநாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

இதேவேளை வெளிநாடுகளிலும் சில நெருக்கடிகள் தோன்றி வருகின்றன. தமிழ் மக்கள் பொதுவாகப் புலம் பெயர்ந்த நாடுகளான மேற்கத்தேய நாடுகளில் அகதிக் கொள்கைகள் தற்போது மாற்றம் கண்டு வருகின்றன.

ஆரம்பத்தில் இந் நாடுகளின் அகதிக் கொள்கைகளில் ஒரு சர்வதேசக் காரணி செல்வாக்குச் செலுத்தியது. அதாவது அப்போது உலகில் இடதுசாரி நாடுகள் வலதுசாரி நாடுகளென இரு எதிரெதிர் முகாம்கள் இருந்தன. இடதுசாரி நாடுகளைச் சிதைக்க வலதுசாரி நாடுகள் மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் ஒன்றாக அவற்றின் அகதிக் கொள்கையும் அமைந்திருந்தன. இடதுசாரி நாடுகளிலிருந்து தப்பி வருவோரைத் தூண்டுவதற்கென, அவர்களின் அகதிக் கொள்ளைகள் கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. மேற்கு ஜேர்மனியில் கம்யூனிச நாடாக இருந்த கிழக்கு ஜேர்மனியில் அகதிகளுக்கென பாரிய அகதி முகாம்கள் கட்டப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கான நிவாரண உதவிகள் பெருந்தொகையாக வழங்கப்பட்டன.

அத்தகைய நிலையில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த அகதிகளுக்கும் இவ்வகையில் அமைந்திருந்த அந்நாட்டு அகதிக் கொள்கைகள் வாய்ப்பாக அமைந்திருந்தன.

ஆனால், சோவியத் யூனியனின் சிதைவுக்குப்பின்னர் பனிப்போர் முடிவுற்றதனால் அத்தகைய கவர்ச்சிகரமான அகதி கொள்கைகளைத் தொடர்ந்தும் பேண வேண்டிய அவசியம் இந் நாடுகளுக்கு இல்லாது போய்விட்டது. இதேவேளை இத்தகைய அரசியல் அகதிகளைவிட உலகளவில் ஏற்பட்டு வரும் பொருளாதார நெருக்கடிகளாலும், உலகின் பல்வேறு பாகங்களில் ஏற்பட்டுவரும் பஞ்சம், வெள்ளம், பூமியதிர்ச்சி போன்ற அனர்த்தங்களாலும்கூட அகதிகளின் வருகைகள் பெருகலாயிற்று. அத்தோடு பல்வேறு நாடுகளின் உள்நாட்டு யுத்தங்களும் இதற்கு வழிவிட்டன.

அகதிகளில் பெருமளவிலான வருகை நெருக்கடிகளைத் தோற்றுவிக்கவே, அவர்களை மட்டுப்படுத்தும் முனைப்புகளை மேற்குலக நாடுகள் தேடத் தொடங்கின. அதன் முதற்கட்டமாக அவர்கள் பொருளாதார அகதிகளை மறுதலிக்க விளைந்தார்கள். இவ்வாறு மறுதலிப்பதற்கான ஒரு வகையீட்டைச் செய்து கொண்டபின் இலங்கையிலிருந்து புலம்பெயர்பவர்களில் பெரும்பாலானவர்களை இப் பொருளாதார நோக்கத்தோடு புலம் பெயர்பவர்களின் வகையோடு பொருத்தி, அகதி அந்தஸ்தை நிராகரிக்கலானார்கள். இலங்கையின் உடனடி நிலமை காரணமாக இத்தகையோரைத் தம் நாட்டில் தங்க விட்டிருந்தாலும் அவர்களைப் சட்டபூர்வமற்ற முறையிலேயே வசிப்பதாகப் பேணி வருகிறார்கள். இவர்களை எப்போதும் திருப்பி அனுப்பக் கூடியவர்களாகவே வைத்துள்ளார்கள்.

எனவேதான் இங்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் அரசியல் நெருக்கடி காரணமாகப் புலம் பெயர்ந்தவர்கள் என்பதையும் இப்புலம்பெயர்வு ஒரு சமூகத் தீர்மானத்தின் விளைவேயன்றி தனிப்பட்டவர்களின் சுய நோக்கங்களின் விளைவல்லவென்றும் சர்வதேச சமூகத்துக்கு இடித்துரைக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இவ்வாறிருக்க, புலம் பெயர்ந்த தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் முயற்சிகள் பல வேறு நாடுகளிலும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. எப்போதாவது இலங்கையின் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தோன்றும் போதெல்லாம் இப் புலம் பெயர்ந்த தமிழர்களைத் திருப்பி அனுப்ப முடியுமா என்று இந் நாடுகள் எத்தனிக்கின்றன.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின் இந்தியாவில் தஞ்சம்புகுந்திருந்த பல இலங்கைத் தமிழர்களை இந்தியா திருப்பி அனுப்பியிருந்தது தெரிந்ததே. அந்த அகதிகளைத் திருப்பி அனுப்பும்போது இந்தியா தெரிவித்த கருத்து, அவர்கள் தங்கள் சுய விருப்பத்தின் பேரிலேயே நாடுதிரும்புகிறார்கள் என்பதே. அதேவேளை இலங்கை அரசாங்கமும் அகதிகள் நாடு திரும்பக்கூடிய சூழ்நிலை திரும்பிவிட்டதென்றே கூறியது. ஆனால் இவ்வாறு திருப்பியனுப்பப்பட்ட அகதிகளின் நிலை எவ்வாறு உள்ளது? இன்னும் கூட அவர்களில் பெரும்பாலானோர் சொந்த இடங்களுக்குப் போகமுடியாமல் திருகோணமலையில் அகதி முகாம்களில் வாழ்கிறார்கள்.

வெறுமனே அரசியல் ஆதாயத்துக்காக, இங்குள்ள சூழ்நிலையை மாறுபடுத்திச் சித்தரித்துக் காட்டினாலும் சொந்த நாட்டிலேயே இன்னும் இன்னும் அகதிகள் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், வெளிநாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்படுவோருக்குப் பாதுகாப்பான சூழ்நிலை உள்ளதாகக் காண்பிப்பது ஒரு ஏமாற்றே.

இந்த ஏமாற்றுப் பிரச்சாரத்தை நம்பியோ, அல்லது சில வெளித் தோற்றப்பாடுகளைத் தவறாக அனுமானித்தோ, மேலும் சில நாடுகள் புலம் பெயர்ந்தவர்களை திருப்பியனுப்ப பல்வேறு தடவைகள் முற்பட்டன.

சில வருடங்களுக்கு முன்னர் சுவிஸ் நாட்டுத் தூதுக்குழுவினர் இலங்கைக்குவந்து புலம் பெயர்ந்தவர்களைத் திருப்பியனுப்புவது குறித்து தீவிர ஆராய்வுகளை நடத்தினர். ஆனாலும் இங்குள்ள தமிழ்க்கட்சிகள், பொது ஸ்தாபனங்கள், மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றின் வலியுறுத்தலால் அம் முடிவைத் தற்காலிகமாகப் பிற்போட்டனர்.

இதேபோல் ஜேர்மனியும் திருப்பியனுப்பும் முஸ்தீபுகளை மேற்கொண்டது. பிரான்ஸிலும் இதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

கனடாவிலும் இங்கிலாந்திலும் அகதிகள் தொடர்பான சட்டங்கள் கடினமாக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கான சலுகைகளும் மட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில்தான் தற்போது மற்றொரு நெருக்கடி முளைவிட்டுள்ளது. அதாவது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கம் காணப்பட்ட ஒரு நல்ல முயற்சிக்கு மத்தியில் புலம் பெயர்ந்தவர்களுக்கான ஒருவித அச்சுறுத்தலும் எழுந்துள்ளது.

நோர்வே மத்தியஸ்த முயற்சிகள் மிக ஆரம்பக்கட்டத்திலேயே இருக்க, நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கான இருதரப்பு இணக்கம் காணப்பட்டதேயன்றி, இருதரப்பையும் ஒரு பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவதற்கான இணக்கம் எதுவும் காணப்படாத நிலையில் இருக்க, ஏதோ தீர்வு ஏற்பட்டு விட்டதென்ற தொனியில் 20 பேர்கொண்ட ஒரு தொகுதி ஜேர்மனி நாட்டுப் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டே விட்டனர். திருப்பி அனுப்பப்பட்டவர்கள் கூட அச்சுறுத்தலின்றி இருக்க முடிந்ததாவென்றால் அதுவுமில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு, ஜேர்மனியத் தூதரகம் தலையிடநேர்ந்தே பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

வெளிநாடுகளிலிருந்து திருப்பியனுப்படக்கூடிய யாவரையும் புலிகளின் தொடர்பு இருக்கிறதா என்று அரசாங்கம் சந்தேகிக்கும் போது பாதுகாப்பு உத்தரவாதம் யார் கொடுக்க முடியும்?

அவ்வாறு அரசாங்கம் சந்தேகிப்பதும் யதார்த்தமானதே. அதை மறுப்பதற்கில்லை. அதேபோல், அத்தகைய சந்தேகம் இருக்கும் மட்டும் அனுப்பப்படுபவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு உத்தரவாதம் இல்லையென்பது யதார்த்தமானதே.

இந்த இரு யதார்த்தங்களும் இல்லாதொழியக் கூடிய சூழ்நிலை எப்போது தோன்றுமென்றால் புலிகளும், புலிகளின் ஆதரவாளர்களும் ஆபத்தற்றவர்கள் என அரசாங்கம் நம்பக்கூடிய நிலையில்தான்.

இது எப்போது தோன்றுமென்றால், யாவருக்கும் புரியும் ஒரு ஏற்புடைய அரசியல் தீர்வுடன் புலிகளுடன் அரசாங்கம் ஓர் இணக்கப்பாட்டைக் காணும்போதுதான். அத்தகைய ஒரு நிலமை கண்ணுக்குப் புலப்படாத இத்தருணத்தில், வெறுமனே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு ஒரு நாடு முன்வந்ததை மட்டுமே சாதகமானதாகக் கருதி, அதில் அரசியல் தீர்வைக் காணுவதற்கு அழுத்தம் கொடுப்பதை விடுத்து அகதிகளைத் திருப்பியனுப்ப இந் நாடுகள் முனைவது மிக வேதனையானதாக உள்ளது. அதிலும் அதிக கவலை தரக்கூடியதாக நிகழ்ந்துள்ள மற்றொரு விடயம் என்னவென்றால், பேச்சுவார்த்தைக்கு நடுவராக முன்வந்த நோர்வே நாடே, இன்னும் எவ்வகை இணக்கங்களையும் காணமுன்பே, தனது நாட்டிலுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கும் விடயம்தான்.

இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அறிகுறிகள் தெரியும் வரை, அவை வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையை ஈட்டும் வரை, ஏனைய நாடுகளை இவ்வாறான அகதிகளைத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகளுக்கு முண்டியடிக்க வேண்டாமெனத் தடுக்க வேண்டிய பொறுப்புடைய, நடுவரான நோர்வேயே இவ்வாறான செயலில் இறங்கியிருப்பது புலம் பெயர்ந்தவர்கள் நோக்கில் கவலையளிப்பதாக உள்ளது.

இத்தகைய செயல்கள் புலம் பெயர்ந்தவர்களின் மனதில் கலக்கத்தை ஏற்படுத்திவிட்டால் அதுவே தீர்வு முயற்சிகளுக்குத் தடையாக எழுந்துவிடக்கூடுமென்பதையும் இங்கு மனதில் கொள்ள வேண்டும்.

இந்த யுத்தம் தொடர்வதற்கு புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் உள்ள அச்சமும் ஒரு வகை மறை முகக் காரணம். யுத்தம் நின்றால் தாம் திருப்பி அனுப்பப் பட்டுவிடுவோம் என்று அவர்களின் உள்ளுணர்விலுள்ள ஒரு அச்சமும் இங்கு ஒரு காரணியாக அமைந்துள்ளதை உணர வேண்டும்.

அத்தகைய அச்சத்தைத் தூண்டும் செயல்கள் தீர்வுக்கு, முட்டுக்கட்டையாக அமைந்துவிடக்கூடும். தாம் திருப்பி அனுப்பப்பட்டாலும் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அனைத்து அடிப்படை உரிமைகள், அரசியல் உரிமைகளோடும், கௌரவத்தோடும் வாழ முடியும் என்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டாலே திருப்பி அனுப்பப்படுவது குறித்த அவர்களின் அச்சம் விலகும்.

உண்மையில் பலருக்கும் புலம் பெயர்ந்த நாட்டு வாழ்வைவிட தமது சொந்த நாட்டு வாழ்வே மனநிறைவானதாக உள்ளது. அந்த மன ஏக்கத்துடனேயே அவர்கள் வெளிநாடுகளில் வாழ்வைக் கழிக்கிறார்கள். அந் நாடுகளின் கலாசாரமும் பழக்க வழக்கங்களும் ஒத்துவரக்கூடியதாக இல்லை.

இருப்பினும் அங்கு வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் முழு மனதுடன் திரும்பி வரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே அவர்களை அடைக்கலம் ஏற்றிருக்கும் நாடுகளதும், இலங்கைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்துள்ள நாட்டினதும் ஒரு நோக்கமாக இருக்க வேண்டும். மாறாக தகுந்த சூழ்நிலை உருவாக முன்னரே திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற மனக்கிலேசத்தை ஏற்படுத்துவதல்ல. அவ்வாறில்லாவிடில் இப் பேச்சுவார்த்தைகளின் பலிக்கடாவாகவே புலம் பெயர்ந்தவர்கள் ஆகிவிடுவார்கள். ■

**-நரன்-**

## செய்திச் சிதறல்

★ ஜனாதிபதி சந்திரிக்கா மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ளார். அவ்வாறு ஜனாதிபதியோ, பிரதமரோ அமைச்சர்களோ நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லும் போது தமக்குப் பதிலாக வேறொருவரை நியமித்துவிட்டுச் செல்வது வழக்கம். ஆனால் ஜனாதிபதி சிகிச்சைக்குச் செல்லும் போது பதில் ஜனாதிபதியாக எவரையும் நியமிக்கவில்லை. பொது நிர்வாகத்துறை அமைச்சர் இரத்தினசிறி விக்கிரம நாயக்காவை ஜனாதிபதி மாளிகை அலுவலக நடைமுறைகளை மேற்பார்வையிடுமாறும் அமைச்சரவை கூட்டங்களுக்கு தலைமை தாங்குமாறும் அறிவித்துள்ளார். முப்படைகளின் தலைவர் என்ற பதவி ஜனாதிபதிக்குரியதாகவே இருந்தது. ஆனால் அப்பதவிக்கு எவரையும் திருமதி சந்திரிக்கா நியமிக்கவில்லை. என்றும் இதனால் உயர் மட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது என்றும் ஊடகங்கள் கூறின. ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த பதில் பிரதமராக நியமிக்கப்பட்டார் என்று திங்கட்கிழமை அறிவித்தது.

★ மார்ச் மாதம் 26ம் திகதி அன்று விடுதலைப் புலிகள் தமது ஓயாத அலைகள் மூன்றாம் கட்ட போரினை தொடக்கியிருந்தனர். ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுவதன் மூலம், யாழ் குடா நாட்டை மீண்டும் தம் வசமாக்க அவர்கள் எடுத்த முயற்சியை தடுக்க படையினர் எதிர் தாக்குதலை நடத்தினர். இரு தரப்பிலும் ஏராளமான உயிர்கள் பலியாகின. அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் பலத்த துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இலண்டனில் இருந்தவண்ணம் ஜனாதிபதி பல ஆணைகளைப் பிறப்பித்தார். இதில் இராணுவ உயர் மட்டத்திலும் பல திடீர் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ இராணுவத்தின் தளபதியாக ஏற்கனவே பதவி வகித்த ஜெனரல் ரோஹன் தலுவத்த பதவியில் இருந்து ஓய்வெடுத்ததும், கடந்த வருடம் பாதுகாப்புப் படையினரின் பிரதம தலைவர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. அவர் பதவியேற்று இரு வாரங்களுக்கிடையில் அப்பதவியில் இருந்து விலக்கப்படுவதாக அரசாங்க வர்த்தமானி அறிவித்திருந்தது. இப்பொழுது கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மீண்டும் அதே பதவி தலுவத்தைக்கு வழங்கப்பட்டிருப்பதாக திடீர் அறிவிப்பு வெளியானது. இதேபோல் இராணுவ உயரதிகாரிகள் பலர் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டது பலருக்குப் பெரும் வியப்பையளித்திருக்கிறது.

★ வெளியுறவுத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டில் தங்கி மருத்துவ சிகிச்சைப் பெற்றுவருகிறார். அண்மையில் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக தலைவருமான வை.கோபாலசாமி ஜெனீவாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி தெரிவித்த கருத்துக்களை ஆட்சேபித்து இந்தியப் பிரதமர் வாஜ்பேயி அவர்களுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதி சந்திரிக்கா கலந்து கொண்ட ஒரு பிரசாரக் கூட்டத்தில் அவரைக் கொலைசெய்ய தற்கொலைக் குண்டுதாரி ஒருவரை புலிகள் ஏவி விட்டிருந்தனர். இந்த நடவடிக்கையை ஆதரித்தே வை.கோ ஜெனீவா கூட்டத்தில் உரை நிகழ்த்தினாராம். அமைச்சர் கதிர்காமர் தன்மீது அபாண்டம் சுமத்துகிறார் என்று வைகோ சென்னையில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

★ இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான பதினொரு பேராயர்கள் ஒன்று சேர்ந்து சமாதான யாத்திரை ஒன்றினை மேற்கொள்வதற்கு ஆயத்தம் செய்துள்ளனர். மேற்கு இந்தியாவில் உள்ள கோவா பிரதேசத்தில் ஆர்ச். ஜோஸப் வாஸ் அடிகளாரின் தேவாலயத்துக்கு மே மாதம் மூன்றாம் திகதி முதல் பதினொராம் திகதி வரை சென்று விசேட பூசை, பிரார்த்தனைகளை நடாத்தவிருக்கின்றனர். இலங்கையில் மீண்டும் சமாதானம் நிலைபெற வேண்டும், என்று இப் பேராயர்கள் வேண்டிக்கொள்ளவிருக்கிறார்கள். ஜோஸப் வாஸ் அடிகளார் இந்த நாட்டில் ஒல்லாந்தருடைய ஆதிக்கம் நிலவிய காலத்தில் இங்கு வந்து இலங்கையின் மேன்மைக்காக பல ஆராதனைகளும் நடத்தியவர். கத்தோலிக்க மதத்தில் பற்றுடைய மக்கள் ஜோஸப் வாஸ் அடிகளாரை தம் இரட்சகர் என்று கருதுகிறார்கள்.

# -ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

பிரேமதாஸா
ஆட்சிப் பொறுப்பைக்
கையேற்ற போது
ஒரே சமயத்தில்
பல முனைகளிலிருந்து
மிக வலிய சவால்களை
எதிர்நோக்க வேண்டியவராக
இருந்தார்.

அவருக்கு முன்னர்
ஆட்சியில்
மிக சௌகரியமாக
அனுபவிக்க முடிந்தவரை
அனுபவித்து விட்டே ஜே. ஆர்
பிரேமதாஸாவிடம்
அதைக் கையளிக்கும்போது
இரண்டு பெரும்
அம்சங்களை
அவரது
இரு தோள்களிலும்
சுமத்தி விட்டு
விலகிச் சென்றார்.

ஒன்று அளவுகணக்கற்ற
அதிகாரம்.
இரண்டாவது,
இனிமேல் இல்லையென்ற அளவு
பிரச்சனைகள்.

ஜே. ஆர்,
பிரச்சனைகள் தோன்றியபோதெல்லாம்
அவற்றைச் சமாளிக்க
தனது அதிகாரங்களைக்
கூட்டிக்கொண்டே
சென்றார்.

அதிகாரத்தைக் கூட்ட
அவர் எடுத்த
அடாவடித்தனமான
முயற்சிகளே
இன்னும் இன்னும்
பிரச்சனைகளைக்
கூட்டிச் சென்றன.

உதாரணத்துக்குக்
கூறுவதானால்,
பொதுத்தேர்தலை நடத்தினால்
ஜே.வி.பி.யினர்
பாராளுமன்றத்துக்குள்
நுளைந்து விடுவார்களென
சர்வஜன வாக்கெடுப்புக்கூடாக
பொதுத் தேர்தலை ரத்துச்செய்து,
ஆட்சிக்காலத்தை நீடித்தார்.
ஆனால்,
அதன் விளைவு
மறுதலையாக-
பாரிய ஆயுதப்புரட்சியை
தென்பகுதியில்
கிளறிவிட்டது.

இதேபோல்,
தமிழ் மக்கள் மத்தியில்
எழுந்த உரிமைப்போராட்டத்தை
நசுக்க
பாரிய இனக்கலவரத்தை
தனது அரசாங்கத்தின் தலைமையில்
நடத்திய ஜே. ஆர்.
போரா சமாதானமாவெனச்
சவால் விட்டார்.

ஆனால், அவர்
அடக்கி ஒடுக்கிவிட நினைத்த
அந்தப் போராட்டம்
அரசாங்கத்தையே திணறடிக்குமளவு
விஸ்வரூபமெடுக்கவே
இறுதியில்
வழிகோலியது.

இவ்வாறு
ஜே. ஆரின்
தான்தோன்றித்தனமான
சர்வாதிகாரத்தால்
பூதாகரமாகிவிட்ட
பிரச்சனைகள் எதையும்
தீர்த்து வைக்காமல்
அப்படியே
பிரேமதாஸாவிடம்
பாரப்படுத்திவிட்டு
ஜே. ஆர். ஒய்ந்துவிட்டார்.

ஆனால்,
தனக்காக உருவாக்கிக்கொண்ட
நிறைவேற்று அதிகாரம்கொண்ட
ஜனாதிபதிப் பதவியென்னும்
எல்லையற்ற அதிகாரத்தையும்
பிரேமதாஸாவுக்கு
கிடைக்கச் செய்தார்.

பிரேமதாஸாவிடம்
அதிகாரம் வந்தபோதும்
தன்னை ஸ்திரப்படுத்த வேண்டிய
அவசியமொன்றே
முதன்மையான
விடயமாக எழுந்தது.



அதிகாரத்தைப்
பெற்றதோடல்லாமல்
அதைக் காப்பாற்றி
நிலைத்து நீடிக்கவைக்க
சரியான மார்க்கமொன்றை
வகுக்க வேண்டி இருந்தது.

அதனால்,
ஜே. ஆரின் வழிமுறைகள்
ஒவ்வொன்றையும்
கேள்விக்குள்ளாக்க வேண்டிய
அவசியம் ஒன்று
அவருக்கு ஏற்பட்டது.

அதனால் அவர்
ஜே. ஆரின்
தந்திரோபாயங்களையும்
வழிமுறைகளையும்
உதறித் தள்ளிவிட்டு
தனக்கான மார்க்கத்தைப்
புதிதாக வகுத்துக்கொண்டார்.

அவை பலவிடயங்களில்
ஜே. ஆரின் அணுகுமுறைக்கு
முற்றிலும் முரணானதாகவும்
காணப்பட்டன.

இது கண்டு
ஜே. ஆரே, திகைத்துவிட்டார்.
ஆனாலும், அவர்
பிரேமதாஸாவின்
நடவடிக்கைகளில்
குறுக்கிடவோ,
அபிப்பிராயம் கூறவோ
இல்லை.

பிரேமதாஸா
ஆட்சிபீடம் ஏறியபோது
ஒருபுறம்
தமிழீழ விடுதலைப் போராட்டம்;
மறுபுறம் இந்தியத் தலையீடு;
இன்னொருபுறம்
ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சி.
இவற்றைவிட
தனது தலைமைக்குச் சவாலான
விஜய குமாரதுங்க போன்ற
ஜனரஞ்சகத் தலைவர்களின்
வளர்ச்சி;
இதுவும் போதாதென்று
ஐ.தே.காவுக்குள்
அடுத்த கட்ட
மூத்த தலைவர்களின்
தனக்கெதிரான
அணிதிரள்வு.

இவையாவற்றையும்
சமகாலத்தில் கையாளத்
தகுந்த ஒரு
தந்திரோபாயத்தை
வகுக்க வேண்டியிருந்தது.

அவரைப் பொறுத்தவரையில்
உடனடி அபாயமாக
உறுத்திய பிரச்சனைகள்
மூன்று!

ஒன்று-
இந்தியாவின் தலையீடு;
மற்றையது-
ஜே.வி.பி. கிளர்ச்சி;
அடுத்தது-
அவருக்கு எதிராக எழுந்த
உட்கட்சிப் பிரச்சனை.

இயல்பிலேயே
இந்திய எதிர்ப்பாளராகத் திகழ்ந்த
பிரேமதாஸாவுக்கு
அவரின் கையை மீறி
ஜே. ஆர். திறந்துவிட்ட
கதவினூடாக
உள்ளே நுளைந்து விட்ட
இந்தியாவின் நிர்ப்பந்தம்
சகிக்க முடியாத-
தன்மானத்துக்கான சவாலாக
எழுந்து விட்டது.

பிரேமதாஸா
ஜே. ஆர். போலன்றி
ஜனரஞ்சக உணர்வலைகள் பற்றி
அதிக அக்கறை கொண்டவர்.
அதன் நொடியை முகர்ந்தே
அதற்கமையத்
தனது செல்வாக்கைப்
பேணுவது அவசியமென
உணர்ந்தவர்.

சிறிமாவோ ஆட்சியின்
போது
தலைவிரித்தாடிய
பஞ்சத்தின் எதிர்ப்பலைகள்
அள்ளிக் கொடுத்த
அதிஷ்டமே
ஜே. ஆருக்குக் கிடைத்த
ஏகபோக ஆட்சி.

அதுபோன்ற அதிஷ்டங்கள்
திரும்பவும் கிடையாதென்பதால்
தன்னை ஒரு
மக்களாதரவு கொண்ட
தலைவனாக
உருவாக்கிக்
கொள்ளவேண்டுமென்பதில்
அவர் கவனமாயிருந்தார்.

இலங்கையில் தோன்றிய
சிங்கள இனவாதம்
அடிப்படையில்
இந்திய எதிர்ப்பைக்
கொண்டிருப்பது
பிரேமதாஸாவுக்கு
நன்றாகவே தெரியும்.

இந்த உணர்வைப்
பயன்படுத்திக் கொள்வதே
சிங்கள மக்களின்
பாதுகாவலனாகத்
தன்னை வெளிக்காட்ட
அவசியமானதென்று
பிரேமதாஸா கருதினார்.


இதனால் எழுந்ததே
அவரது
இந்திய எதிர்ப்பு சுபாவம்.

இதனை வெளிக்காட்டவே
இலங்கை-இந்திய
ஒப்பந்தத்திலும் கூட
பங்குபற்றாமல்
பகிஷ்கரிப்புச் செய்தார்.

ஆனாலும்கூட
அவரது வழிக்குப்
பாரிய சவால்
இன்னொருபுறத்தில் எழுந்தது.

அதுதான்
ஜே.வி.பி. தூக்கிய
இந்திய எதிர்ப்பு வாதம்.

இந்தியாவுடன்
ஒப்பந்தம் செய்துகொண்டு,
இந்தியப்படைகளை
நாட்டுக்குள் வைத்துக்கொண்டு
அவர்கள் முன்னால்
இலங்கைப் படைகளைக்
கையாலாகாதவர்களாக்கிக் கொண்டு,
பொலிஸாரும், படையினரும்
பல இடங்களில்
அவமானப் பட்டுக் கொண்டு,
வடக்குக் கிழக்கிலுள்ள
சிங்களக் குடியேற்றங்களில்
சிங்கள மேலாதிக்கத்தையும்
அதற்கான அரச பாதுகாப்பையும்
அச்சுறுத்தலுக்கு ஆளாக்கிக் கொண்டு
இந்திய எதிர்ப்பாளராகத்



தன்னை நிலைநிறுத்துவது
பிரேமதாஸாவுக்கு
பெரும் சிரமமாயிருந்தது.

ஆனால்,
அரசுக் கெதிராகக்
கிளர்ச்சி செய்த ஜே.வி.பிக்கு
மேற்படி அம்சங்களையும்
குற்றச்சாட்டாகச் சுமத்தியபடி
இந்திய எதிர்ப்புக் கோஷத்தை
உயர்த்திப்பிடிப்பது
சுலபமாக இருந்தது.

இதனால்,
இந்தியாவின் சவாலையும்
ஜே.வி.பி.யின் சவாலையும்
எதிர் கொள்வதற்கு
இந்தியாவை வெளியேற்றுவது
தலையாய விடயமென
பிரேமதாஸாவுக்குப் பட்டது.

தலையை அடகுவைத்தாவது
இதனைச் செய்ய
பிரேமதாஸா துணிந்தார்.
ஆம், அதற்காகத்
தலையை அடகுவைத்தார்
புலிகளிடம்!
ஆனால், இறுதியில்
தலையையே இழந்தார்.

(இன்னும் நகரும்)

## அண்டை மண்டலத்தில்....

## கிரிக்கெட் சூதாட்டம் ஒரு மாயையா?

## க்ரோன்யே ஆட்டம் க்ளோஸ்!

க்ரோன்யே துவக்கிய புயல் ஓய்வதாக இல்லை. தனக்கும் சூதாட்டம் நடத்தும் புக்கிகளுக்கும் தொடர்புண்டு. அவர்களிடம் பணம் பெற்றேன் என்று தென்னாபிரிக்க கேப்டன் ஒத்துக்கொள்ள, கிரிக்கெட் உலகமே ஆடிப்போயிருக்கிறது. ஆளாளுக்கு தங்களுக்கு வேண்டாதவர்மீது சேற்றை அள்ளி வீசுகிறார்கள்.

இந்திய கிரிக்கெட் நிர்வாகக்குழுவின் உறுப்பினர் ஒருவர் சூதாட்டம் நடத்துவோரின் லாபத்தை உத்தேசித்து ஒவ்வொரு பந்தயத்தின் முடிவும் முன்கூட்டியே தீர்மானிக்கப் படுகிறது என்று கூறியிருக்கிறார். ஆதாரத்தை கேட்டால் தக்க சமயத்தில் அளிப்பேன் என்கிறார்.

மற்ற நிர்வாகிகளோ அந்த உறுப்பினரில் விடுகிறார், தனக்கு எந்த பதவியும் கிடைக்காத காரணத்தால் இப்படியெல்லாம் உளறுகிறார் என்கிறார்கள்.

கிரிக்கெட் வீரர்களோ தாங்கள் சத்திய சந்தர்கள், சூதாட்டம் என்ன என்றாலே தங்களுக்குத் தெரியாது, தங்கள் நாட்டின் பெருமைக்காக தங்கள் உயிரையே கொடுப்பவர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள்.

இங்கிலாந்து நாட்டில்கூட லூயிஸ் என்ற கிரிக்கெட் வீரர் மற்றவர்களெல்லாம் ஏதோ ஒரு கட்டத்தில் பணம் வாங்கியிருக்கிறார்கள் என்று பேட்டி கொடுத்திருக்கிறார். யார் உண்மை பேசுகிறார்கள், யார் வாணவேடிக்கை காட்டுகிறார்கள்? சந்திரபாபு ஏதோ ஒரு திரைப்படத்தில் பாடுவது போன்று, 'ஒண்ணுமே புரியல்லே உலகத்திலே, என்னைப் போலே ஏமாளி எவனும் இல்லையே' என்று கிரிக்கெட் ரசிகர்களெல்லாம் புலம்பவேண்டியதுதான். கிரிக்கெட் என்பது ஜென்டில்மென்களின் விளையாட்டு என்று சொல்லப்பட்டது ஒரு காலத்தில். ஜென்டில்மேன் என்பதற்கு நாகரீகமானவர் என்பது மட்டுமல்ல, பண்பாடுடையவர் என்ற பொருளும் உண்டு.

கிரிக்கெட்டில்தான், அடிதடி, கலாட்டா, ஏமாற்றல் போன்ற தவறான அணுகுமுறை கிடையாது. மற்றெல்லா விளையாட்டு வீரர்களைவிட கிரிக்கெட் விளையாடுவோரே மிகவும் கண்ணியமான முறையில் ஆடுவர் என்று பல காலம் நம்பப்பட்டு வந்தது. இட் ஈஸ் நாட் கிரிக்கெட் (இது கிரிக்கெட் அல்ல) என்றவொரு சொற்றொடரே உண்டு. அதற்குப் பொருள் குறிப்பிட்ட செயல் நேர்மையானதல்ல என்பதுதான்!

இப்பொழுது என்ன ஆயிற்று பாருங்கள்? இன்றைய கிரிக்கெட் உலகே இந்நாள் வரை மதித்துப் போற்றிய ஹான்ஸி க்ரோன்யே இந்திய விஜயத்தின்போது, "நான் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டேன். சூதாட்டம் நடத்துவோருக்கு தேவைப்பட்ட சில தகவல்களை அளிப்பதற்காக பணம் பெற்றுக் கொண்டேன்," என்று வாக்குமூலம் கொடுத்து விட்டார். என்னவொரு கொடுமையான வீழ்ச்சி!

இராமாயணத்தில் ஒரு கதையுண்டு. இராமபிரான் தனது அம்பினை பூமியில் நிறுத்தி வைக்கும் போது, கவனக்குறைவாக ஒரு தேரையின் முதுகில் குத்திவிடுகிறார். ஆனால் அது அலறவில்லையாம். தவறையுணர்ந்து, "தேரையே, ஏன் மௌனமாக இருந்தாய், குத்தியவுடனே அலறியிருந்தால் நான் பிடுங்கியிருப்பேனே," என்று ராமர் கூற, அதற்கு தேரை பதிலளித்ததாம் பாதிக்கப்பட்டோர், "ராமா எங்களைக் காப்பாற்று என்று தானே முறையிடுகிறார்கள். ராமனே என்னை தாக்கும்போது, யாரிடம் முறையிடுவது?" அதைப்போல உலக கிரிக்கெட் வீரர்களுக்கெல்லாம் முன்மாதிரி என்று எல்லோராலும் பாராட்டப்பட்ட க்ரோன்யேவே இவ்வாறு தன்னை விற்றுவிட முன்வந்தால், வேறு யாரிடம் நேர்மையினையும், கண்ணியத்தினையும் எதிர்பார்க்க முடியும்?

க்ரோன்யே மாட்டிக்கொண்டதே ஒரு சுவையான கதை. இந்தியாவில் சில பெரிய பிஸினஸ் புள்ளிகள் துபாயில் வசிக்கும் சில தாதாக்களால் பிளாக்மெயில் செய்யப்படுவது பற்றி புகார் கொடுக்க, அவர்களுக்கு வரும் டெலிஃபோன் கால்களை பொலீசார் ஒட்டுக் கேட்க, சம்பந்தப்பட்ட ஒருவரின் செல்ஃபோனில் க்ரோன்யேவிற்கும், ராஜேஷ் கால்ரா என்ற ஒரு புக்கிக்கும் இடையே நடந்ததொரு உரையாடலும் பதிவாகியது.



இத்தனை ரன்களுக்குள் நாங்கள் அவுட் ஆகிவிடுவோம், கிப்ஸ் இவ்வளவுதான் ரன் எடுப்பார், இந்தியாவை ஜெயிக்கவிட்டு விடுவோம் என்றெல்லாம் க்ரோன்யே பேசியது பதிவாகியிருப்பதாக புதுடெல்லி போலீசார் கூறுகின்றனர். குறிப்பிட்ட அந்தப் பந்தயத்தில் இந்தியா தோற்றுப் போனது, கிப்ஸ் மட்டும் க்ரோன்யே கூறியிருந்தபடி இருபது ரன்களுக்குள் அவுட் ஆனார்.

இதைத்தவிரவும் பல்வேறு உரையாடல்களும் பதிவாகியிருப்பதாகப் போலீசார் கூறுகிறார்கள். முதலில் எதுவுமே நடக்கவில்லை என்று சாதித்த தென்னாபிரிக்க கேப்டன் பின்னர்தான் பணம் வாங்கியதை ஒப்புக் கொண்டார். பதிவு செய்த உரையாடல்கள் அப்படியே வெளியிடப்பட்டு விடக்கூடும் என்றஞ்சியே அவர் அவ்வாறு ஒப்புக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகிகளுக்கு தலைசுற்றுகிறது. க்ரோன்யேவா இப்படி? அதிர்ச்சியிலிருந்து அவர்கள் மீள பல காலமாகும். இப்போதைக்கு அவர் காப்டன் பதவியிலிருந்தும், குழுவிலிருந்தும் நீக்கப் பட்டிருக்கிறார்.

இன்னமும் "நான் பணம் வாங்கியது

**கானகன்**

உண்மைதான். ஆனாலும், எனது நாடு தோல்வியுறச் செய்யுமாறு நடந்து கொள்ளவில்லை. மற்ற எந்த வீரரையும் பணத்துக்காக அவுட் ஆகச் சொல்லித் தூண்டவில்லை. எப்போதும் வெற்றிபெறுவதற்காகவே விளையாடியிருக்கிறேன்," என்றுதான் அவர் கூறிவருகிறார். எந்தக் காரணங்களுக்காகவோ புக்கிகளிடம் பணம் வாங்கியிருப்பதாக ஒத்துக் கொண்டபின், அவருடைய மற்ற கூற்றுக்களை எவர் நம்புவர்? அவரது விளையாட்டுத் திறனுக்காக, அவருடைய புகழுக்காக விளம்பரக்காரர்கள் அவரைத்தேடி ஓடிவருகிறார்கள், இன்னும் ஒரு சில ஆண்டுகள் கேப்டனாகவே அவர் நீடிக்கக்கூடிய வாய்ப்பு, இப்படி கோடி கோடியாக பணம் குவிந்து கொண்டிருக்கும் வேளையில், அற்பத்தனமாக, சில லட்ச ரூபாய்களுக்காக, சூதாடிகளுடன் சேர்ந்து கொள்வானேன்? இப்பொழுது அவரது புகழ், கௌரவம், எதிர்காலம் எல்லாமே நாசமாகி விட்டதே!

எல்லாமே பணம்தான் என்றாகிவிட்ட முதலாளித்துவ சமுதாயத்தில் எதுவும் நடக்கலாம் என்கின்றனர் சிலர். பூர்ஷ்வாக்களுக்கென்று, அதாவது படித்த, மேல்தட்டு வர்க்கத்தினருக்கென்று சில நியமங்கள், சில ஒழுக்கங்கள் இருப்பதாக அல்லவா எல்லோரும் நம்பிவந்திருக்கின்றனர் இது வரை. எல்லாமே கற்பனையா என்ன? சூதாட்டத்திற்கு எப்போதுமே ஒரு கவர்ச்சியுண்டு. குறுக்குவழியில் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒருபுறம், நாம் கணிப்பது சரியாகிறதா என்று சோதனை செய்து கொள்ளும் ஆர்வம் இன்னொருபுறம். எதைப் பற்றி வேண்டுமானாலும் பந்தயம் கட்டிக்கொள்ளலாம், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சாலையைக் கடக்கவிருக்கும் நாயின் வண்ணம் என்னவாகயிருக்கும் என்பதுபற்றிக்கூட.

கிரிக்கெட் பந்தயங்கள் குறித்து சூதாட்டம் நடப்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்தான். ஒவ்வொரு உலகக்கோப்பையின் போதும் என்னுடைய அலுவலகம் அமைந்துள்ள வணிக வளாகத்தில், யார் வெல்வார், யார் தோற்பார், யார் எவ்வளவு ரன் எடுப்பார்கள் என்பதுபற்றியெல்லாம் ஆயிரக்கணக்கில் பந்தயம் காட்டிக்கொள்வது வழக்கம். சென்னையின் ஓர் இடத்தில், ஒரு குறிப்பிட்ட புக்கியின் கடையில் மட்டும் அத்தனை ரூபாய்கள் கைமாறுமானால், இந்திய அளவில், உலக அளவில் எத்தனை டாலர்கள் கைமாறும் என்பதைக் கற்பனை செய்துகொள்ளலாம்.

(தொடர்ச்சி 18ம் பக்கத்தில்....)

ஐந்து வருடங்களுக்கு முன்னர் 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, யாழ்குடாநாட்டை ஆயுதப்படைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தன.

பலாலி இராணுவமுகாமில் இருந்து முன்னேறிய படையினர் ஆனையிறவுவரை தொடர்ந்து முன்னேறித் தமது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தினர். ஆனையிறவுக்கப்பால் கிளிநொச்சி வரை கூட படை நகர்வு ஏற்பட்டிருந்தது.

ஆனால் தற்போது நிலைமை முற்றிலும் மாற்றமடைந்து, யாழ்குடாநாட்டில் ஆயுதப் படைகளின் ஆளுமை ஆட்டங்காணும் ஒரு சூழ்நிலைக்கே தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை இராணுவரீதியாக குடாநாட்டின் வடமுனையில் பலாலித்தளமும், தெற்கே ஆனையிறவுப்படைத்தளமும் கேந்திரமுக்கியத்துவம் மிக்கவையாகவே இருக்கின்றன.

விமானத்தளத்துடன் அமைவிடத்தைக்

1991ம் ஆண்டில் கூட தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனையிறவுத்தளம் மீது தாக்குதல் தொடுத்திருந்தனர். ஆனால் அத்தாக்குதலை ஆயுதப்படையினர் முறியடித்திருந்தனர்.

அச்சமயம் இன்றிருப்பது போல இராணுவம் யாழ்குடாநாட்டில் பெருமளவு பலத்துடனிருக்கவில்லை. பலாலியிலிருந்து இராணுவம் வெளியேறமுடியாத நிலையே காணப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணத்தின் டச்சுக் கோட்டைக்குள் குடியிருந்த இராணுவம் கூட புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த ஐந்து வருடகாலத்தில் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்குடாநாட்டில் ஆயுதப்படையினர் பலமாகவே பிரசன்னமாகியிருந்தனர்.

ஆனையிறவுக்குத் தெற்கே கிளிநொச்சிப்பகுதி புலிகளினால் மீளவும் கைப்பற்றப்பட்டபோதிலும், ஆனையிறவுக்குவடக்கே பலாலியிலிருந்து தரைமார்க்கமான விநியோகப்பாதையைக்

இயக்கத்தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒவ்வொரு ஆண்டிலும் மாவீரர் வாரத்தின்போது மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசியல் பேச்சுக்களுக்குத்தாம் தயாராக இருப்பதாகவே கூறிவரக்காணப்படுகின்றார்.

ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் இது குறித்து உரிய விதத்தில் கவனத்திலெடுப்பதைவிடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டே வந்திருந்தனர்.

வடக்கு-கிழக்கு நிலபரத்தைப் பொறுத்தவரை ஐந்தாண்டுகளுக்கு முன்னர் சூரியக்கதிர் இராணுவநடவடிக்கை இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனையடுத்து புலிகள் யாழ்குடாநாட்டிலிருந்தும் வெளியேறி வன்னிப் பிரதேசத்தைத் தமது தளமாக முழு அளவில் மாற்றியமைத்திருந்தனர்.

இதன் பின்னரே புலிகள் பிரமிக்கத்தக்கவகையில் தாக்குதல்கள் பலவற்றை நடத்தியிருந்தனர்.

## அலசுவது - இராஜதந்திரி

ஆட்சியாளர்கள் இருந்தனர்.

அரசதரப்பினரின் இப்போக்கு, யுத்தத்தின் உக்கிரத்தன்மையை நன்கு அறிந்திருந்தும் தொடர்ந்து இராணுவ செயற்பாடுகளில் அவர்கள் நம்பிக்கைவைப்பதையே வெளிக்காட்டியிருந்தது.

ஆனால் ஆனையிறவில் தற்போது நிகழ்ந்துள்ள யுத்தமும், அதனால் ஏற்பட்டுள்ள இழப்புக்களும் இராணுவ நடவடிக்கைகள்குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைக்கே சந்திரிகா அரசை நிர்ப்பந்தித்து விட்டுள்ளது.

இராணுவத்தில் கூடுதல் பதவிவகித்த அதிகாரிகள் பலர் ஒரே தடவையில் உயிரிழந்துள்ள ஒரு கடும் மோதலாகவே ஆனையிறவுச் சமர் விளங்கியிருந்தது.

ஆனையிறவில் கொல்லப்பட்ட

வடக்காக விரிவடையும் சூழ்நிலைகளே பலமாக இருக்கின்றன. இதன்காரணமாக யாழ்குடாநாட்டில் சாதாரண பொதுமக்களும் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள் என்றே எதிர்ப்பார்க்க முடியும்.

ஏற்கனவே ஆனையிறவுக்கு வடக்கே குடியமர்ந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் யுத்த நெருக்கடிகளுக்குள்ளாகியிருந்தனர்.

எனவே யுத்தம் தொடர்ந்து இடம்பெற்று வடக்கே மேலும் விரிவடையும் பட்சத்தில் யாழ்குடாநாட்டு மக்கள் அனைவருமே நிர்க்கதிக்குள்ளாக வேண்டியதாகவே இருக்கும்.

இராணுவத்தைப் பொறுத்தவரை ஒரு தள்ளாட்டமான நிலை யாழ்குடாநாட்டில் நிலவுகின்றது.

# அரசியல் தீர்வை வலியுறுத்தும்

# ஆனையிறவுச் சமர்

கொண்டிருக்கும் பலாலி இராணுவ மையம் யாழ்குடாநாட்டில் இராணுவநடவடிக்கைகளை நிர்ணயிக்கும் முக்கிய ஸ்தானமாக இருக்கின்றது. அத்துடன் தென்னிலங்கைக்கும் வடபகுதிக்குமிடையே விநியோகங்கள் உட்பட அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தொடர்புபடுத்தும் இடமாகவும் பலாலியே விளங்குகின்றது.

மறுபுறத்தே யாழ்குடாநாட்டின் புவியியல் அமைப்பை எடுத்து நோக்கும் பட்சத்தில், ஆனையிறவுப் பகுதியே குடாநாட்டின் கழுத்துப்புறமாகவும், தென்னிலங்கையிலிருந்து குடாநாட்டினுள் செல்லும் நுழைவாயிலாகவும் அமைந்திருக்கின்றது.

இந்நிலையில் சூரியக்கதிர் இராணுவநடவடிக்கையின் போது யாழ்குடாவின் வடமுனையான பலாலியிலிருந்து தென்முனையான ஆனையிறவுவரை படையினர் தம்மை விஸ்தரித்திருந்தனர்.

ஆனையிறவு முகாம் பன்னெடுங்காலமாகவே இருந்துவருகின்றது. ஆனையிறவில் காணப்படுகின்ற டச்சுக்காலத்தைச் சேர்ந்த பஸ்குலா என்றழைக்கப்படும் கோட்டையையும் அதனை அண்டிய பிரதேசத்தையுமே இராணுவம் பெரியதோர் தளமாக மாற்றியமைத்திருந்தது.

கடந்த சுமார் பன்னிரெண்டு வருடகாலமாக ஆனையிறவு ஊடாகத் தரைவழிப் போக்குவரத்து, மற்றும் புகையிரதப் பயணம் என்பவை தடைப்பட்டுள்ளன. இதற்கு ஆனையிறவுத்தளம் இராணுவ ரீதியாக முக்கியத்துவம் பெற்றதே முக்கிய காரணமாகும்.

ஆனையிறவில் தரைவழியூடாகச் செல்லும்போது ஏற்படக்கூடிய கெடுபிடிகளுக்கு அஞ்சியே யாழ்குடாநாட்டு மக்கள் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆனையிறவை அண்டியுள்ள கிளாலிக் கடலேரியூடாகவும் பயணஞ்செய்தனர். இந்த நீரேரிப்பயணம் மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் இரவு பகலாக நடந்திருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே வடக்கே இராணுவத்தினரின் அதிமுக்கிய தளமாக இருந்த ஆனையிறவு தற்போது ஆட்டம் கண்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.



கொண்டிருந்ததோடு ஆயுதப்படையினர் குடாநாட்டினுள் தமது நிலைகளைப் பலப்படுத்தியவர்களாகவே இருந்தனர்.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது யுத்த தந்திரோபாயங்களை மாற்றியமைத்து ஆனையிறவுக்கு வடக்கே நிகழ்த்திய தாக்குதல் யாழ்குடாநாட்டின் இராணுவநடவடிக்கைகளைக் கேள்விக்குறியாக்கிவிட்டுள்ளது.

ஆனையிறவுத்தளம் தற்போது ஆட்டங்கண்டுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து மேலும் வடக்கே முன்னேறுவர்.

ஏற்கனவே வடமாராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் புலிகளது தாக்குதல்கள் அணிகள், கிளிநொச்சியூடாக வன்னியில் புலிகளது கட்டுப்பாட்டு பிரதேசங்களுடன் தொடர்புகளை விரிவுபடுத்தி தமக்கென வன்னியிலிருந்து விநியோகப்பாதைகளை உருவாக்குவார்கள் என்றே கருதமுடியும்.

இராணுவரீதியான மேலாதிக்கத்தைப் பெறமட்டும் புலிகள் ஆனையிறவுப்பகுதியில் தாக்குதலை நடத்தவில்லை. அரசியல் ரீதியாகவும் தம்மைப் பலப்படுத்தும் விதத்திலேயே ஆனையிறவில் அவர்கள் கைவைத்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

சந்திரிகா அரசைப் பொறுத்தவரை கடந்த ஐந்தாண்டுகளில் வடக்கு-கிழக்குப் பிரச்சினையை உரிய வகையில் அரசியல் ரீதியாகக் கையாளாமல் தட்டிக்கழித்து வந்ததையே காணமுடிந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வன்னிப் பிரதேசங்களில் புலிகள் நடத்திய தாக்குதல்கள் இதற்கு நல்ல உதாரணமாக இருந்தன.

இந்நிலையில் அரச தரப்பினர் புலிகள்குறித்த தமது கணிப்பீட்டை மாற்றி அரசியல் ரீதியான பேச்சுக் களைத்துரிதப் படுத்துவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் தொடர்ந்தும் இராணுவ அழுத்தங்களிலேயே ஆட்சியாளர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அண்மையில்கூட நவீன ஆயுத தளபாடங்களை வாங்குவதுகுறித்தும், ஆயுதப்படைக்கு மேலும் ஆயிரக்கணக்கில் ஆட்களைத் திரட்டுவதுபற்றியுமே ஆட்சியாளர்கள் தீர்மானங்களை எடுத்திருந்தனர்.

இதுதவிர வெளிப்படையாகவே யுத்தத்தைத் தொடரும்படி கூச்சலிட்டு, ஆர்ப்பாட்டஞ் செய்த பேரினவாதிகள் குறித்து பாராமுகமாகவும்

பிரிகேடியர் போஸி பெர்னாண்டோ சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையிலும் பங்குபற்றியதோடு, ஆனையிறவுப்பகுதிக்குப் பொறுப்பாகவும் இருந்துள்ளார்.

இவருடன் கேர்ணல் தரத்தில் இருந்த வேறு மூவரும் ஆனையிறவில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த உயரதிகாரிகளின் மரணங்கள் மட்டுமல்ல, பல நூற்றுக்கணக்கில் சாதாரண சிப்பாய்களும் ஆனையிறவு மோதல் ஆரம்பமான நாள்முதல் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம், பலவீனங்கள் குறித்து ஆய்வு செய்யும் நடவடிக்கைகளை தொடர்வதைவிடுத்து. அரசியல் ரீதியான பேச்சுக்களை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டியதே அவசியமானதாகின்றது.

யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை ஆனையிறவுப்பிரதேசத்தில் சூடுபிடித்திருந்த யுத்தம் மேலும்

ஒரு வாரத்துக்குமுன்னர் பலாலித்தளத்திலிருந்த சிப்பாய்கள் சித்திரைப் புத்தாண்டுக்கெனத் தமக்கு விடுமுறை தரப்படவில்லை என கலவரமடைந்து தமது ஆத்திரத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

உயரதிகாரிகளை நோக்கிக் கூச்சலிட்டு கலாட்டா செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிப்பாய்களின் இந்த நடவடிக்கை யுத்த மென்பது அவர்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ள தென்பதையே தெளிவுபடுத்துவதாகவும் இருக்கிறது.

இந்நிலையில் அர்த்தமற்ற விதத்தில் யுத்த அழிவுகள் ஒரு தொடர்கதையாகச் சென்று கொண்டிருப்பதால் இராணுவத்தினரும் சலிப்படைந்து போனவர்களாகவே இருக்கின்றனர்.

அண்மையில் நோர்வேயில் பதவியேற்றுள்ள புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் கூட இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பணிகளில் தமது அரசின் ஒத்துழைப்பு தொடர்ந்து இருக்குமென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவில் இராணுவரீதியான நிலைப்பாடுகள் காரணமாக நேர்ந்த அனர்த்தங்களைக் கவனத்திலெடுத்து, தொடர்ந்தும் இழப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டியவர்களாகவே ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

முற்றிலும் ஒரு புதிய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு நோர்வே அரசு முன்வைத்துள்ள சமரசமுயற்சிகளை தாமதிக்காது முன்னெடுக்க வேண்டியதே இன்றியமையாததாகின்றது

இதன் மூலமே யுத்தமேகங்கள் தொடர்ந்து கருக்கட்டுவதைத் தடுக்க முடியும். அத்துடன் அரசியல் வானிலும் நம்பிக்கை நட்சத்திரங்களைத் தோன்றச் செய்யலாம். ▪

## அதிரடி அய்யாத்துரை



***வடக்கு-கிழக்கு மாகாண*** கல்வி நிர்வாகத்தில் இருந்து வந்த லாலாபனை ஒய்ந்து இப்ப ஸ்வரம் தொடங்கியிருக்குது. இசையில் மட்டுமல்ல, சுருதிமாறும் போது அனைத்திலுமே மாற்றங்கள் ஏற்படத்தான் செய்யும்.

***ஆயுதப்படைக்கு நவீன*** ஆயுதங்கள் வாங்கப்போவதாகக் கூறப்பட்டிருந்தது. இந்த நவீனம் என்ற வார்த்தை யுத்தம் தொடங்கிய காலம் முதல் சொல்லப்படுகிறது. இவ்வளவு காலமும் வாங்கிக் குவித்த நவீனமானவற்றுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. ஏராளமானவை புத்தம் புதுசாகவே மறுதரப்பிடம் போயிருக்குதாம். அவற்றை வைத்துத்தான் அவை சிலம்படி காட்டுகினம்.

***பிபிஸி அக்காவின் குரலோடு*** அவபோட்டிருக்கிற வளையல்களின் சத்தமும் தமிழோசையில் கேட்குது. கணிரென்ற பேச்சுடன் அக்கண்ணாடி வளையல்களும் தாளம் போடுது!.

***எல்லாம் வல்ல அம்மையாரைச்*** சந்திக்கச் சென்றால் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியிருக்குதாம். பின்னர் சந்திப்பு தொடங்கியதும் ஒதுக்கப்பட்ட நேரத்தில் முக்கால்வாசிநேரம் அம்மையார் தனது புகழ் பாடுவதிலும், தன்னைப்பற்றிப் பேசுவதிலுமே செலவிடுகிறாராம். இதனால் சந்திக்கச் சென்றவர்கள் தமது பிரச்சினைகளை கூறமுடியாது கொட்டாவி விட்டபடியே திரும்ப வேண்டியுள்ளதாம்.

***பரமசிவன் கழுத்திலிருந்து*** பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? அதிதீவிர பாதுகாப்புள்ள அலரி மாளிகைக்கு அருகிலேயே கசிப்புக் காய்ச்சுவதில் ஒருவர் நீண்ட காலமாக கொடிகட்டிப்பறந்துள்ளார். இறுதியாக மாட்டுப்பட்ட போது அந்தப் பாதுகாப்புச் சுற்றாடலை கச்சிதமாகவே அப்பேர்வழி தனது தொழிலுக்குப் பயன்படுத்தியிருப்பது வெளிச்சத்துக்கு வந்தது. கில்லாடிகள் பலரகம்; அவர்களில் இவர் ஒரு ரகம்.

***அண்மையில் யாழ்ப்பாணத்*** தளபதியாகவிருந்து ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவப் பேச்சாளர் முனசிங்க நூல் ஒன்றை எழுதியுள்ளார். விரைவில் வெளிவரவுள்ள அந்நூலில் தனது சேவைக்காலத்தில் ஏற்பட்ட கஷ்ட, நஷ்டங்களையெல்லாம் அன்னார் எழுதித்தள்ளியுள்ளாராம். வாளைவிடப்பேனாவின் முனை கூர்மையானது என்பதை அவர் உணர்ந்துள்ளாராக்கும். ▪

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 106

# இடி அமீன்

### கடந்தவாரம்

ஆர்ச் பிஷப் லுவும் மற்றும் அமைச்சர்களின் இருவரது சடலங்களையும் இறுதிக் கிரியைகளுக்காகத் தம்மிடம் ஒப்படைக்கும்படி ஆங்கிலிக்கன் திருச் சபையும், அமைச்சர்களின் குடும்பத்தவரும் கோரியிருந்தனர். ஆனால் அவர்களுடைய கோரிக்கைக்கு எதுவித மதிப்பும் அளிக்கப்படவில்லை. அமீனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சில இராணுவ அதிகாரிகளே சடலங் களை அடக்கம் செய்தனர். புதைகுழிகளுக்கும் தொடர்ந்து ஆயுதம்தாங்கிய சிப்பாய்கள் காவல் போடப்பட்டிருந்தனர்.

இடி அமீன் கொடுங்கோலாட்சி நடத்தியது என்னவோ உண்மைதான். இருப்பினும் சில சம்பவங்கள், அமீனைப் பிடிக்காத சில சக்திகளால் மிகைப்படுத்தி வெளியிடப்பட்டு வந்தன. ஆர்ச் பிஷப் காலமானதும் அவருடைய தலையைத் தனியாகக் கொய்தெடுத்து அமீனுடைய மாளிகையிலுள்ள குளிர்பதனப் பெட்டியில் பலகாலம் பாதுகாப்பாக வைத்திருந்தான் என்று கூறப்பட்ட கருத்திலும் உண்மை இருந்ததாகத் தெரியவில்லை.

இடி அமீனின் கொடிய செயல்களையிட்டு அமைச்சர் சியம்பா நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். ஆகவே ஏனைய பலருக்கு ஏற்பட்ட முடிவே சியம்பாவுக்கும் ஏற்படக் கூடும் என்ற எச்சரிக்கைகள் சியம்பாவை வந்தடைந்தன.

இனி...

என்டபே விமான நிலையத்தில் இஸ்ரேலியர்கள் நடத்திய அதிரடித் தாக்குதலால் மருண்டுபோன இடி அமீன், திருமதி டோரா புளொச் என்ற மூதாட்டியை துடிக்கத் துடிக்கக் கொலை செய்த சம்பவத்தால், அப்போது சுகாதாரத்துறை அமைச்சராகவிருந்த டாக்டர் ஹென்றி சியம்பா பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தார். அமீனுக்கு நெருக்கமாகவும் விசுவாசமாகவும் நடந்து வந்த பலரும் அமீனால் கொலை செய்யப்பட்டிருந்தனர். ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் அமீன் அவர்களை உயிருடன் விட்டு வைக்க மாட்டான் என்பது சியம்பாவுக்கு நன்றாக தெரிந்திருந்தது.

தன்னுடன் சேர்ந்து பணிபுரிந்து வந்த இரு அமைச்சர்களும் ஆர்ச் பிஷப் லுவும் அவர்களும் கொலைசெய்யப்பட்ட முறையும் சியம்பாவை உறுத்தியது. இக் காரணங்களால், சியம்பா தானும் நாட்டை விட்டு வெளியேறி விடுவதற்காக அந்தரங்கமான திட்டங்களை வகுக்கலானார்.

சியம்பாவின் இரு மனைவியர்களான தெரேசா மற்றும் எலிஸபத் ஆகியோருக்கும் அவருடைய தாயாருக்கும் இரு பிள்ளைகளுக்கும் கூட தனது திட்டம் பற்றி சியம்பா எதையும் கூறவில்லை. அமீனுக்கோ ஏனையோருக்கோ சந்தேகம் ஏற்படாமல் மிகக் கவனமாகச் செயற்பட்டார்.

1976ம் ஆண்டு நவம்பரில் ஒரு நாள் நள்ளிரவு கடந்து சில நிமிடங்களின் பின்னர் தன்னை யார் என்று அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பாத ஒருவரின் குரல் சியம்பாவை தொலைபேசியில் அழைத்தது. நாட்டின் வெகு தூரமான ஓரிடத்திலிருந்து அந்த அழைப்பு வந்தது. "ஐயா உங்களால் இன்று வரை உயிர் வாழும் ஒருவன் நான். நீங்கள் நீண்ட நெடுங் காலம் உயிர்வாழ வேண்டும். நீங்கள் இன்னும் உயிருடன் வாழ விட்டிருக்கிறார்களா, என்பதை அறிந்து கொள்ளவே இந்த அழைப்பினை எடுத்துப் பார்த்தேன். நீங்கள் உயிருடன் தான் இருக்கின்றீர்கள்! கவனமாக இருங்கள்!" இவ்வாறு எச்சரித்து ஓய்ந்தது.

மற்றுமொரு சம்பவம் சியம்பா அவருடைய நாட்டை விட்டு வெளியேறும் திட்டத்துக்கு துரிதகதியை ஏற்படுத்தியது. 1977 ஜனவரியில் சியம்பாவுக்கு ஒரு கடிதம் வந்தது. போதுமான ஆங்கில அறிவற்ற ஒருவரால் அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது. அதனுடைய சாராம்சம் பின்வருமாறு:

*அன்புள்ள ஐயா!*

*நான் கேள்வியுற்ற தகவல்கள் உங்களுடைய இறுதிக்கு போடப்படும் திட்டங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளன. ஆகவே தங்களைப்பற்றி நன்றாக தெரிந்து வைத்துள்ள நான், தங்களுக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.*

*ஸ்பேக் ஹெட்டலில் இரு நாட்களுக்கு முன்னர் இரவு உணவு உட்கொண்ட வண்ணம் இருந்தேன். நான் இருந்த மேசைக்கு சற்று தொலைவில் மதுபோதையிலிருந்த இராணுவ உடை தரித்த இருவர் உரையாடிக் கொண்டிருந்ததை என்னால் நன்றாகக் கேட்க முடிந்தது. அதில் ஒருவன் "பட்டியலில் அடுத்து இருப்பவன் சியம்பாதான்!" என்று கூறினான். அதனைத் தொடர்ந்து அவர்கள் என்ன பேசினார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் அங்கிருந்து வெளியேறும்வரை எனக்குரிய உணவினை ருசித்து உண்பது போல் பாசாங்கு செய்தேன்.*

*சில நிமிடங்களில் அவர்கள் இருவரும் போகப் புறப்பட்டனர். அம்மண்டபத்தை விட்டு அவர்கள் பிரதான வாயில் வழியாக வெளியேறியதும், மற்றுமொரு வாயில் வழியாக நான் வெளியே வந்து அவர்கள் இருவரையும் அவதானித்தேன். ஒரு மோட்டார் வண்டியில் இருவரும் ஏறிக்கொண்டனர். அந்த வண்டியின் இலக்கத்தை போதுமான வெளிச்சம் இல்லாத நிலையிலும் பாாத்தேன் UVS 335 அல்லது 336 ஆக இருக்க வேண்டும்.*

*இரண்டாமவன் மேசையிலிருந்து புறப்படும்போது கூறிய வார்த்தைகள் என் காதுகளில் ஒலித்தன. "சியம்பா நம் ஆட்களுக்கு சிக்கல்கள் கொடுத்து வருவதாக கேள்விப் பட்டேன்!" என்றான். அடுத்தவன், "ஒருவேளை அதற்காகத்தான் அவருடைய பெயர் பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்!"*

*ஐயா! தாங்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஒருவர். ஏதோ துஷ்டனான ஒருவனின் துணையாகிவிட்டீர்கள். ஆனால் உங்களுக்கே தீங்கு நினைப்பவர்களிடமிருந்து மிக விரைவில் நீங்கள் வெளியேறி விட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.*

*இப்படிக்கு*
*உங்கள்*
*நலன் விரும்பி.*

இவ்வாறு அந்த எச்சரிக்கைக் கடிதம் கிடைத்ததும் சியம்பா பெரிதும் குழப்பமடைந்தார். கடிதத்தில் காணப்பட்ட மோட்டார் வண்டியின் இலக்கம் அரச ஆய்வாராய்ச்சி பிரிவுக்குச் சொந்தமானது என்பதை சியம்பா நன்கு அறிவார். இந்தப் பிரிவில் உள்ளவர்கள் தான் இடிஅமீனின் சார்பாக வகைதொகையற்ற குற்றம் புரிந்து வருபவர்கள்.

இதனைத் தொடர்ந்துதான் அந்த ஆண்டு (1977) பெப்ரவரி 16ம் திகதி ஆங்கிலிக்கன் திருச்சபை ஆர்ச் பிஷப் லுவும் அவர்களும், இரு அமைச்சர்களும் கைது செய்யப்பட்டனர். பின்னர் கொலையும் செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் பின்னர்தான் சியம்பாவின் - நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

பெப்ரவரி 22ம் திகதியன்று புறநகர் பகுதியில் சியம்பா வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது தன் கையை நீட்டி சியம்பாவின் வண்டியை நிறுத்தினார் ஒரு வயோதிபர். வாகனத்தை ஓட்டிச் சென்ற சியம்பாவின் அருகே வந்தார். சியம்பாவும் கண்ணாடியை கீழே இறக்கிவிட்டு, "என்ன வேண்டும்?" என்று கேட்டார் "கவனமாக இரு மகனே! நீதான் எஞ்சியிருக்கிறாய்!" என்று சியம்பாவின் தலையைத் தொட்டு தடவினார்.

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக இடம் பெற்ற சம்பவங்கள் சியம்பாவின் உள்ளத்தில் வைராக்கியத்தை ஏற்படுத்தின. ஓய்வு நேரங்களில் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக தனியாகவே சிந்தித்து, திட்டமிடத் தொடங்கினார்.

உலக சுகாதார நிறுவனத்தின் மாநாடு மே மாதம் நடைபெறவிருந்தது. இதில் ஆபிரிக்க நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் பங்குப்பற்ற வேண்டிய கட்டாயம் இருந்தது.

ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியத்தின் செயலாளர் சியம்பா என்பதனாலும், ஜெனீவா மாநாட்டுக்கு உரிய முன்னேற்பாடுகளை செய்யும் குழுக்களுடன் சியம்பாவும் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது.



ஆகவே ஜெனீவா செல்வதற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாகவே எகிப்தின் தலைநகரான கெய்ரோ செல்ல வேண்டியிருந்தது.

அம்மாநாடு சம்பந்தமாக ஜெனீவாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட உலக சுகாதார நிறுவனத்தின் ஆவணங்களுடன் சியம்பா அமீனைப் போய் சந்தித்தார். ஆர்ச் பிஷப் கொலை செய்யப் பட்டமையினால் உலக நாடுகளில் எழுந்திருந்த வாதப் பிரதிவாதங்கள் அப்போதும் அடங்கவில்லை. இதனால் இடி அமீன் பெரும் கவலைக்குள் ஆழ்ந்திருந்தான். இதற்கிடையில் தனக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து நீண்ட நெடுங்காலம் ஆலோசனைகளை வழங்கிவந்த அமைச்சர் சியம்பா தன்னைவிட்டு சில மாதங்கள் பிரிந்திருக்கப் போவதை எண்ணி அமீன் பெரிதும் சங்கடப் பட்டான்.

### தருவது அழகன்

ஜெனீவா மாநாடு சியம்பாவுக்கு நாட்டை விட்டு வெளியேற நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தது. ஆனால் அமீன் தன் மாநாட்டுக்கான பயணத்தை தடுத்து விடுவானோ என்று பயந்தார்.

உகண்டாவுக்கும் இடி அமீனுக்கும் ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை துடைத்தெறிவதற்கு பல நாட்டு அமைச்சர்களும், பிரமுகர்களும் ஒன்றுகூடும் ஒரு களமாக இம்மாநாடு வாய்ப்பளிக்கப் போகிறது என்று சியம்பா அமீனிடம் தெரிவித்ததும் அவன் மன மகிழ்ந்தான். உடனடியாக ஏற்பாடுகளைச் செய்யுமாறும் பல நாட்டு அமைச்சர்களையும், பிரமுகர்களையும் உபசரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்பதனால், போதுமானளவு பணத்தைப் பெற்றுக் கொள்ள உடன் ஏற்பாடு செய்யுமாறும் அமீன் சியம்பாவுக்கு ஆலோசனை கூறினான். அப்போது தான் சியம்பாவின் உள்ளம் குளிர்ந்தது.

உடனடியாகவே தனது பயணத்துக்கான ஏற்பாடுகளை செய்ததுடன் மனைவியர் இருவர், இரு மகன்கள் மற்றும் ஒரு மைத்துனி ஆகியோரை நைரோபிக்கு தந்திரமாக அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்தார்.

(இடி தொடரும்)

## நவோமியும் நிர்வாணப்படங்களும்



உலகப்புகழ் பெற்ற பிரிட்டிஷ் மொடல் அழகி நவோமி கம்பல். இந்தக் கறுப்பழகி ஒரு முறை இவரது நண்பர் ஒருவருடைய வீட்டிற்கு அருகாமையில் இருந்த கடற்கரையில் பிறந்தமேனியுடன் சூரியக்குளியல் செய்தார்.

அப்போது நவோமிக்குத் தெரியாமல் ஒரு புகைப்படக்காரர் படங்களை எடுத்து விட்டார். பின் அவற்றை ஒரு ஸ்பானிஷ் பத்திரிகைக்கு விற்றும் விட்டார்.

அந்த ஸ்பானிஷ் பத்திரிகை நவோமியின் நிர்வாணப்படங்களைப் பிரமாதமாகப் பிரசுரித்து உலகையே ஒரு கலக்குக்கலக்கி விட்டது. நவோமி அந்த பத்திரிகை மீது வழக்குத் தொடுத்து விட்டார்.

இதில் விசித்திரம் என்னவென்றால், தனது நிர்வாணப் படங்களைப் பிரசுரித்ததற்காக அவர் நஷ்டஈடு எதையும் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக, எல்லாப் படங்களையும் அதன் நெகட்டிவ்களோடு திரும்பத்தரக் கேட்டுக் கொண்டார்.

அதன்படியே அவற்றைத் திரும்ப வாங்கிக் கொண்டுவிட்டார் நவோமி கம்பல்.

பிரபல மொடல் அழகியான நவோமி, மைக்கல் ஜக்சன் போன்ற பிரபலங்களின் இசை வீடியோ அல்பங்களில் நடித்திருக்கிறார். அது மட்டுமன்றி சில ஹொலிவூட் படங்களிலும் நடித்திருக்கிறார். இவர் நடித்துள்ள 'டெஸ்டினேஷன் வெர்னா' என்ற ஆங்கிலப் படம் விரைவில் வெளியாகவுள்ளது.

## வித்தியாசமான அழகிப்போட்டி

அண்மையில் கனடாவில் அழகிப் போட்டி ஒன்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் அழகிகளைத் தெரிவு செய்ய பார்வையற்றவர் ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

கண் தெரியாதவரால் எப்படி அழகிகளைத் தெரிவு செய்ய முடியும்?

அந்த அழகிப் போட்டியை நடத்தியவர்கள் அதை ஒரு வித்தியாசமான போட்டியாக நடத்தத்தான் விரும்பினார்கள்.

வெறும் முக அழகையும், உடல் அழகையும் வைத்துத் தெரிவு செய்யாமல், அவர்களின் மன அழகை வைத்து தெரிவு செய்ய விரும்பினார்கள்.

பார்வையற்றவர் நீதிபதியாக இருப்பதால் உடல் அழகில் மயங்காமல் போட்டியில் கலந்து கொள்ளும் பெண்களிடம் கேள்வி கேட்டு அவர்களின் உண்மையான மன அழகை அறிந்து கொள்வார் என்பது தான் போட்டியை நடத்தியவர்களின் ஐடியா.

நல்ல ஐடியாதான்.

## இதயத்தில் இடம் பிடித்தவர்கள்



இளவரசர் சார்ள்ஸ்-மறைந்த டயானா தம்பதியின் வாரிசுகளான வில்லியமும், ஹரியும் இங்கிலாந்தின் இளம் பணக்காரர்கள் வரிசையில் சேர்ந்து விட்டார்கள்.

வரும் ஜூன் 21ம் திகதி வில்லியமின் பதினெட்டாவது பிறந்த நாள், அன்று முதல் அவரால் அரச குடும்ப சொத்துக்களில் உரிமை கொண்டாட முடியும். பல கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு உரிமையாளராகும் வில்லியம் இதைப் பற்றியெல்லாம் அவ்வளவாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

இவரது உலகமே வேறு. உலகத்தின் கவர்ச்சிகரமான முதல் பத்து ஆண்களின் பட்டியலில் இடம்பிடித்திருக்கிறார் வில்லியம், அழகிகள் மீது காதல் கொண்டு வருகிறார் இவர்.

மொடல் அழகிகளான பார்பி ட்வின்ஸ், சின்டி கிரா ஃபோர்ட், 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' இசைக்குழுவில் உள்ள எம்மா, 'பே வோட்ச்' புகழ் பமீலா அண்டர்ஸன் ஆகியோர் வில்லியமின் மனதில் இடம் பிடித்த அழகிகள்.

இங்கிலாந்தின் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக இவரது காதலிகளைப் பற்றி எழுதி வருகிறது.

எடின்பேர்க் பல்கலைக் கழக மாணவி இஸபெல்லா, பொப் பாடகிகள் பிரிட்னி ஸ்பியர்ஸ், கிறிஸ்டினா அகிலேரா ஆகியோர் வில்லியமின் அன்பைப் பெறத்துடிக்கும் அழகிகள் என்று ஒரு பேச்சு வேறு உண்டு.

## துரித கதியில் கொள்ளை



நமது பணத்தை வங்கியில் போட்டு வைத்திருந்து பின் அதைத் தேவையான அளவு எடுக்கச் சென்றாலே காத்திருந்து பணத்தை எடுக்க குறைந்தது அரை மணித்தியாலமாவது தேவைப்படும்.

அமெரிக்காவின் லோஸ்ஏஞ்சல்ஸில் ஒருவன் அரைமணித்தியாலத்திற்கும் குறைவான நேரத்தில் (25 நிமிடங்கள்) மூன்று வங்கிகளில் கொள்ளையடித்திருக்கிறான், என்றால் வியப்பாக இருக்கறதல்லவா?

நண்பகல் 11 மணிக்கு ஒரு வங்கியில் துப்பாக்கியைக் காட்டி, மிரட்டிக் கொள்ளையடித்து விட்டு 11-15 மணியளவில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இன்னொரு வங்கியில் கொள்ளையடித்து இருக்கிறான்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இன்னொரு வங்கியில் கொள்ளையடித்து விட்டுத் தப்பிச் சென்று விட்டான்.

உலகிலேயே அதிக வங்கிக் கொள்ளைகள் நடப்பது லொஸ் ஏஞ்சல்ஸில் தான், என்றாலும் இந்த அளவுக்கு எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்துள்ளார்கள் அதிகாரிகள்.

## புதிய கிரிக்கெட் இதழ்

கிரிக்கெட்டிற்கு இருக்கும் மவுசு எப்போதுமே தனிதான். இந்தியாவில் இப்போது புதிதாக கிரிக்கெட் வார இதழ் ஒன்று அண்மையில் வெளியாகியுள்ளது.

'கிரிக்கெட் ரோக்' (CRICKET TALK) என்ற பெயருடைய அந்தப் புத்தகத்தின் முதல் இதழில் சச்சின் டெண்டுல்காரின் படம் அட்டைப்படமாகப் போடப்பட்டுள்ளது.

கிரிக்கெட் போட்டிகளை ஒழுங்குசெய்யும் 'வேர்ல்ட் டெல்' நிறுவனம் தான் இப்புத்தகத்தை ஆரம்பித்திருக்கிறது.

ரவி சாஸ்திரி, இயன்சேப்பல் போன்ற முன்னாள் முன்னணி ஆட்டக்காரர்களின் கட்டுரைகள் இப்புத்தகத்தில் இடம் பெறுகின்றன.



# இராட்சத சீலின் பொழுது போக்கு



ஆங்கிலப் படங்களில் வரும் இராட்சத விலங்குகள் வாகனங்களை கவிழ்த்துத் தள்ளுவதைப் பார்த்திருப்பீர்கள். அதைப் போன்று படத்தில் காரைக்கவிழ்க்க இந்த இராட்சத சீல் முயற்சிக்கவில்லை.

கடல் விலங்கினமான இந்த இராட்சத சீல், நியூஸிலாந்து நாட்டின் வட பகுதித் தீவில் இருக்கும் ஜிஸ்போர்ன் படகுத்துறைக்கு சமீபத்தில் வந்து சேர்ந்தது.


'ஹோமர்' எனச் செல்லப்பெயர் சூட்டப்பட்டிருக்கும் இந்த சீல் படகுத்துறைக்கு வரும் வாகனங்களின் மீது சாய்ந்து தன் பெரும் உடலைக் அடிக்கடிதேய்த்துக் கொள்வது இதன் பொழுது போக்கு.

வாகனங்களை உரசிக் கொண்டிருக்கும் இந்த சீலின் பார்வை, எப்போது மனிதர்கள் பக்கம் திரும்புமோ எனப் பயந்தபடி உள்ளனர் படகுத்துறையில் இருப்போர். ■

# பஸ் பொம்மையின் மவுசு

இலண்டனைச் சேர்ந்த ஒருவர், தனி மனிதனாக எழுபது ஆண்டுகளாக தான் சேகரித்து வந்த ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட விதவிதமான கார், பஸ், லொறி பொம்மைகளை இப்போது ஏலத்தில் விட்டுள்ளார்.

1920ம் ஆண்டு முதல் சேகரித்து வந்த இந்தப் பொம்மைகளை ஏலத்தில் விடும் உரிமையை இலண்டனில் உள்ள 'எம்மா சிக்கன் ஒஃப் ஃபிலிப்ஸ் அக்ஷன் ஹவுஸ்' பெற்றது. படத்தில் காணப்படும் சிறிய பஸ், 1921ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஓடிய பஸ்ஸின் மாதிரியாகும். இது 3 ஆயிரத்து 260 டொலருக்கு ( ரூபா.241240 ) ஏலம் போயிருக்கிறது. ●




# கம்யூனிசத்திற்கு எதிர்ப்பு

உலகிலேயே அதிகமான முஸ்லிம்கள் வாழும் நாடு இந்தோனேஷியா.

அண்மையில் இந்தோனேஷிய அரசு, கம்யூனிசத்தின் மீதான தடையை விலக்கிக் கொள்வதாகவும் இஸ்ரேல் நாட்டுடன் நல்லுறவைப் புதுப்பித்துக் கொள்வதாகவும் முடிவெடுத்தது.

இந்தோனேஷிய அரசின் இந்த முடிவை எதிர்த்து அண்மையில் அங்கு முஸ்லிம் பெண்கள் நடத்திய பேரணிதான் இது. ■

## தகவல் பெட்டி



இரவு நேரங்களில் மணித்தியாலத்திற்கு 150 கிலோமீட்டர் வேகத்தில் பயணம் செய்வார்கள் ஐரோப்பியர்கள். இந்நேரத்தில் சற்றுக் கண்ணயர்ந்தால் பெரிய பெரிய விபத்துக்கள் ஏற்படும்.

இதைத் தவிர்ப்பதற்காக படத்தில் இவர் அணிந்திருப்பது போன்ற ஒரு ஹெல்மெட்டை அணிந்தால் போதும்.

ஹெல்மெட்டில் ஒரு கெமரா இருக்கிறது. இது இருவிழிகளையும் விநாடிக்கு 30 தடவை வீதம் படம் பிடித்துக் கொண்டே இருக்கும்.

இதில் கண்ணிமைக்கும் நேரத்தை விடக் குறைவாகக் கண்ணயர்ந்தால் கூட பெரிதாக ஒலியெழுப்பி வாகனம் ஓட்டுபவரை எச்சரித்து விடும்.

# தூங்கினால் எச்சரிக்கும்



# இயேசுநாதர் ஒரு 'வெஜிட்டேரியன்'

தலைப்பையும் படத்தையும் பார்த்து விட்டு, 'இயேசுநாதர் தாவர உணவை மட்டும் புசித்திருக்கிறார்' என்று புதிதாகக் கண்டுபிடித்துள்ளதாக நினைப்பீர்கள்.

அப்படி எதுவுமில்லை.

அமெரிக்காவின் மிஸிஸிபி மாகாணத்தின் ஜக்ஸன் நகரில் விலங்குகளை நேசிக்கும் மக்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அமைத்துள்ள விளம்பரப் பலகை தான் இது.

'சைவ உணவை அருந்தியவர் இயேசுநாதர். கடவுளின் படைப்புக்களை நேசியுங்கள். அவரைப் பின்பற்றுங்கள்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# குறைந்த எடை நாய்கள்

படத்தில் இருக்கும் நாய்க்குட்டிகள் இரண்டும் 'யோர்க்ஷையர் டெர்ரியர்' என்ற இனத்தைச் சேர்ந்தவை. உலகிலேயே மிகவும் எடைகுறைந்த நாய் இனம் இது தான். இந்த இன நாய்க்குட்டிகளை நாம் குடிக்கும் டம்ளருக்குள் அடைத்து விடலாம். அவ்வளவு சிறியவை.'

படத்தில் காணப் படும் நாய்க்குட்டிகள் இரண்டும் பெண்கள். ஒன்றின் பெயர் ஃபுட்டி, மற்றதன் பெயர் டாரிகா. ●



# பிரிந்து விட்ட இரட்டையர்கள்

தொலைக்காட்சித் தொடர்களிலும், திரைப்பட வசனத்துறையிலும் இதுவரை இரட்டையர்களாகச் சேர்ந்து பணியாற்றிய மூர்த்தி-ரமேஷ் தற்போது பிரிந்து விட்டனர்.

இதில் மூர்த்தி தன் பெயருடன் தந்தையின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து கவி மூர்த்தி எனப் புதுப் பெயர் சூட்டிக் கொண்டு விட்டார்.

பார்த்திபன்-பிரபுதேவா நடித்துள்ள 'ஜேம்ஸ்பாண்டு' படத்திற்கு வசனம் எழுதியுள்ள கவி மூர்த்தி விரைவில் ஒரு படத்தை இயக்கவுள்ளார்.

# ரஞ்சிதாவின் முயற்சி

திருமணத்தின் பின் கலைச்சேவை செய்ய இறங்கியிருக்கும் ரஞ்சிதா படத்தயாரிப்பாளர்களிடம் நடிக்க வாய்ப்புக்கேட்டுப் படியேறினார். பலன் கிட்டவில்லை.

தொலைக்காட்சித் தொடர்களில் மட்டும் நடிக்க வாய்ப்புக்கள் வருகின்றன. வந்த தொலைக்காட்சித் தொடர் வாய்ப்புக்களை மறுக்காமல் நடித்து வருகிறார் ரஞ்சிதா.

ஆனாலும் பெரிய திரையில் நடிப்பதற்குச் செய்யும் முயற்சிகளைக் கைவிடவில்லை.

# தோற்றத்தை மாற்றுகிறார் பிரசாந்த்

'ஜீன்ஸ்' படத்திலிருந்து கடையாக வெளியான 'குட்லக்' படம் வரை பிரசாந்த் தோற்ற மாற்றம் இல்லாமல் தோன்றினார்.

இனி தோற்றத்தை மாற்றிக் கொண்டு வித்தியாச வேடங்களில் வெளுத்து வாங்கப் போகிறார்.

முதலில் வஸந்த் இயக்கத்தில் நடிக்கும் 'அப்பு' படத்தில் பிரசாந்த் தாடி மீசையுடன் சற்று முரட்டுத்தனமான வேடத்தில் நடித்து வருகிறார்.

இதன் பின் மணிரத்னத்தின் உதவியாளர் கசி கணேசன் இயக்கும் 'விரும்புகிறேன்' படத்திலும் தோற்றத்தை மாற்றி நடிக்கிறார். இதற்காக கம்பியூட்டர் மூலம் பிரசாந்தின் தோற்றத்தை வடிவமைத்துள்ளார்கள்.

இதை அடுத்து ராஜ்கபூர் இயக்கத்தில் பிரசாந்த் நடிக்கும் 'என்ன விலை அழகே' படத்திலும் வித்தியாசமான தோற்றந்தானாம்.



# ரம்பா நடனமாடத் தடை

ரம்பா தொடையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார். தொடைப் பகுதியை அழகுபட அவர் செய்த உடற்பயிற்சி தான் அறுவைச் சிகிச்சை செய்வதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

அமெரிக்காவில் அண்மையில் நடந்த இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின் 3 மாதங்கள் வரை நடனமாடக் கூடாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்.

இதனால் பாடல் காட்சிகளை பின்னர் படம் பிடித்துக் கொள்ளலாம் என்று கூறி விட்டு ஏனைய காட்சிகளில் முதலில் நடித்து வருகிறார் ரம்பா.

# அசோக்குமாரின் அடுத்த படம்

'அன்று பெய்த மழையில்', 'காமா' உட்பட பல படங்களை இயக்கியவரும் 'ஜானி', 'ஜீன்ஸ்' உட்பட ஏராளமான படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தவருமான அசோககுமார் அடுத்து இயக்கும் படம் 'கஜுராஹோ'.

இதில் விஷால், மம்தா குல்கர்னி, சாதிகா, கஸ்தூரி, வைஜி மகேந்திரன் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

'காமா' படத்தைப் போல இதுவும் 'ஒரு மாதிரியான' படம் தான். வெளிநாட்டிலிருந்து வரும் ஒரு வாலிபன், இந்திய கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் மீது ஈடுபாடு கொள்கிறான். அவன் வாழ்க்கையில் மூன்று பெண்கள் குறுக்கிடுகிறார்கள். அவர்களை அவன் எப்படி எதிர்கொள்கிறான் என்பது தான் படத்தின் மையக்கரு.

இப்படத்தின் கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் ஒளிப்பதிவாளர் அசோக்குமார்.

# மக்கள் திலகத்துடன் இளைய திலகம்

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். படங்கள் என்றாலே எப்போதும் ஒரு தனி மவுசுதான். கம்பியூட்டர் கிராஃபிக்ஸ் உத்திகளின் உதவியால் இவர் மறுபடி திரையில் தோன்ற ஆரம்பித்து விட்டார்.

சத்யராஜ் நடிக்கும் 'என்னம்மா கண்ணு' படத்தில் எம்.ஜி.ஆர் பங்குபெறும் கிராஃபிக்ஸ் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

இப்போது பிரபுவின் 'கந்தா கடம்பா கதிர்வேலா' படத்திலும் எம்.ஜி.ஆர் தோன்றும் கிராஃபிக்ஸ் பாடல் காட்சி இடம்பெறுகிறது.

இப்பாடல்காட்சியில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடன், இளைய திலகம் பிரபு, வடிவேலு, எஸ்.வி.சேகர், விவேக் ஆகிய நால்வரும் இணைந்து ஆடிப் பாடுகிறார்கள்.



# தமிழில் வெற்றி நாயகி

பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் 'என்ன விலை அழகே' படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக தமிழில் அறிமுகமாகிறார் அமிஷா பட்டேல் என்ற இந்தி நடிகை.

கோமல்வர குடும்பத்தைச் சேர்ந்த அமிஷா பட்டேலின் தந்தை மும்பையில் உள்ள பிரபல தொழிலதிபர்.

அமெரிக்காவின் பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார் அமிஷா.

அப்படியானால் ஏன் சினிமாவுக்கு வந்தார்?

"வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. அதனால் தான் நடிக்க வந்தேன்" என்று கூறும் அமிஷா நடித்த முதல் இந்திப் படம் ஆப்பர் ஹிட். படத்தின் பெயர் 'கஹோ நா பியார் ஹை'.

# திரையுலக மறுபக்கம் (145) அம்மா நடிகைகளை முன்னா...

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தமிழில் பிரபலமாக இருந்த மூன்றெழுத்து நடிகை அவர் இப்போது மலையாள நடிகர் ஒருவரைக் கட்டிக் கொண்டு குடும்பஸ்திரியாகி விட்டார். இருப்பினும் தனது குரல் வளத்தால் பிரபல நடிகைகளுக்குப் பின்னணிக் குரல் கொடுத்து வருகிறார் அவர்.

தமிழ்ப்படங்களில் அவர் நடிக்காவிட்டாலும் அவர் குரல் மட்டும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் இவரது கணவர் கதாநாயகனாக நடிக்க அந்த நடிகை ஒரு படத்தைத் தயாரித்தார்.

இப்படத்தில் இளம் அம்மா வேடங்களில் நடிக்கும் மூன்றெழுத்துத் தமிழ் நடிகையை ஒப்பந்தம் செய்தார் அந்த நடிகை.

'கவிதை'யைப் பெயராகக் கொண்டிருக்கும் அந்த நடிகை நல்லபடியாக நடித்துக் கொடுத்தார்.

தவிர்க்க முடியாத காரணங்களால் படப்பிடிப்புக்கள் தாமதமாக, அம்மா நடிகையிடம் மேலும் ஒரு நாள் இருந்து நடித்துத் தருமாறு கேட்டிருக்கிறார் நடிகை.

அம்மா நடிகையோ, தமிழில் 'தலைவாசல்' இயக்குநரின் படத்தில் நடிக்க...

# தக்காளி ... 'அசே...

ஹவுஸ்ஃபுல் ஃபிக்சர்ஸ் பட நிறுவன... தயாரிக்கும் புதிய படத்தின் பெயர் 'அசோகவனம்'. லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தி...

இவருக்கு ஜோடியாக 'கருத்தம்மா' ராஜஸ்ரீ நடிக்கிறா... இவர்களுடன் ஸ்ரீமன், ரியாஸ்கான், மோகன்ராம், மாஸ்ட... மகேந்திரன், பேபி ஜெனிஃபர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இரண்டு குழந்தைகளுடன் தாயையும் கடத்திச் சென்று காட்... பங்களாவில் வைத்துக் கொண்டு கொலை மிரட்டல் விடும் சைக்கோவி...



பிரபுதேவா-ரேணு தேசாய் படம்: ஜேம்ஸ்பாண்டு

# மினி சினி

✪ மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தில் 'செப்டெம்பர் மாதம்...' என்ற ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடியவர் சோஃபியா ஹக். இவர் இப்போது 'ஸ்னிப்' (SNIP) என்ற ஆங்கிலப்படத்தில் நடித்து வருகிறார்.

✪ கார்த்திக்கை வைத்து கேயார் தயாரிக்கும் படத்தை 'பிரியமுடன்' படத்தை இடக்கிய வின்சென்ட் செல்வா இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் ஐந்து கதாநாயகிகள் நடிக்கவிருக்கிறார்கள்.

✪ எழில் இயக்கும் 'ஒரு பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் பிரபுதேவாவின் அண்ணனாக சரத்குமார் நடிக்கிறார் என்பது தெரிந்ததே. இதில் சரத்திற்கு 'ஓட்டேரி பல்ராம்' என்ற தாதா வேடம்.

✪ சில மாதங்களுக்கு முன் தொழிலதிபர் ஒருவரை மணந்து கொண்டு இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த செண்பகா, மீண்டும் நடிக்க வருவதற்கான முயற்சியில் இறங்கி விட்டார்.

✪ 'புதிய பாதை', 'ஹவுஸ் ஃபுல்' போன்ற படங்களுக்காகத் தேசிய விருது பெற்ற பார்த்திபன், அடுத்து தேசிய விருதுக்காக குழந்தைகளை மையமாக வைத்துக் கலைப்படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

✪ மனோஜ் பாடிய 5 பாடல்களைக் கொண்ட இசை அல்பத்தைக் கேட்ட ஏ.ஆர்.ரகுமான் 'தாஜ்மகால்' படத்தின் 'ச்சீ எலுமிச்சீ...' பாடலை அவரைக் கொண்டு பாடவைத்தார். ஆனால் படத்தில் கிருஷ்ணராஜ் பாடிய 'ச்சீ எலுமிச்சீ...' பாடல் தான் இடம்பெற்றது.

✪ படவாய்ப்புக்கள் எதுவுமின்றி வீட்டில் இருக்கும் பிரீதா விஜயகுமார் அக்கா வனிதா விஜயகுமாரைப் போல தொலைக்காட்சித் தொடர்களில் நடிக்க முடிவு செய்திருக்கிறார்.

✪ கமலின் 'ஹேராம்' படத்திற்காக ஹங்கேரி சென்று பின்னணி இசைச் சேர்ப்பு செய்தார்கள். இதற்காக இளையராஜாவுடன் 100 வெளிநாட்டு இசைக்கலைஞர்கள் இசையமைக்க 40 இலட்ச இந்திய ரூபாய் செலவானது.

# எப்போது திரும...

கஸ்தூரி-குஷ்பு... சங்கீதா திரும... அண்மையில் முடிந்... அடுத்து அஜித்-ஷா... மணம் இதை அடு... இதோ என்று பேச... சிம்ரன்-ராஜு... மணம் தான்.

இவர்களின் ... 2001ல் தான் நடக்... ரான் அண்மையில்... ஒருவரிடம் கூறிய... து.

# உயரமான ... கேட்கும் ...

"எனக்கு உயரமா... கிடைத்தால் சந்... வேன். உயரமான... கிடைத்தால் சந்... நடிகன் தான் தா... தான் முன்பு ரகசி... பின் கௌதமி, ... இப்போது கௌசல்... உயரமா இருக்... கீழே குனிந்து பா... பேச வேண்டியதி... பேட்டியொன்றில் ... சத்யராஜ்.

# ... கொடுமைப்படுத்திய
# ...ன் நடிகை

...ம் வாங்கிவிட்டதாகவும், போகாமல் விட்டால் ... தயாரிப்பாளர் தன்னை உண்டு இல்லை என் ...டுவார் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ...யோ கெஞ்சிக் கூத்தாடி 25 ஆயிரம் ரூபாய் ...ன் நடித்து விட்டுப் போங்கள் என்று கேட்டார். ...ம் தருவதாகச் சொன்னதும் அம்மா நடிகையும் ... சம்மதித்து, நடிக்க ஆரம்பித்தார்.

... போசன இடைவேளையின்போது அம்மா நடிகை ... நடிகையிடம் சென்று பணத்தைக் கேட்டார். ...ா நடிகையிடம் அந்த நடிகை பேசிய பேச்சில் ... கொடுப்பது போலத் தெரியவில்லை.

...லே அம்மா நடிகை மறுபடி, "இனி நடிக்க ...ன். நடிக்க வேண்டுமானால் பேசியபடி பணத் ...தால்தான் நடிப்பேன்" எனப் பிடிவாதம் பிடிக்க ...கார்.

...லே சென்னைக்குப் புறப்பட ஆயத்தமாகி விட்டார். ...சித்த அந்த நடிகை.

...டி... எவ்வளவு பேரைப் பார்த்தவள் நான். ... வேல காட்றியா?" என எகிறியபடி அம்மா ...ன் குடுமியைப் பிடித்து இழுத்துச் சென்றார். ...யே ஒரு அறையில் தள்ளிப் பூட்டி, அம்மா ... அடித்து உதைத்தார் அந்த நடிகை.

...க்க வழி தெரியா ...த்துக் கொடுத்து ... வந்திருக்கிறார் ... நடிகை.

## முகப்பில்

பிரசாந்த்-சிம்ரான்
படம்: ஜோடி

# ...னிவாசனின்
# ...கவனம்'

... அவர்களை மீட்கும் போராட்டமே கதை. ...ர்மம், திகிலுடன் உருவாகும் இப்படத்தின் ...ிப்பு நிர்வாகத்தை ராஜா என்பவர் கவனிக்கிறார். ...பரப் படங்களுக்கு இசையமைத்து முன்னணியில் ...ரும் ராஜஸ்தானைச் சேர்ந்த வீரு என்பவர் இதறு ...சயமைக்கிறார்.

...கதை எழுதி திரைக்கதை அமைத்து வசனம் தீட்டிப் ...தை இயக்குகிறார் தக்காளி சீனிவாசன்.



## காதோடு சொல்லுகிறோம்

இரண்டெழுத்து மீன் நடிகைக்கு இப்போது சந்தமில்லா மல் மாப்பிள்ளை பார்த்து வருகிறாராம் அவரது தாய்க் குலம். தொழிலதிபராக இருக்க வேண்டும், வெளிநாட்டில் வசிக்க வேண்டும், திருமணமான பின் தானும் மகளுடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் மாப்பிள்ளை தேடி வருகிறாராம் தாய்க்குலம்.

பூப்பறிக்க வந்த மூன்றெழுத்து இளம் நாயகனுடன் காதல் வயப்பட்டிருக்கும் நானெழுத்து நடிகை, தன்னை விரைவாகக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என நச்சரித்து வருகிறாராம். நடிகரோ தான் பெரிய ஹீரோவான பிறகுதான் கல்யாணம் செய்வேன் என இழுத்தடித்து வருகிறாராம்.

இழுத்துப் போர்த்திக் கொண்டு படங்களில் நடித்து வரும் 'தேன்' நடிகை சிக்கனமென்றால் அப்படியொரு சிக்கனமாம். இவரைப் போட்டி எடுக்க வீட்டிற்குச் செல்லும் நிருபர்களுக்கு நடிகை பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கக் கொடுப்பதில்லையாம்.

'தங்கப் பதக்கம்' படத்தின் போலீஸ் அதிகாரியின் பெயரைக் கொண்ட தயாரிப்பாளரிடம் புது இயக்குநர்கள் தான் இதுவரை வாய்ப்புக் கேட்டு வந்தார்கள். இப்போது மார்க்கெட் இழந்த நடிகைகளும் வாய்ப்புக்கேட்டு வருகிறார்களாம். ஆனால் நடிகைகளின் பாச்சா மட்டும் இவரிடம் பலிக்கவில்லையாம்.

இன்னும் நிறைய நாள் சினிமாவில் காலம் தள்ள முடியாது எனப் புரிந்து கொண்ட இரண்டெழுத்துப் பூ நடிகை இப்போது முடிந்த வரை பணத்தைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறாராம். அதற்காக வேடங்களைப் பற்றிக் கவலைப்படாமல் சகட்டுமேனிக்கு பணத்தை வாங்கிக் கொண்டு நடித்து வருகிறாராம்.

# சினி விசிட்



## கிருஷ்ணா மகன் நடிக்கும் 'காதல் வெண்ணிலா'

'கல்கத்தா', 'நாகதேவதை' போன்ற பல மொழிமாற்றுப் படங்களைத் தயாரித்த தேவி சித்ரம் நிறுவனம் தயாரிக்கும் புதிய மொழிமாற்றுப் படம் 'காதல் வெண்ணிலா'.

தெலுங்கில் பெரு வெற்றி பெற்ற 'ராஜகுமாருடு' என்ற படமே 'காதல் வெண்ணிலா' என மொழிமாற்றம் செய்யப்படுகிறது.

பிரபல தெலுங்கு நடிகர் கிருஷ்ணாவின் மகன் மகேஷ் கதாநாயகனாக நடித்திருக்கிறார். கதாநாயகியாக ப்ரீத்தி ஜிந்தா நடித்துள்ளார். மற்றும் சுமலதா, பிரகாஷ்ராஜ் ஆகியோரும் நடித்துள்ளனர்.

மணி சர்மா இசையமைக்க ராகவேந்திரராவ் இப்படத்தை இயக்கியுள்ளார்.

ஆந்திராவில் 160 இடங்களில் திரையிடப்பட்ட இப்படம் 120 திரையரங்குகளில் 100 நாட்கள் ஓடியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழில் நடிக்க மறுப்பு

'முதல்வன்' படத்தில் 'ஷக்கலக்கபேபி...' பாடலைப்பாடிய 'ஹோராம்' நாயகி வசுந்தரா தாஸ் தமிழில் நடிக்க வந்த ஏராளமான வாய்ப்புக்களையும் மறுத்து விட்டார்.

ஆனால் இந்தியில் மகேஷ் பட் தயாரிக்கும் படமொன்றில் நாயகியாக நடிக்க மறுப்பேதும் சொல்லாமல் ஒப்புக் கொண்டு விட்டார்.

## சாக்ஷி தூக்கப்பட்டார்

'புதையல்', 'மாப்பிள்ளைக் கவுண்டர்' போன்ற படங்களில் பிரபல நாயகர்களுக்கு ஜோடியாக நடித்திருந்தும் சாக்ஷியால் தமிழில் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடிக்க முடியவில்லை.

தமிழில் இருந்து தெலுங்கிற்குச் சென்று சிரஞ்சீவி போன்ற நாயகர்களுடன் இணைந்து நடித்து அங்கு வெற்றிப் பவனி வந்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பின் அவரை தமிழில் அர்ஜுனுக்கு ஜோடியாக ஒப்பந்தம் செய்தார் இயக்குநரும் தயாரிப்பாளருமான மனோஜ்குமார்.

கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தாமல், தன் இஷ்டத்திற்குப் படப்பிடிப்புக்களுக்கு வர ஆரம்பித்தார் சாக்ஷி. இதனால் வெறுப்படைந்த இயக்குநர் அவரைப் படத்தில் இருந்து தூக்கி விட்டார்.

இப்போது அவருக்குப் பதிலாக அபிராமி என்ற புது முகம் நடித்து வருகிறார்.

## பிரகாஷ்ராஜின் மொழி மாற்றுப்படம்

பிரகாஷ்ராஜ் நடித்திருக்கும் தெலுங்கு மற்றும் கன்னடப் படங்கள் உடனுக்குடன் தமிழில் மொழிமாற்றப்பட்டு விடும்.

அந்த வகையில் இவர் நடித்த கன்னடப்படமொன்று 'நீ இன்றி நானில்லை' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக நடிக்க, நாயகியாக ஆயிஷா ஜுல்கா நடித்துள்ளார். இவர்களுடன் விஷ்ணுவர்த்தன், எஸ்.பி.பாலசுப்ரமணியம் ஆகியோரும் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.

பெரிய தொழிலதிபராகவும், பெண் பித்துப் பிடித்தவராகவும் பிரகாஷ்ராஜ் நடித்திருக்கிறார். அவரைத் திருத்தும் வேடத்தில் ஆயிஷா ஜுல்கா நடித்துள்ளார்.

எஸ்.நஞ்சுண்டா இயக்கும் இப்படத்தை குருராஜ் தயாரிக்கிறார். ஒளிப்பதிவு-பி.ராஜன், இசை-சைதன்யா, வசனம்-எ.ராமதாஸ்.

## தபுவின் காதல்

இந்திப் படத் தயாரிப்பாளர் சஜித், நாகார்ஜுன் ஆகியோரோடு சேர்த்துக் கிசுகிசுக்கப்பட்ட தபு இப்போது அவர்கள் இருவரையும் கை கழுவி விட்டார்.

இப்போது புகழ்பெற்ற இந்திய மொடல் மிலிண்ட் சோமனோடு காதல் வயப்பட்டிருக்கிறார். இருவரும் அடிக்கடி பொது இடங்களில் சந்தித்துக் கொள்வது வாடிக்கையாகி விட்டது.

மிலிண்ட் முன்பு மொடல் அழகி மது சாப்ரேயுடன் நெருக்கமாக இருந்தார். கல்யாணத்தில் முடியும் என எதிர்பார்க்கப்பட்ட இவர்களது காதல் முறிந்து விட்டது.

இதன் பின் மிலிண்ட் இந்தி நடிகை பிபாஷாவுடன் கை கோர்த்தார். இப்போது பிபாஷா, மிலிண்டை விட்டுப் பிரிய ஜோடியில்லாமல் இருந்தார் மிலிண்ட்.

இந்தக் குறையைப் போக்க தபுவுடன் இணைந்து கொண்டார் மிலிண்ட்.

தபு



கார்த்திக்-கௌசல்யா
படம்: சந்தித்தவேளை

# தேன் திண்ணை

## பாசத்தைச் சொல்லும் பாட்டொன்று பாடு!

வேளையது எதுவென்றிடினும்
வானத்தை அண்ணாந்து
விழிக்கின்ற பொழுதெல்லாம்
உனது நினைவுகளே
இதயத்துள் இறங்குகின்றன;
அந்த நேரமெல்லாம்
உனைப் பிரிந்து நான்
தொலைதூரம் தாண்டிவிட்டதாகவும்
உனக்கே உனக்கான உலகில்
நீ வாழ்வதாகவும்
எண்ணத் தோன்றுகின்றது!
அன்பும் சாந்தமும்
இழையோடுகின்ற
உனது புன்னகை தான்
அழியாத பாசத்தை
என்னுள் வயப்படவைத்ததோ?

உனக்குத் தெரியாமலே
உனக்கான சகோதரத்துவத்தால்
எது ஆன்மாவைப்
போர்த்தி விட்டு
மழைக்கால ஈர நாளொன்றில்
வாகன நெரிசல்மிக்க சாலையிலே
நீயும் சங்கமித்து மறைந்தாய்!

வானுயர்ந்த மரங்கள்...
அவற்றின் கீழே
நான், நீ, நண்பர்கள்
கூடிக் கதைத்த இடங்கள்...
சனக்கூட்டம் நிரம்பிய
சமுத்திரக் கரைதனில்
உனது சகாக்களிடம்–எனை
அறிமுகப்படுத்திவைத்த
மாலைப் பொழுது...
என
துளிப் பொழுதுகள் யாவும்
நினைவினில்
ஒளிப்படங்களாய் உள்ளன!

தேவதைகளின்
அருள் நிரம்பியிருந்த
வானத்தின் கீழா
வாழ்ந்திருந்து பிரிந்தோம்...?
நியாயங்கள் எப்படியோ
நானறியேன் அண்ணா!
நீதான் எனது
நிம்மதிகளின் நிம்மதியாகத்
திகழ்கின்றாய்!

உனது வாழ்வில்
மங்களங்கள் சூழும் நாளில்
மணியானதோர் பெண்–உன்
மனைவியாக வாய்த்திட வேண்டும்;
தெய்வத்தின்
எல்லா அருளிரக்கங்களும்
உன் வாழ்வோடு சேர்ந்திட வேண்டும்;
என்ற என் பிரார்த்தனைகள்
ஈடேறும் நாள் கண்டு
நான் மகிழ்ந்திட வேண்டும்!

காலத்தின் வழக்குகளுக்குள்
எனது தலைவிதி
சிந்தித் தடுமாறிய போதும்
உனக்கான நேயமும் கருணையும்
நிலையாக வாழுமடா!

என்மன விளிம்புகளில்
ஓயாது மோதும் நினைவுகள்
விழிகளின் ஓரத்தில் தூறல்கள் தூவும்.
தூரமாய்ப் போன எனதண்ணா;
நாம் சிரித்து, ஆனந்தித்துத்
துயர் சுமந்து பிரிந்த – அந்த
நந்தவனத்தைத் தேடேன்;
மீண்டும்
அன்பைச் சொல்லுகின்ற
ஒரு பாடலை
உன் விழிகளால் பாடேன்!

பஹீமா ஜஹான்–மெல்சிரிபுர.

## மலைத் தமிழா நீ கண்ட பலனென்ன?

மே தின சிறப்புக் கவிதை



"உலகத் தொழிலாளர்களே
ஒன்று கூடி வாருங்கள்!
ஒப்பற்ற சமுதாயமொன்றை
உருவாக்க வாருங்கள்!"

உலகத்தின் மூலையெலாம்
ஒலித்திடும் இக்குரலை
மலை நாட்டின் முகட்டினிலும்
மறக்காமல் நான் கேட்பேன்
இந்நாட்டின் பொருள் வளத்தை
ஏற்றிவைக்கப் பாடுபடும்
ஏழைத் தொழிலாளியிவன்
என்னத்தைத் தான் கண்டான்?

தோட்டத்து முதலாளி
வீட்டின் பின்புறத்தே
மாட்டுத் தொழுவமதும்
மாளிகை போலிருக்கும்!
கூட்டிப் பெருக்கி
குறைவின்றிப் பார்த்து வரும்
தோட்டத்துக் கூலிகளும்
கூடைகளைத் தூக்கிநிதம்
மேடுகளில் ஏறியேறி
தேயிலைக் கொழுந்து கிள்ளும்
பாட்டாளிப் பொண்ணாள்தான்
குடியிருக்கும் கூடுகளின்
கோலத்தைக் காண்பார் யார்?

தேயிலைக் கொழுந்தாலும்
மரம் தரும் பாலாலும்
மாடி மனை பூந்தோட்டம்
மகிழ்ச்சியிலே நீந்திநிதம்
கூடிக்குலாவுகின்ற

முதலாளிமாருள்ளம்
வாடும் தொழிலாளியவன்
வயிற்றை நிரப்புவதற்கு
வசதி வழங்க மறுக்கின்றார்.

பல்லாண்டு காலமாய்
இந்நாட்டின் வளம் பெருக்க

சொல்லொணாத் துயர் தாங்கி
துவண்டு வீழும் ஏழைகளின்
இல்லத்தில் அடுப்பெரிய
ஏன் தயக்கம் காட்டு கின்றார்?
எல்லாத் தொழிலாளர்களும்
ஏற்றமெலாம் பெற்று வாழ ஏனிந்த மலைத்தமிழன்
வாழ்வு தளைக்கவில்லை?

மேதினி போற்றுகின்ற
மேதினத்தில் நீ கூடி
கூட்டத்தைப் போட்டும்
கூக்குரலில் கோஷமிட்டும்
கைதட்டி ஆர்ப்பரித்து
கண்ட பலனேது முண்டோ?

மஸ்கெலிய–மலையமான்.

## கலைந்திடும் கனவுகள்....

வசந்தத்திற்கு
ஒரு வரவேற்புப் பாட
எத்தனை சந்தோசமாய்
வந்தாய் குயிலே! – உன்
குரல் வளையை
அவர்கள்
குதறி விட்டதனால்..
பூபாளம் பாட வந்த நீ
இதோ முகாரியை
முனகிக்
கொண்டிருக்கிறாய்!

தீங்கனிகள்
கொஞ்சம் சேர்த்திருந்தேன்;
குயிலே
நீ வந்து பசியாற. –
ஆனால்
அவற்றையெல்லாம்
பறித்தெடுத்து விட்டு
ஆதாம் உண்ட
பழங்களாய்ப் பார்த்து
குவித்து வைத்துள்ளார்கள்
குயிலே உனக்காக!

நந்தவனம் ஒன்று
நட்டு வைத்திருந்தேன்;
குயிலே
நீ வந்து கூடுகட்ட!
அவற்றை எல்லாம்
பிடுங்கி எறிந்து விட்டு
முட்களைப் பரப்பி
வைத்துள்ளார்கள்
நீ வந்து உட்கார

உன் சின்னக் கூட்டிற்குள்
வாழப் போவதாய்
வண்ணக் கனவுகள்
கண்டிருந்தேன் குயிலே!
ஆனால்
கலைத்து விட்டார்கள்
உன் கூட்டினை மட்டுமல்ல;
என் கனவுகளையும் தான்!

ம.பிரியா, கிழக்குப் பல்கலைக்கழகம்.

## முகம் காட்டு

என்னைக்
கண்டதும்
ஏன்
மறுகுகிறாய்?
***
எதிர்ப்படு
உன்
முகம் காணத்தான்
எத்தனை
நாட்களாய்.....
தவமிருக்கின்றேன்!
***
நான்–வரும்
வீதிகளிடம் கேள்....!
என்
காதலின்
புனிதத்தை
அவை
பாடிக் காட்டும்!
***
கண்ணே.....
என்
மனசுக்குள்
உன்னை
மட்டும் தான்
சிறைப்படுத்தியுள்ளேன்!
***
உன்
முகச்சிறையை
ஏன்.....!
என்னிடம்
காட்ட
மறுக்கிறாய்?
***
அன்பே...
உன்
முகம் காட்டு
என்
முகம் முன்னாடி!

என்.எஸ்.முஸம்மில்–புதியகாத்தான்குடி 06.

## சஸ்பென்ஸ் என்றால்...



பல திடுக்கிடும் மர்மப்படங்களை இயக்கிப் புகழ் பெற்றவர் அல்பிரட் ஹிட்ச் கொக். 'சஸ்பென்ஸ்' (மர்மம்) என்றால் என்ன என்பதற்கு இந்த மர்மபட மன்னன் சொன்ன விளக்கம் இது:

"சஸ்பென்ஸ் என்பது நமக்கு என்ன தெரிந்திருக்கிறது என்பதைப் பொறுத்த விஷயம். ஒரு படத்தில் திடீரென்று எதிர்பாராமல் ஒரு வெடிகுண்டு வெடித்தால் அது சஸ்பென்ஸ் ஆகாது. அது ஆச்சரியமூட்டும் விஷயம்.

ஆனால் படம் பார்க்கிறவர்களுக்கு இன்னும் சில வினாடிகளில் குண்டு வெடிக்கப் போகிறது தெரிந்து, திரையில் வரும் கதாநாயகனுக்கு அது தெரியாமல் போகுமானால் அதற்குப் பெயர் தான் சஸ்பென்ஸ்!"

## பேனா நண்பர்கள்



பெயர்: கே.முஹம்மட் முஸம்மத்,
வயது: 19
முகவரி: 114, மாவட்ட வைத்தியசாலை வீதி, பொத்துவில்-03..
பொழுது போக்கு: வழமையானவை



பெயர்: மங்களிக்கா பீரிஸ்,
வயது: 20
முகவரி: பூனைப்பிட்டி, உடப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

## நில்-கவனி-முன்னேறு

### 'ஆசை ஆசை' ஆசையை வளர்த்துக் கொள்வோம்:

"இன்று மனிதனை ஆட்டிப்படைப்பதும், ஆட்டிப் படைத்துக்கொண்டிருப்பதும் ஆசையே!" என்று புத்தர் சொன்னார்.



"ஆசையே துன்பங்கள் அனைத்துக்கும் காரணம்!" என்றார்.

ஆனால் அந்தத் துன்பத்திற்குப்பின் கிடைக்கும் இன்பத்தை நாம் அளவிட்டுக் கூற இயலாது.

மனிதன் நிறைய ஆசைகளுடனும் கற்பனைகளுடனும் வாழ்கிறான். அவன் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட ஆசையை வளர்த்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை மேலும் மேலும் வளமாக்க முயல்கிறான்.

அப்போது ஏற்படும் இன்பமும் துன்பமும் அவனுக்குப் படிக்கற்களாக மாறும். ஆசை அளவற்றது. பரந்து விரிந்து கொண்டிருக்கும் இவ்வையகத்தில் எவ்வளவோ, நிறைய அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அதற்குக் காரணம் அவனது முயற்சி, ஆசை இரண்டும் தான். அவன் பல அற்புதங்களைச் செய்து முடிக்க உதவியாக இருக்கிறது.

ஒருவன் வாழ்வில் முன்னேற நிறைய ஆசைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிறகு அதற்கு ஏற்றாற் போல் செயல்களைச், செய்து கொண்டு வந்தால் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும். அப்படி அவன் வெற்றி பெற்று, அதில் அவன் இன்பம் அடைந்து, போதும் என்று நினைத்துவிட்டால் அத்தோடு அவனது இன்பம் கண்காணாமல் மறைந்துவிடும்.

அவன் மேலும் ஆசையை வளர்த்துக் கொண்டு செயற்பட்டால் அவன் வாழ்வில் வளம் பெருகும். ஆசையானது நியாயமானதாக இருக்க வேண்டும். மனதிற்கு நேர்மையாகவும், தன்னால் முடியும் என்ற நம்பிக்கையுடையதாகவும் இருக்க வேண்டும்.

ஒருவன் இன்று பத்துப் பொருட்களைச் செய்து விற்றான் என்றால் அடுத்த நாள் இருபது பொருட்களைச் செய்து விற்க வேண்டும் என்ற ஆசை அவனுள் வளர வேண்டும்.

அது தான் அவனது நியாயமான ஆசையும் கூட. அது அவனால் முடியும்.

அதில் பல இடர்களைச் சந்தித்து முடிவில் வெற்றி பெறுவது நிச்சயம்.

ஒவ்வொரு உயர்ந்த மனிதனும் தான் பல துன்பங்களை அடைந்து இன்று உயர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பது நமக்கு அந்த வெற்றியை அடைகிறபோது தெரிய வரும்.

துன்பத்திற்குப் பின் கிடைக்கும் இன்பத்திற்குக் காரணம் ஆசையே ஆசையே....

வளர்க ஆசை,
உயர்க வாழ்வில்.

# விக்கிரம வருடம் உங்களுக்கு எப்படி?

## ராசிகளுக்கான பொதுப் பலன்

ஜோதிடர் 'கர்னர்'

தமிழ்ப் புத்தாண்டான விக்கிரம வருடப் பிறப்பையொட்டி இராசிகளுக்குரிய பொதுப்பலன்களை இங்கே தருகிறோம்.

**சென்ற வாரத் தொடர்ச்சி**

### துலாம்:

ஒருவருக்கு அமைக்கப்பட்டதே வாழ்க்கையில் கிடைக்கும். நமது தகுதிக்கு மீறி பல பொருட்களில் ஆசை வைக்கலாகாது. 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து', என்ற வாக்கியத்தை நம்புங்கள். அடிக்கடி நோய்கள் தலைகாட்டும். இதனால் மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனம் எதையும் வாங்க எண்ண வேண்டாம். விபத்தில் சிக்க நேரிடும். செவ்வாய் தோறும் அம்பாளை வழிபடுங்கள்.

### விருட்சிகம்:

பொதுவாகவே அமைதியாகவே வாழ்ந்து பழகியவர்கள் நீங்கள். ஆனால் மனதை மற்றவர்களுக்காக அலட்டிக் கொள்ள வேண்டாம். இருப்பினும் சொந்த விவகாரங்களில் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். மிக நெருங்கிய உறவினர்களைத் தவிர மற்றவர்களுடைய விவகாரங்களில் தலையிடுவது நல்லதல்ல. தொழில் காரணமாக பிரயாணம் மேற்கொள்ள வேண்டி வரும். வயிற்றில் உபாதைகள் தோன்றலாம் எனவே வாயைக் கட்டுப்படுத்துங்கள்.

### தனுசு:

கடவுள் துணையுடன் எக்காரியத்தையும் தொடங்கும் உங்களுக்கு அவன் வெற்றியையே அளிப்பான். பிறருடைய தவறுகளை வெளிப்படையாக சுட்டிக் காட்ட வேண்டாம். உங்கள் நோக்கத்தை அனுசரித்து அவர்கள் தெரிந்து விடுவார்கள். வெளிநாடுகள் போக வேண்டிய நிலை இருக்கும். முன் பின் தெரியாதவர்களிடம் பரிச்சயம் வைத்துக் கொள்ள வேண்டாம். சிறுசிறு உடல் உபாதைகள் ஏற்படும்.

### மகரம்:

எவரிடத்திலும் கடுமையாக நடக்க வேண்டாம் பழிவாங்குகிற எண்ணமும் வேண்டாம். செய்யும் தொழில் முன்னேற்றம் காணும். உங்களுக்கு இது நல்ல காலம். உங்களுக்கு நன்மை செய்பவர்களை சந்தேகப்பட்டு துரத்திவிட வேண்டாம். உங்களுக்கு வரும் தீங்குகளை பிரார்த்தனை மூலம் தீர்த்துவிடலாம். புதிய வீடு புதிய வாகனம் வாங்க நேரிடலாம்.

### கும்பம்:

தொடக்கத்தில் செய் தொழிலில் பலதரப்பட்ட இடையூறுகள் ஏற்படலாம். இதற்காக சோர்வடைய வேண்டாம். பிரச்சனைகள் தோன்றினாலும் இறுதியில் உங்களுக்குச் சாதகமாகவே தீர்ப்பு அமையும். இருப்பிடம் மாற வேண்டிவரும். அந்தரங்கமான விஷயங்களை வேறு எவரிடமும் கூறாதீர்கள். வேளா வேளைக்கு உணவருந்துங்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் சக ஊழியர்கள் பங்குதாரர்கள் ஆகியோரிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்.

### மீனம்:

வாழ்க்கையில் உங்களுக்கு பலவிதமான மேன்மைகளையும் தரும் காலமிது. ஆகவே சந்தேகத்தையும் மனச்சஞ்சலத்தையும் விட்டொழியுங்கள், வீட்டிலுள்ளோரிடம் கோபம் கொள்ளாமல் அன்பாகவே பழகுங்கள். உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் நீங்களே உழைத்தாக வேண்டும். செய்தொழிலிலோ அல்லது வீட்டு விவகாரங்களிலோ நீங்கள் தவறும்போது அதனை எவராவது சுட்டிக் காட்டினால் கோபம் கொள்ளலாகாது. பிறரிடம் கடன் வாங்க எண்ணவேண்டாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சின்னச் சின்ன ஆசை... அழகியாக ஆசை...!



அழகான பெண்களில் சிலருக்கு முகத்தில் முடி வளர்ந்து அவர்களின் அழகைக் கெடுத்து விடும்.

இதைக் கண்டு கவலைப் படாதீர்கள்.

அந்தக் காலப் பெண்கள் மஞ்சள் பூசிய முகத்துடன் மிளிர்ந்ததால் இந்த மாதிரியான கஷ்டம் அவர்களுக்கு வரவில்லை.

முகத்தில் மட்டுமன்றி கை, கால்களில் இருக்கும் முடிகளை அகற்றுவதற்கு மிகவும் இலகுவான முறைகள் அதிகம் உள்ளன. அவை என்னென்ன என்று பார்ப்போம்:

- ஆனி ஃபிரெஞ்ச் கிறீம் என்னும் ஒருவகை கிறீம் கடைகளில் கிடைக்கின்றது. இதை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இன்னொரு வழியும் உள்ளது.

ஒரு பெரிய எலுமிச்சம்பழத்தைச் சாறு பிழிந்து, அதில் சிறிது சீனி போட்டுக் காயத்து, பாகு போன்று வருவதற்கு முன் அதை இறக்கி வைத்துவிட வேண்டும்.

பின் அதை ஆற வைத்து, சுத்தமான வெள்ளைத் துணிகளைத் துண்டு துண்டாக வெட்டி வைத்துக் கொண்டு, அதில் இந்தக் கலவையைத் தடவி, முடி இருக்கும் இடத்தில் ஒட்ட வைத்துக் கொள்ளுங்கள்.

அதன் பின் பத்து நிமிடங்கள் கழித்து வெள்ளைத் துணியை எதிர்ப்புற திசையில் வேகமாக இழுக்கவும். இப்போது முடிகள் எல்லாம் வெள்ளைத்துணியில் வந்து விடும்.

## இதுதான் சரியான வழி

புரதம் அதிகமுள்ள சத்தான உணவுடன் நிறைய பழங்கள் காய்கறிகள் சாப்பிட வேண்டும்.

உங்களுக்கு உகந்த ஷம்பூவை வாரத்திற்கு இருமுறை தேய்த்துக் குளிக்கலாம்.

நான்கு அல்லது ஆறு வாரங்களுக்கு ஒரு முறை கூந்தலின் அடிப்பாகத்தை வெட்டி விட வேண்டும்.

தலைக்கு மட்டும் கிளிப்புக்கள் கடினமாக இல்லாமல் மென்மையாக இருக்க வேண்டும். நைலோன் அல்லது உலோக கிளிப்புக்களை மாட்டக் கூடாது.

ஈரத்தலையை எப்போதுமே வாரக் கூடாது. மாதத்திற்கு ஒரு முறை எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்ய வேண்டும்.

இவையெல்லாம் உங்கள் கேசத்தை அழகாக்கும் அருமையான வழிகள்.

## சுகப்பிரசவம் அமைய.....

பிரசவம் நன்கு அமைய, அந்த 10 மாதங்களில் நீங்கள் கடைப்பிடித்து நடக்க வேண்டியவை இவை:

- தினமும் காலை-மாலை இருமுறை குளியல் தேவை. நன்கு குளிர்ந்த நீரில் குளிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- மாலையில் தினமும் காலாற சிறிது தூரம் நடந்து வருதல் வேண்டும். இதனால் சுத்தமான காற்று, நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கும்.
- பிரசவ காலம் வரையில் எந்தப் பாரமான பொருட்களையும் தூக்காதீர்கள். சைக்கிள் சவாரி, தையல் வேலைகளில் ஈடுபடுதல் கூடாது. 7 மாதமானால் அதிகபட்ச வேலைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
- கர்ப்பமான முதல் மூன்று மாதங்களிலும், கடைசி மூன்று மாதங்களிலும் பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- கர்ப்பமான நாள் முதல் இடுப்பில் ஆடைகளை அழுந்தக் கட்டாதீர்கள்.
- கர்ப்ப காலத்தின் போது சாப்பாட்டில் உப்பைக் கொஞ்சம் குறைத்து கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.



- இரவில் நீண்ட நேரம் கண் விழிக்காதீர்கள். நிம்மதியாகத் தூங்குங்கள்.
- கவலைகளை அறவே விட்டு, விட்டு மனதை சிலாக்கியமாக்கிக் கொள்ளுங்கள்.
- முதல் மூன்று மாதங்களிலும் கடைசி இரண்டு மாதங்களிலும் கணவருடன் இணைவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- மாதம் ஒரு முறை கட்டாயம் மருத்துவரைச் சந்தித்து மருத்துவ சோதனைகளைச் செய்து கொள்ளுங்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** HL

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-05-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**மஸ்கெலிய வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி வி. பரமேஸ்வரி,
பிறவுன்ஸ்விக் டிஸ்பென்சறி, மஸ்கெலிய

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


வழங்குவது புவனா 35

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரன் சட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் அனேகமாக அரசியலில் அதிகம் பிடிப்பில்லாதவராக இருந்தார். ஜனநாயகக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட எட்வேட் கென்னடி, துரதிஷ்டமான ஒரு சூழ்நிலையில் சிக்கி ஜனாதிபதியாகும் வாய்ப்பினை இழந்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னோடி பிரசாரக் கூட்டங்களுக்காக, கென்னடியுடன் ஒரே மோட்டாரில் மேரிஜோ கொப்சினி என்ற பெண்மணி பயணம் செய்தார். கென்னடி செலுத்திச் சென்ற வண்டி ஒரு நீர் ஏரியில் வீழ்ந்து விட்டது. சேறு நிறைந்த அந்த ஏரியில் மூழ்கிய மேரிஜோ பிணமாகத்தான் மீட்கப்பட்டார். இதனால் எட்வேட் கென்னடி குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பினை இழந்தார். இதன் பயனாக கிளின்ரனுக்கு ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் கிட்டியது.

கிளின்ரன் மாணவனாக இருந்த போது தனது நண்பர் ஒருவரிடம் பாலியல் மற்றும் அரசியல் பற்றி உரையாடுகையில், இவ்வாறு ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்: "அரசியல் ஒருவனுக்கு அதிக வசதிகளையும் சக்தியையும் தருகிறது. தனது சொந்த அபிலாசைகளை நிறைவேற்ற அரசியல்வாதிக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. பெண்கள் விடயத்திலும் அரசியல்வாதி தன் இச்சைகளைச் சுலபமாகத் தீர்த்துக் கொள்ள முடிகிறது. அத்தகைய அரசியல் ஈடுபாட்டைவிரும்பும் நிலையில் நான் இல்லை."

இவ்வாறு பிற்காலத்தில் அரசியலில் குதிப்பதற்கு முன்னர் கருத்துத் தெரிவித்த கிளின்ரன், இளமைப் பருவத்தில் பாலியல் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டவராகவே இருந்துள்ளார். பெண்களைச் சுலபமாகக் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி அவரிடம் இருந்தமையினால் மிகவும் சுலபமாக பல அழகிகள் அவரை அணுக ஆரம்பித்தனர்.

### தனிமையைப் போக்க....

கிளின்ரன், ஹிலரியை மணம் முடித்து, மகள் செல்சியா பிறந்த பின்னர், கணவன்-மனைவி உறவு அனுகூலமாக அமைந்திருக்கவில்லை என்றே, அவரை அவதானித்து வந்தவர்கள் கருதுகின்றனர். இரவு வேளைகளில்-ஜனாதிபதி பதவி ஏற்றபின்னரும்- பெரும்பாலும் அவர் தனிமையாகவே காலம் கழிப்பாராம். தனது தனிமையை விரட்ட அவருக்கு 'சக்ச :போன்' என்ற வாத்தியக் கருவியே உதவியதாகக் கூறப்படுகிறது. அக்கருவியை எடுத்து தனக்கு விருப்பமான இராகங்களை வாசித்தே தன் தனிமையைப் போக்கடிப்பாராம்.

கிளின்ரன், மோனிக்காவை ஒரு பாலியல் பொம்மையாக மட்டும் கருதியவரல்ல. அவளை உள்ளன்போடு நேசித்தார். மோனிக்காவும் அவ்வாறே அவரை மனப்பூர்வமாக விரும்பினாள்.

கிளின்ரனுக்கு 50 வயதாகி விட்டது. மோனிக்காவுக்கு அவருடைய வயதில் பாதி மட்டும் ஆகியிருந்தது. இருப்பினும் வயது வரம்பைக் கடந்து அவர்களுடைய காதல் வளர்ந்தது.

மோனிக்கா வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியமைக்கு கிளின்ரன் மனப் பூர்வமாக வருந்தினார். அமெரிக்க நாட்டின் சர்வவல்லமை பொருந்திய தனித் தலைவராக இருந்தும், மோனிக்காவின் விடயத்தில் தலையிட்டு அவளுடைய வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாமற் போய் விட்டது அவருக்கு. இந்த அற்ப விடயத்தில் 'என் ஆசைக்குரியவளை என் அருகிலிருந்து அப்புறப்படுத்துவோரைத் தடுக்க முடியாத இப்பெரிய பதவியால் என்ன பயன்?' என்று கூட ஒரு சந்தர்ப்பத்தில் மனம் வருந்தினார். தான் ஒரு சாதாரண பிரஜையாகவே இருந்திருந்தால் மேலாக இருந்திருக்குமே என்றும் கருதினார்.

### மனம் மாறவில்லை

மோனிக்கா மீது கிளின்ரன் உண்மையான காதல் கொண்டிராமல், அவளை வெறும் காதல் விளையாட்டுப் பொம்மையாக வைத்திருந்திருப்பாரானால் இத்தகைய மன வேதனை அவரை இவ்வளவு தூரம் வாட்டியிருக்காது. 'மோனிக்கா போனால் என்ன; இன்னும் எத்தனையோ மோனிக்காக்களை நான் கவர்ந்து இழுக்கமாட்டேனா?' என்று கிளின்ரன் எண்ணவில்லை.

மோனிக்கா பென்டகன் சென்றபின், பல மாதங்கள் கிளின்ரனும் மோனிக்காவும் ஒருவரை ஒருவர் நேரடியாகப் பார்த்துப் பேச வாய்ப்புக் கிட்டவில்லை. இருப்பினும் தொலைபேசியில் இருவரும் மணிக்கணக்காக உரையாடுவார்கள், மகிழ்ச்சியாக உரையாடுவதுடன் மட்டுமல்ல, ஊடலும் இடம்பெறும். ஒரு முறை கிளின்ரனுடன் தொலைபேசியில் கோபத்துடன் மோனிக்கா சண்டைபோட்டாள்.

மோனிக்காவின் பிறந்தநாளன்று இரவு தனக்காகத் தான் விரும்பும் ஒரு பாடலை சக்ச :போனில் இசைத்துக் காட்ட வேண்டும் என்று மோனிக்கா அடம் பிடித்தாள். ஆனால் ஏதோவொரு காரணத்தால், அவளுடைய கோரிக்கையை கிளின்ரனால் நிறைவேற்றமுடியாமற் போய்விட்டது. சண்டை போட்டு, விம்மி அழுது தீர்த்தாள் மோனிக்கா. எல்லாம் தொலைபேசி ஊடாகத்தான்.

### உயர் பதவி

மோனிக்கா பெண்டகன் பணியினை 1996 ஏப்பிரல் 16ம் திகதி அன்று ஏற்றாள். அவளுக்கு அளிக்கப்பட்ட பதவி உண்மையில் மிகவும் உயர்தரமானதுதான், பொது விவகாரங்களுக்குரிய பாதுகாப்புத் துறையின் துணைச் செயலாளரின் அந்தரங்கக் காரியதரிசி பதவி அவளுக்குத் தரப்பட்டது. வெள்ளை மாளிகையில் மோனிக்காவுக்கு ஆண்டொன்றுக்கு 25 ஆயிரம் டொலர் சம்பளம் கொடுக்கப்பட்டது. ஆனால் புதிய பதவிக்காக மேலும் மூவாயிரம் டொலர் அதிகமாக-மொத்தம் 28 ஆயிரம் டொலர் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது.

### பிடிக்காத புதிய பணி



மோனிக்காவின் பிரிவில் பணிபுரிந்தவர்களில் அவள்தான் வயதில் குறைந்தவளாகக் காணப்பட்டாள். மோனிக்கா வலிந்து சிரித்தாலும் அங்கு பணிபுரிபவர்கள் தங்கள் பல்லைக்கூடக் காட்டுவதற்குத் தயங்குவார்கள். எல்லோருடைய முகமும் இறுக்கமாகவே இருக்கும்.

அந்தரங்கமான தகவல்கள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களை எழுத்துருவில் மாற்றி அமைக்கும் பிரதான பணி அவளுக்குரியது. எப்படியிருப்பினும்-சம்பளம் அதிகரிக்கப்பட்டிருப்பினும்- இந்தப் புதிய சூழ்நிலை மோனிக்காவுக்குப் பிடிக்கவே இல்லை. அங்குள்ள மேசை கதிரைபோன்ற தளபாடங்களும் முரட்டுத்தனமானவையாகவே காணப்பட்டன. சுவர்களுக்குப் பூசப்பட்டிருந்த வர்ணமும் பார்க்க வெறுப்பையே ஊட்டியது. முக்கியமாக வெள்ளை மாளிகையில், தான் இருந்து பணிபுரிந்த இடத்திலிருந்து சற்றுத்தொலைவில் தான் தனது 'அன்புக்குரியவரான கிளின்ரன் இருக்கிறார்' என்ற எண்ணம் உள்ளத்தில் வியாபித்திருந்தது. ஆனால் அத்தகைய எண்ணம் இங்கு ஏற்படவாய்ப்பிருக்கவில்லை, தனது அலுவலக இருக்கையில் இருந்த வண்ணம் சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டு 'கிளின்ரன் அண்மையில் ஒவல் அலுவலகத்தில் இருக்கிறார்'. என்று கற்பனை பண்ணிப் பார்ப்பாள். அவளுக்குரிய வேலை ஒய்வெடுக்கவே முடியாத அளவு பொறுப்பு வாய்ந்ததொன்றாகவே இருந்தது. இருப்பினும் எக்காரிய மானாலும் தனது மேசையை விட்டு எங்கும் அசையாமல் இருப்பாள். கிளின்ரனின் தொலைபேசி அழைப்பு வரக் கூடும் என்று காத்திருப்பாள்.


### காத்திருப்பு

'எப்படியும் இன்னும் ஆறு மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப்போகிறது. நிச்சயமாக கிளின்ரனே வெற்றிபெறுவார். எப்படியும் என்னை மீண்டும் வெள்ளை மாளிகைக்கு இழுத்து விடுவார்,' என்று மோனிக்கா சற்று ஆறுதலடைந்தாள்.

மோனிக்கா பெண்டகனுக்கு அவசரமாக மாற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் எவைமின் லைபர்மான் என்ற பெண் அதிகாரி என்பதனை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, கிளின்ரன் மோனிக்காவிடம் கூறினார். அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடவிருக்கும் பில் கிளின்ரனுடன் மோனிக்கா நெருங்கிப்பழகுவது தொடர்பான வதந்திகள் பரவத்தொடங்கி விட்டிந்தமையினால், இந்தத் தொடர்பினைத் தடுக்கவே எவைமின் மோனிக்காவை இடமாற்றம் செய்ய ஏற்பாடு செய்தாராம்.

இத்தகவலைக் கூறிய கிளின்ரன், 'மோனிக்கா பெண்டகன் பணியிலிருந்து விலகி, தன்னுடைய பிரசார அணியில் சேர்ந்து கொண்டால் என்ன,' என்று கேட்டார். ஆனால், மோனிக்கா அந்த யோசனையை ஏற்கவில்லை. அதே பிரசாரக்குழுவில் எவைமின் போன்றவர்களே முக்கியமான இடம் பெற்றிப்பார்கள் என்பதனால் மேலும் வம்புகளைத் தேடவேண்டி ஏற்படுமே, என்று கூறி மறுத்துவிட்டாள்.

(வருவாள்)



## பாப்பா முரசு சிறுகதை

# சபாஷ்! சரியான போட்டி

கொட்டூர் என்ற நாட்டை ஆண்டு வந்தான் அஜய் சந்த் என்ற மன்னன். மகாராணி கோகிலா பேரழகி. அரசனுக்கு ஏற்ற தர்ம பத்தினி, நாட்டை மிகச் சிறப்பாக ஆண்டுவந்தான் அஜய். அவனுக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அதாவது கொட்டூர் இராணுவத்தை மாற்றி அமைத்து இன்னும் சிறப்புடையதாகச் செய்து கொண்டிருந்தான். வலிமைமிக்க தாயும், எதிரிகளால் ஊடுருவ முடியாத படி புதிய அரண்களை அமைத்து புதுமை செய்தான்.

தற்போது தளபதி பதவியில் யாரை அமர்த்துவது என்பதில் தான் சிக்கலே பிறந்தது. மூன்று வீரர்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினர். எத்தனையோ போட்டிகள் வைத்த போதிலும் மூவருமே சம அளவு மதிப்பெண்கள் பெற்றிருந்தனர்.

ஆனால், அவர்களில் ராஜா ஒருவரையும், மற்ற இருவரையும் மந்திரிகள் பரிந்துரைச் செய்தனர். எனவே தான் குழப்பமே உருவானது.

அப்போது அரசர் சொன்னார்:

"இந்த வீரர்கள் மூவருக்கும் போட்டி என்று சொல்லாமலே ஒரு சோதனை செய்யப் போகிறேன். அதில் வெற்றி பெறுபவருக்கே தளபதி பதவி," என்றார் அரசர். மந்திரிகளும் அதற்குச் சம்மதித்தனர்.

மறுநாள் தர்பார் மண்டபத்தில் ராஜா அமர்ந்திருந்தார். மந்திரிப் பிரதானிகளுடன், அந்த மூன்று வீரர்களும் அமர்ந்திருந்தனர். அப்போது ஒளிவீசும் வைரக்கல் ஒன்றை எடுத்தார். அரசர், மூவரில் ஒருவனை அழைத்து. "இந்தக் கல்லின் மதிப்பு என்ன தெரியுமா?" என்றார்.

கண் கவர் வர்ணத்தில் கண்ணைப் பறித்த அந்த வைரக்கல்லை உற்றுப் பார்த்த வீரர், "இது மிகவும் விலை மதிக்க முடியாதது அரசே! இதன் பேரொளியில் இருந்தே இது மிக அபூர்வமான கல் என்பது தெரிகிறது அரசே," என்றான்.

"சரி! இந்தக் கல்லை உடைத்து இரண்டாக்கு," என்றார் அரசர்.

பதறிப் போனவீரன், "அரசே! விலையுயர்ந்த இந்த வைரத்தை உடைத்து சிதைப்பதன் மூலம் உங்களுக்கு பேரிழப்பை எப்படி நான் உண்டாக்க முடியும்? நூறு மாடுகள் சுமக்கும் பொற்காசை விட இதன் மதிப்பு அதிகமாக இருக்கும். இத்தனை விலையுயர்ந்த பொருளை எடுத்து எப்படி நாசம் செய்யவேன். தயவு செய்து உங்கள் கட்டளையை மீறிய என்னை மன்னியுங்கள் அரசே," என்றார். மிகவும் மகிழ்ச்சியடைந்த அரசர், அவனுக்கு ஒரு பரிசை வழங்கி கவுரவித்தார்.

அடுத்த வீரனை அழைத்தார் அரசர். அவனிடமும் "இதன் மதிப்பு என்ன?" என்று கேட்டார். அவனும் "யாருக்குமே எளிதில் கிடைக்காத அபூர்வ வைரம் இது. இதன் மதிப்பு விலையிட முடியாதது. அத்தனை உயர்ந்தது," என்றான்.

"சரி! இந்த வைரத்தை உடைத்து தூளாக்கு," என்றார் அரசர்.



"மன்னிக்க வேண்டும் அரசே! தங்களது மணிமுடியில் பதித்து வைத்து சிறப்பிக்கப்பட வேண்டிய பேரொளி படைத்த பொக்கிஷமான, இந்த அபூர்வ வைரத்தை நான் உடைத்து சிதைப்பதா? தயவு செய்து தங்கள் கட்டளையை மீறிய என்னை மன்னியுங்கள் அரசே!" என்றான்.

"ஹா... ஹா..." என்று சிரித்த அரசர் அவனுக்கும் விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை கொடுத்து கவுரவித்தான். மூன்றாவது வீரனை அழைத்தார் அமைச்சர். அவனிடமும் "இதன் மதிப்பு என்ன?" என்றார்' "விலையுயர்ந்த வைரத்துக்கு நான் சொல்லும் விலை ஈடாகாது அரசே," என்றான்.

"நல்லது. இந்த வைரத்தை உடைத்து தூளாக்கு," என்றார்.

சட்டென்று கத்தியை எடுத்து அந்த வைரத்தை உடைத்து தூளாக்கினான். இதைக் கண்ட அவையோர் திடுக்கிட்டனர். "என்ன காரியம் செயது விட்டான் பாருங்கள். இப்படிச் செய்ததால் நாட்டிற்கு எவ்வளவு இழப்பு தெரியுமா?" என்று சப்தமிட்டனர் அமைச்சர்கள். அதற்கு வீரன், "அரசர் பெருமானே! இந்த வைரம் விலை மதிப்பற்றது என்பது உண்மைதான். ஆனால் எனக்கு இதை விட என் அரசின் கட்டளை விலை மதிப்பற்றது. இது எத்தனை உயர்ந்த பொருளாக இருப்பினும் என் கண்களுக்கு இது ஒரு சாதாரண கல் போன்றது. இந்தக் கல்லுக்கு நான் கொடுக்கும் மதிப்பை விட, என் அரசரின் கட்டளைக்கு நான் கொடுக்கும் மதிப்பே சிறந்தது," என்றான் பணிவுடன்.

"சபாஷ்" என்று துள்ளி குதித்தார் அரசர்.


"ஒரு நாட்டின் தளபதி பதவி என்பது மிகவும் உயர்ந்த பதவி. இராணுவ ரகசியங்கள் மற்றும் ஒரு நாட்டின் வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பது என்பது அந்த நாட்டின் தளபதி கையில் தான் உள்ளது. அந்தத் தளபதி அரசரின் கட்டளையைச் சிரம்மேற்கொண்டு செய்பவராகவும், பணத்துக்கு மயங்காதவராகவும் இருக்க வேண்டும். இந்தக் தகுதிகள் அனைத்தும் நிரம்பிய உனக்கு தளபதி பட்டம் கொடுத்து கவுரவிக்கிறேன். அத்துடன் என் அன்பு பரிசாக இந்த வைர மாலையை உனக்கு அளிக்கிறேன்," என்றார் அரசர்.

தன் கணவரின் சரியான தேர்வை கண்டு மகிழ்ந்தார் மகாராணி. அமைச்சர்களும் அரசனின் புத்திசாலித்தனத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.




கோயிலுக்கு வந்த பெண், கோயில் குளத்தில் தண்ணீர் குடத்தைப் போட்டு விட்டாள்.

குடத்தை நெருங்கப் பாதை தெரியாமல் இருக்கும் பெண்ணுக்கு வழி காட்டுங்கள்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.05.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **341**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 339

பரிசுக்குரியவர்:
அமரநாதன் ஆஷா
தமிழ் மத்திய மகா வித்தியாலயம், பண்டாரவளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இஸ்மத் பானு இக்பால்<br>முன்வது கொடை முஸ்லிம் வித்தியாலயம்,தந்துரை. | எம்.மிஹால்,<br>ஸாஹிராக் கல்லூரி, கல்முனை-05. |
| ஆர்.கவிதர்ஸனி,<br>இந்து மகளிர் பாடசாலை, வெள்ளவத்தை, கொழும்பு-06. | சாள்ஸ் சீவரட்ணம்,<br>பரி.தோமாவின் கல்லூரி, கல்கிசை. |
| ஜே.பிரசாஞ்சலி,<br>நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், லிந்துல. | கே.அனுஹாசினி,<br>நுவரெலியா வீதி, தலவாக்கலை. |
| எம்.ஃபஸூலி,<br>விஜயரெட்ணம், ஐ.எம்.சி., நீர்கொழும்பு. | ரம்லா ரவுஸ்டீன்,<br>புனித அந்திரேயர் மகளிர் மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி. |
| ஜெயக்குமார் மலர்சாந்தன்,<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | சிவலிங்கம் லயனி,<br>இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வவுனியா. |

## புத்திசாலி 'கபுசின்'



சாதுவான மிருகங்கள் மனிதர்களுக்கு உதவியாக இருக்கும். அமெரிக்காவில் உள்ள 'கபுசின்' என்ற இனக் குரங்குகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவை மனிதர்களுக்கு உற்ற த்துணையாகப் பயன் படுத்தப்படுகின்றன.

கழுத்துக்குக் கீழே செயலற்றுப் போகும் 'குவாட்டரி பிலெஜிக்' நோய் வந்தவர்களுக்கு இந்த குரங்குகள் உதவுகின்றன.

'கபுசின்' குரங்குகள் உருவத்தில் சிறியவை. இவை 46 சென்ரி மீட்டர் உயரம் வளரும். எடை 2 கிலோ. ஆனால் மிகவும் புத்திக்கூர்மையுடையவை. மனிதர்களை நேசிக்கும் இவைக்கு என்ன சொல்லிக் கொடுத்தாலும் உடனே பிடித்துக்கொள்ளும்.

படுக்கையிலோ, சக்கர நாற்காலிகளிலோ, இருக்கும் 'குவாடட்ரி பிலெஜிக்' நோயாளிகள் இந்தக் குரங்குகளை தொலைக்காட்சி, வானொலி போட, உணவு தர, கதவைச் சாத்தப் பயன் படுத்துகின்றனர்.

தன் எஜமானர் எதைச் சொல்கிறாரோ, அதை மட்டும் செய்யும். மற்றப்படி குரங்குத்தனமான சேட்டைகள் ஒன்றும் செய்யாது.

## செய்து பாருங்கள்



### இலை முகமூடி

**தேவையான பொருட்கள்:**

காய்ந்த இலைகள், இரண்டு கடதாசித் தட்டுக்கள், பசை, கத்தரிக்கோல், ரிபன், வார்னிஷ் மற்றும் பிரஷ்.

**செய்முறை:**

1. இரண்டு கடதாசித் தட்டுக்களையும் ஒட்டி, இருபுறமும் துளை போட்டுக் கொள்ளுங்கள்.
2. கண் மற்றும் வாய் பகுதிகளில் துளை போடவும்.
3. இலைகளை பேப்பர் பிளேட்டின் மேல் பகுதியில், மேல் நோக்கி முடிபோல் ஒட்டவும்.
4. கண், மூக்கு, வாய்ப் பகுதிகளில் எப்படி இலைகள் ஒட்டப்பட்டுள்ளதோ அதே போல் ஒட்டுங்கள்.
5. படத்தில் உள்ளது போல இலை முழுவதும் ஒட்டிய பிறகு வார்னிஷ் அடித்துக் காய விடுங்கள்.
6. துளையிட்டுக் கொண்ட இடங்களில் ரிபனை வைத்துக் கட்டி, உங்கள் முகம் மீது வைத்துக் கட்டி விளையாடுங்கள்.



# திக் திக் தொடர்

# 23 சிகப்பு வணக்கம்

கசங்கியிருந்த அந்தக் காகிதத்தில் டைப் அடிக்கப்பட்டிருந்த அந்த வரிகளை மறுபடியும் படித்தான் விவேக்.

***அதிர்ஷ்டம் மூன்று தடவை நரேஷைக் காப்பாற்றிவிட்டது. நான்காவது தடவை அவன் தப்ப முடியாது. அவனுக்கு சிகப்பு வணக்கம் வைக்க நேரம் நெருங்கி விட்டது.***

விவேக் ஃபாரன்ஸிக் நபரை ஏறிட்டான்.

"இது எங்கே கிடைச்சுது...?"

"அந்த குரோட்டன்ஸ் தொட்டிக்குப் பக்கத்துல ஸார்...!"

"எந்த இடம்னு வந்து காட்டுங்க...!"

ஃபாரன்ஸிக் நபர் கூட்டிக்கொண்டு போய்காட்ட, விவேக் அந்த குரோட்டன்ஸ் தொட்டிக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டு, பார்வையை நான்கு பக்கங்களுக்கும் துரத்தினான்.

தோட்டத்தின் முன் பகுதி அது. சுற்றிலும் செக்யூரிடி தெரிந்தார்கள்.

'இவ்வளவு பாதுகாப்புகள் செய்யப்பட்டு இருக்கும்போது யார் இங்கே வந்து இந்தக் காகித உருண்டையை வீசி விட்டுப் போயிருக்க முடியும்...?'

விவேக் தாடையைத் தடவி யோசித்துக் கொண்டிருக்கும்போதே அஸிஸ்டெண்ட் கமிஷனர் சார்லஸ் வேக வேகமாய்ப் பக்கத்தில் வந்து நின்றார்.

"ஸார்... சி.ஆர்.எஃப் போலீஸுக்குத் தகவல் கொடுத்துட்டேன். பத்து நிமிஷத்தில வந்துடுவாங்க. இப்ப செக்யூரிட்டியில் இருக்கிற போலீஸை அவுட்டர் விங்க்ல போட்டுக்கலாமா ஸார்...?"

"வேண்டாம்... இப்போது இருக்கிற இந்த செக்யூரிட்டி அமைப்பில் கண்ணுக்குப் புலப்படாத ஓட்டை இருக்கிறது. போலீஸ் ஆட்களிலேயே யாரோ ஒரு நபர் எதிரிகளுக்கு விசுவாசமாக இருக்கிற மாதிரி தெரியுது... இந்த லெட்டரைப் பார்த்தீங்களா...?"

விவேக் கையில் இருந்த கசங்கிய காகிதத்தை நீட்ட, சார்லஸ் வாங்கிப் பார்த்துவிட்டு கலவர முகத்துடன் நிமிர்ந்தார்.

"என்ன ஸார் இது...! இவ்வளவு டைட் செக்யூரிடி இருக்கும்போதே இவ்வளவு துணிச்சலா காரியங்கள் நடக்குது?"

"எதிரி புத்திசாலின்னு தெரியுது... இதேசெக்யூரிடி ஆட்களை கண்டினியூ பண்ணினா, கிரிக்கெட் காப்டன் நரேஷை ஏதாவது ஒரு சமயத்துல இழந்துடுவோம்..."

"ஸார்... அது மட்டும் நடக்கக் கூடாது. நடந்தா, இந்தியாவே கொந்தளிச்சுப் போயிடும்... தமிழ்நாட்டுப் போலீஸுக்கு இருக்கிற நல்ல பெயர் உலகளவில் பாதிக்கப்படும்..."

"ஐ... நோ மிஸ்டர் சார்லஸ்... இனிமேற்கொண்டு எந்தவிதமான ஒரு அசம்பாவிதமும் நடக்காம இருக்கணும்னா, செக்யூரிட்டியை டைட்டன் பண்ணி, லாயலா இருக்கிற சில போலீஸ் ஆபீஸர்ஸை இருபத்தி நாலுமணி நேரமும் இன்னர் விங்க் செக்யூரிட்டியில் போட்டு, கிரிக்கெட் காப்டன் நரேஷுக்குப் பாதுகாப்பு கொடுக்கணும்..."

"உங்க இன்ஸ்ட்ரக்ஷன்படியே எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிடறேன் ஸார்..."

"தட்ஸ் குட்... ஒவ்வொரு நிமிஷமும் இன்டென்ஸிவ் கேர் இருக்கணும்... நரேஷை நேரிடையா பார்த்துபேசுகிற பொறுப்பை நீங்க எடுத்துக்குங்க... வேற யாரையும் அலவ் பண்ண வேண்டாம்..."

"எஸ்...ஸார்..."

"தோட்டா இன்னும் கைக்குக் கிடைக்கலை... சி.ஆர்.எஃப்பை விட்டு நல்லா சர்ச் பண்ணச் சொல்லுங்க. தோட்டா கைக்குக் கிடைச்சாத்தான் மேற்கொண்டு எதிரியை நோக்கி மூவ் பண்ண முடியும். மற்ற வீரர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கா...?"

"அவங்க எல்லாரும் ஹோட்டல்ல தங்கியிருக்கிறதுனால எந்தப் பிரச்சனையும் இல்லை ஸார்... கொலையாளிகள் பிடிபட்டு, நிலைமை சீரானதும்தான் அவங்களை அவங்க சொந்த ஊர்களுக்கு அனுப்ப முடியும்..."

"மிஸ்டர் சார்லஸ்... கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா கொலையுண்ட விவகாரத்தில், நமக்கு கிடைச்சிருக்கிற ஒரு துருப்புச் சீட்டு ஜ்யோதி. அவளை என்கொயரி பண்ணினா ஏதாவது விஷயம் கசியலாம்னு நினைக்கிறேன்... நான் அவளை ஹேண்டில் பண்ணிக்கறேன். நீங்க செக்யூரிட்டியைப் பார்த்துக்குங்க..."

"எஸ்... ஸார்..." - சார்லஸ் அட்டென்ஷனுக்கு வர, விவேக் வேக நடையில் வெளியே வந்தான்.

சி.ஆர்.எஃப். போலீஸ் ரைபிள்களோடு வேனிலிருந்து குதித்துக் கொண்டிருக்க, விவேக் 'மாருதி ஜென்'னுக்குள் நுழைந்து அதைக் கனைக்க வைத்து நகர்த்தினான்.

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

மகாராணி காலனி, நிறைய மேஃப்ளவர் மரங்களோடு வந்தது. வீடுகள் நெருக்கமில்லாமல் தள்ளித் தள்ளி தெரிந்தது. நிறைய காலி மனைகள் விற்பனைக்குத் தயார் என்று ஃபோன் நம்பர்களைக் கொடுத்து இருந்தன.

விவேக் காலனியின் முதல் குறுக்குத் தெருவைக் கண்டுபிடித்து அதன் முனையில் காரை நிறுத்திக்கொண்டு கீழே இறங்கினான்.

ஆள் நடமாட்டம் இல்லாத அந்த இன்ஸ்டண்ட் தார்ச்சாலையில் மெல்ல நடந்தான்.

சிறிது தூரம் நடந்ததுமே மொபைல் இஸ்திரி வண்டி ஒன்று எதிர்ப்பட்டது. லுங்கி கட்டிய நபரின் வாயில் அடர்த்தியாய் பீடிப் புகை.

"இந்தாப்பா... நில்லு...!"

வண்டி நின்றது. விவேக்கின் தோற்றத்தைப் பார்த்து லேசாய் மிரண்டு போனவன், பீடியைக் கீழே போட்டு விட்டு, ஏற்றிக் கட்டியிருந்த லுங்கியைக் கீழே தழைய விட்டான்.

"ஸார்..."

"இங்கே...ஜ்யோதி வீடு எது...?"

"அந்த சேட்டுப் பொண்ணா ஸார்...?"

விவேக் தலையாட்டி வைத்தான்.

"அதோ... அந்த வீடுதான் ஸார்..." சற்றுத் தொலைவில் மரங்களுக்கு மத்தியில் ஒளிந்திருந்த டைல்ஸ் ஒட்டியகுட்டி பங்களா ஒன்றைக் காட்டினான்.

விவேக் நடந்தான்.

இரண்டு நிமிஷ நடையில் பங்களா வந்தது. வாசலில் இரண்டு அசோகா மரங்கள். கூர் சீவிய பென்சில்களைப் போல் நின்று தலையாட்டிக் கொண்டிருந்தன.

காம்பௌண்ட் கேட்டின் மேல் கையை வைத்ததுமே நாயின் குரைப்புச் சத்தம் எங்கிருந்தோ கேட்டது.

அதைத் தொடர்ந்து போர்டிகோவில் வேலையாள் ஒருவனின் தலை முளைத்தது.

"யாருங்க அது...?" கேட்டுக் கொண்டே பக்கத்தில் வந்தான்.

விவேக் கேட்டான்.

ஜ்யோதி வீடு இதுதானே...?"

"ஆமாங்க..."

"அவங்க இருக்காங்களா...?"

"நீங்க யாரு...?"

"போலீஸ்..."

வேலையாள் முகம் சட்டென்று ஒரு கணம் மாறி பழைய இயல்புக்கு வந்தது. காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டே சொன்னான்.

"அம்மா வெளியே போயிருக்காங்க..."

"வெளியன்னா எங்கே?"

"க்ளப்புக்கு..."

"வீட்ல வேற யார் இருக்காங்க?"

"ஆகாஷ் அய்யா இருக்காங்க..."

"யாரது ஆகாஷ்...?"

"அம்மாவோட அண்ணன்..."

விவேக் போர்டிகோ படி ஏறிக் கொண்டிருக்கும்போதே கதவைத் திறந்தபடி அந்த இளைஞன் வெளிப்பட்டான். விலையுயர்ந்த சிங்கப்பூர் லுங்கியை இடுப்புக்குக் கொடுத்து மெலிதாய் சட்டை போட்டிருந்தான். நாசியின் மேல் ரீடிங் க்ளாஸ் தொற்றியிருந்தது.

விவேக் கேட்டான்.

"நீங்கதான் ஆகாஷா...?"

"ஆமா...! நீங்க...?"

"வாங்க... உள்ளே போய் பேசுவோம்.."

போனார்கள். ஆகாஷ் சோபாவைக் காட்டிவிட்டு, எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

விவேக் தான் யார் என்பதை அறிமுகப்படுத்திக் கொண்டபின் மெல்லிய குரலில் கேட்டான்.

"ஜ்யோதி உங்க சிஸ்டர்தானே?"

"ஆமா ஸார்..."

"நீங்க என்ன பண்றீங்க..?"

"நான் ஒரு கம்பியூட்டர் என்ஜினியர் ஸார்... செவன்த் சென்ஸ் கம்பியூட்டர் கம்பெனியில் டெக்னிக்கல் அட்வைஸரா இருக்கேன்..."

"கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா கொலையானது பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க...?"

"எனக்கும் ஜ்யோதிக்கும் அது ஒரு பெரிய அதிர்ச்சி ஸார்...! இன்னமும் அந்த அதிர்ச்சியிலிருந்து நாங்க மீளலை...ஜ்யோதி ரொம்பவே அப்செட். இன்னிக்குத்தான் வெளியே போனா..."

"மிஸ்டர் ஆகாஷ்...! உங்க சிஸ்டருக்கும் ஆச்சார்யாவுக்கும் இருந்த தொடர்பு உங்களுக்கு உறுத்தலா படலையா?"

"ஆரம்பத்துல உறுத்தலா இருந்தது... ஜ்யோதிக்கு அட்வைஸ் கூட பண்ணிப் பார்த்தேன். அவ கேட்கலை... சரி; அவ இஷ்டப்படியே இருந்துட்டுப் போகட்டும்னு நான் விட்டுவிட்டேன்..."

"ஆச்சார்யாவுக்கும் உங்களுக்கும் இது விஷயமா எந்த மனஸ்தாபமும் கிடையாது..?"

"கிடையாது... அவர் தொடர்பு கிடைச்ச பின்னாடிதான் ஜ்யோதியும் நானும் சந்தோஷமாயிருந்தோம். இந்த வீடு கூட அவர் வாங்கிக் கொடுத்தது தான்..."

"ஆச்சார்யா இந்த வீட்டுக்கு வந்து தங்கறது உண்டா...?"

"சனி ஞாயிறுகளில் இங்கேதான் இருப்பார்... அவருக்காக இந்த வீட்ல தனி ரூமே இருக்கு..."


விவேக் தன் சட்டைப் பாக்கெட்டில் கையைவிட்டு, அந்த ஃபோட்டோவை எடுத்தான். ஆகாஷுக்குக் காட்டினான்.

"இந்தப் ஃபோட்டோவில் ஜ்யோதி ஒரு வெளிநாட்டுப் பெண் மாதிரி இருக்கா... இது ஜ்யோதியோட உண்மையான தோற்றமா... இல்லை... மேக்கப்பா...?

"மேக்கப்தான்... ஒரு வெளிநாட்டு பீர் கம்பெனிக்கு விளம்பர மாடலா இருந்த போது, எடுத்த ஃபோட்டோ இது... உங்களுக்கு இதை யார் கொடுத்தது?"

"இதை யாரும் எனக்குக் கொடுக்கலை. ஆச்சார்யா விரும்பிப் படிக்கிற ஒரு கிரிக்கெட் புஸ்தகத்தில் இந்த ஃபோட்டோ இருந்தது..."

(தொடர்ந்து வரும்)



'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.


# சத்தம் யுத்தம் 33

## பாவ பயமும் புண்ணியமும்

லேப்ரிஸல்ட் வந்தபிறகு சொல்லலாம் என்று மனதை திடப்படுத்திக் கொண்டு நிம்மதி இல்லாமலே சென்னை வந்து சேர்ந்தோம்.

நல்ல வேளையாக லேப்பில் நெகட்டிவ் டெவலப்பண்ணி பார்த்தபோது நாங்கள் பயந்தமாதிரி எந்தவித அசம்பாவிதமும் நடத்திருக்கவில்லை.

இது நான் இயக்கிய ஒரு படத்தில் ஒரு நாளில் ஏற்பட்ட சோதனை சம்பவம். இது மாதிரியான பல்வேறு சோதனைகள் திரையுலகத்தைச் சேர்ந்த பலருக்கும் ஏற்படுவதுண்டு.



இது மாதிரி லட்சக்கணக்கான ரூபாய் பணத்தையும், நூற்றுக்கணக்கானோரின் உழைப்பையும் முதலீடு செய்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து எடுக்கின்ற படங்களை எந்தவித உழைப்புமின்றி முதலீடும் இல்லாமல் வீடியோ கேஸட் ஆகவும், காம்பாக்ட் டிஸ்க் ஆகவும் திருடி, பல பேரின் எதிர்கால வாழ்வை சிதைக்கிற, மனசாட்சி இல்லாத கயவர் கூட்டத்தை கட்டி வைத்து சவுக்கால் அடிக்க வேண்டாமா?

ஏற்கெனவே சரிந்து வரும் சினிமா தொழிலில் வாழ்வு தேடிப் போராடிக் கொண்டிருக்கும் சினிமா தொழிலாளர்கள் இந்தக் திருட்டுக் கும்பலை எதிர்த்தா போராட முடியும்?

அந்த அயோக்கியர்களை கண்டு பிடிக்க வேண்டியதும், தண்டிக்க வேண்டியதும்அரசின் பொறுப்பு.

அது அவ்வப்போது நடந்து கொண்டுதான் இருக்கிறது என்றாலும் நடவடிக்கைகள் இன்னும் கடுமையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன சினிமா தொழிலை தங்கள் வாழ்க்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிற எண்ணற்ற இதயங்கள்...

❖❖

'தாலிதானம்' படப்பிடிப்பு. குன்றத்தூர் முருகன் கோயிலில் நடந்து கொண்டிருந்தது. அங்கு இரண்டு காட்சிகளைப் படமாக்கிவிட்டு வேறு ஒரு லொகேஷனுக்கு ஷிஃப்ட் செய்ய திட்டமிட்டிருந்ததால் இங்கு வேக வேகமாக ஷூட்டிங் நடத்திக் கொண்டிருந்தோம்.

படத்தின் கதைப்படி, வசதியான வாழ்க்கை இருந்தும் தனக்கு ஒரு குழந்தை இல்லையே என ஏங்குகின்ற கதாபாத்திரம் லட்சுமிக்கு.

கோயிலுக்கு வரும் லட்சுமி, சாமி கும்பிட்டு விட்டுப் புறப்படும்போது அங்கு வரும் ஒரு பெண்ணைப் பார்த்து "உங்களுக்கு குழந்தைகள் இருக்கிறதா?" என்று கேட்பார். "இருக்கிறது" என அந்தப் பெண் கூறியதும் "எத்தனை குழந்தைகள்" என லட்சுமி கேட்பார். அந்தப் பெண் "மூன்று குழந்தைகள்" என்று சொன்னதும் தன்னிடமிருந்த பிரசாதத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்து "இதை உங்க குழந்தைங்ககிட்ட கொண்டு போய் கொடுங்கம்மா...." என்று கொடுப்பார். அந்தப் பெண்ணும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்வார்.

இந்தக் காட்சியில் லட்சுமியுடன் நடிப்பதற்காக துணை நடிகை ஒருவர் வந்திருந்தார். அவர் பல படங்களில் நடித்த அனுபவம் பெற்றவர்தான். ஒத்திகையின் போது நன்றாக நடித்து வசனங்களையும் சரியாகச் சொன்னார்.

"டேக்!" என்றதும் அந்தத் துணை நடிகையின் முகத்தில் சிறிய மாறுதல். அதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. கேமிரா ஓடிக் கொண்டிருந்தது.

டேக்கின்போது லட்சுமி "எத்தனை குழந்தைகள்?" என்று கேட்டதும் "ஏழு குழந்தைகள்" என்றார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகமாகச் சொல்லிவிட்டாரே என்று.

அது ஒரு பெரிய தவறு இல்லை என்பதனால் நான் 'கட்' சொல்லவில்லை. ஷாட் முடிந்ததும் எல்லோரும் சிரித்துவிட்டோம். நான் அந்தப் பெண்ணிடம் "என்னம்மா இது, மூன்று குழந்தைங்கன்னுதானே சொல்லச் சொன்னேன்.... ரிகர்சல்ல ஒழுங்காதானே சொன்னீங்க ஏன் டேக்ல ஏழு குழந்தைங்கன்னு சொன்னீங்க?" என்று கேட்டதும் அவர் சொன்ன பதில் எல்லோருக்குமே ஆச்சரியமாக இருந்தது.

"எனக்கு நெஜமாகவே ஏழு குழந்தைங்க இருக்காங்க சார். தெய்வ சந்நிதானத்துல குழந்தைங்க எண்ணிக்கையை குறைச்சு பொய் சொன்னா, பலிச்சுடுமோங்கற பயத்துலதான் நான் உண்மையைச் சொல்லிட்டேன்" என்றார்.

அதுவரையிலும் அந்த நிகழ்ச்சியை ஒரு நகைச்சுவையாக நினைத்து சிரித்துக் கொண்டிருந்த எனக்கு, மூளையில் ஊசி குத்தியது போன்ற உணர்ச்சி.

தெய்வ சந்நிதானத்தில் நடிப்புக்காகக் கூட பொய் சொல்லப் பயந்த அந்தத் தாய்மையை எண்ணி வியந்தேன்.

தான் சொல்லுகிற அந்த நடிப்பு-பொய்கூட தன் குழந்தைகளைப் பாதித்து விடுமோ என்ற அச்ச உணர்ச்சியின் காரணமாக, தான் பேசியது சொல்லிக் கொடுக்கப்பட்ட டயலாக் என்பதையும் மறந்து அந்தத் தாயை உண்மை பேச வைத்தது நம்பிக்கை; தெய்வ நம்பிக்கை.

அடுத்த லொகேஷனுக்கு போவதற்காக படப்பிடிப்புச் சாதனங்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு இருந்தார்கள்.

அந்தத் துணை நடிகை ஒரு மரத்தடியில் நின்று கொண்டு இருந்தார். படப்பிடிப்புக் குழுவை சேர்ந்த ஒருவர் அந்தப் பெண்ணிடம் சென்று, "ஏம்மா... வெறும் நடிப்புத்தானே இது? இதப்போயி சீரியஸா எடுத்துக்கிட்டு, டயலாக் மாத்தி சொல்லிட்டியேம்மா...."

அதற்கு அந்தப் பெண் "அடப் போங்க நீங்க.... என்ன பாவம் பண்ணினோமோ.... இப்படிக் கஷ்டப் பட்டுகிட்டு இருக்கோம். அதுக்கு மேலே இந்தப் பாவத்தைப் பண்ணி இதுக்கு மேலேயும் கஷ்டப்படணுமா?"

உடனே அந்தப் நண்பர். "பாவமாவது புண்ணியமாவது அதெல்லாம் சுத்த பித்தலாட்டம்மா.... உலகம் எவ்வளவோ மாறிக்கிட்டு வருது.... இந்தக் காலத்துல் போய் பாவ புண்ணியத்தைப் பத்தி பேசிக்கிட்டு இருக்கியே...."

உடனே அந்தப் பெண் "பாவ புண்ணியத்தை பத்தி பயப்படாததினாலதான் உலகம் இப்படி நாசமா போயிட்டு இருக்கு" என்றார்.

இவர்களது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த என் மனதில் ஒரு கேள்வி பிறந்தது.

அந்த நம்பிக்கை சரியானதுதானா? அறிவுப்பூர்வமானதா? அந்த நம்பிக்கையின் விளைவாக அவர் மனதில் ஏற்பட்டிருக்கிற பயம் அவசியமானதுதானா?

ஆனால் அந்த நம்பிக்கை தொழில் ரீதியான நடிப்புக்குக்கூட பொய் சொல்லக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியை கற்றுத் தந்தது.

இன்றும்கூட கிராமங்களில் கொடுக்கல், வாங்கலில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சண்டை முற்றுகிறபொழுது "நான் பணத்தை கோவில்ல வெச்சிடறேன். நீ எடுத்துக்கோ....." என்று சொல்வதும், பணம் கொடுத்தவர் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் அடிக்கடி நடக்கிற நிகழ்ச்சிகள்.

'கோயிலில் பொய் சொல்லிப் பணத்தை பெற்றுக் கொண்டால் அது மிகப் பெரிய பாவம்' என்பதும், 'அந்த பாவத்திற்கான தண்டனையை சம்பந்தப்பட்டவர் அனுபவிப்பார்' என்பதும் நம்பிக்கை.

திருடுதல், பொய் சொல்லுவது, நம்பிக்கை துரோகம், அடுத்தவர் பொருளை அபகரித்தல், பெற்றோரை கவனிக்காமல் கைவிடுதல் இப்படி மனித தவறுகளைப் பட்டியலிட்டு அவை எல்லாம் பாவச் செயல்கள் என்றும் இவற்றை செய்பவர்களும், அதற்கு உடந்தையாக இருப்பவர்களும் மரணத்திற்குப் பின் நரகத்திற்கும் போவார்கள் என்றும் அங்கே அவர்களுக்காக தண்டனைகள் காத்திருக்கும்.

(அனுபவங்கள் தொடரும்)

# வீரன் தான் பிரீன்

## முடிவுரை

தான் பிரீன் டப்ளின் நகருக்குச் சென்றபொழுது வீர அயர்லாந்து பிளவுபட்டுக் கிடந்ததைக் கண்டான். பழைய குடியரசுப் படை இரண்டு பிரிவாகப் பிரிந்து, 'பிரீ ஸ்டேட் படை', 'குடியரசுப் படை' என்ற இரண்டு பெயர்களுடன் விளங்கியது. பிரிட்டிஷ் துருப்புக்களால் காலி செய்யப்பட்ட படை வீடுகளை எல்லாம் இரு படைகளும் பிடித்துக் கொண்டன. தேசம் முழுவதும் இரு படைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் போராடத் தயாராய் நின்றன.

தான் பிரீன் இரு கட்சியாரிடமும் சென்று அடிக்கடி சமாதானப்படுத்த முயன்றான். அவர்களை அழைத்துக் கூட்டங்கள் நடத்தினான். அவனுடைய நன்முயற்சியால் இருகட்சித் தலைவர்களிலும் சிலர் ஒன்றுகூடி விவாதம் செய்து, கடைசியில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். அந்த உடன்படிக்கையின் விபரம் முழுதும் மே 1ம் திகதிப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.

தொண்டர்களுக்குள் பிளவு ஏற்பட்டுக் கலகம் நேருமானால், அதனால் அயர்லாந்து பல நூற்றாண்டுகள் தலைதூக்கமுடியாதபடி பெரும் நஷ்டமடையும் என்பதும், எல்லாத் தொண்டர்களும் உடனே வேற்றுமைகளை மறந்து ஐக்கியப்படவேண்டும் என்பதும், தலைவர்கள் யாவரும், பொது மக்களும், யுத்த வீரர்களும் தேசத்தின் நிலைமையை உணர்ந்து தங்கள் வலிமையைத் தொலைக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது என்பதும் உடன்படிக்கையில் வற்புறுத்தப்பட்டிருந்தன.

இந்தச் சமாதான உடன்படிக்கை நெடுநாள் அமுலில் இல்லாமற் போயிற்று, குடியரசுப் படையைச் சேர்ந்த சில அதிகாரிகள் அதைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டனர்.

அதற்குக் காரணமாயிருந்த தான் பிரீனும் பலமாய்க் கண்டிக்கப்பட்டான். அரசியல் தலைவர்களுக்குள்ளும் இராணுவத் தலைவர்களுக்குள்ளும் நிரந்தரமான சமாதானம் ஏற்பட விழியில்லாது போயிற்று. ஆயினும் இருகட்சித் தலைவர்களிலும் முக்கியஸ்தராய் விளங்கிய டிவலராவும் மைக்கேல் கொலின்ஸும் புதிதாய் நடக்கவேண்டியிருந்த பொதுத் தேர்தலில் இருகட்சிகளையும் ஒன்றுசேர்த்து ஒரே ஸின்பீன் கட்சியின் சார்பாகப் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆனால், அந்த ஒப்பந்தமும் சிதைந்து போயிற்று. கிழக்குத் திப்பெரரி அங்கத்தினர் ஸ்தானம் காலியாய் இருந்ததால் அதற்கு எந்த கட்சி அங்கத்தினரை அபேட்சகராக நியமிக்கலாம் என்பதைப் பற்றிப் பலத்த விவாதம் ஏற்பட்டதால் இப்படி நேர்ந்தது.

மேலும் விவசாயிகளும் தொழிலாளர்களும் குடியரசுக்கட்சியையும் பிரீ ஸ்டேட் கட்சியையும் எதிர்த்துத் தங்களுடைய பிரதிநிதிகளைச் சுயேச்சையாக நிறுத்த முற்பட்டனர்.


உள்நாட்டுக் கலகம் ஏற்படாமல் தடுப்பதற்குத் தான் பிரீன் தன்னால் இயன்றளவு முயற்சிசெய்து பார்த்தான். அவன் முயற்சிகள் பயனற்றுப் போயின. சகோதரர்களுக்குள்ளேயே பூசல் விளைந்தது. ஒருவரையொருவர் சுட்டுத் தள்ள முற்பட்டனர். கொடிய கலகம் மூண்டுவிட்டதால், தான் பிரீன் குடியரசுப் படையுடன் சேர்ந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று. டின்னி லேஸி, லியாம் லிஞ்ச் முதலிய பல வீரர்கள் கலகத்தில் குண்டு பட்டு மடிந்தனர். தோழர்களை இழக்க நேர்ந்ததைக் குறித்துத் தான் பிரீன் வருந்தினான்.

1923ஆம் ஆண்டு லியாம் லிஞ்சின் மரணத்திற்குப் பின்னால் நைர் பள்ளத்தாக்கில் நடக்கக்கூடிய ஒரு சமாதானக் கூட்டத்திற்குத் தான் பிரீன் சென்றான். இடை வழியில் பிரீ ஸ்டேட் பட்டாளத்தார் அவனையும் அவனுடன் சென்ற நண்பர்களையும் பார்த்துச் சுட ஆரம்பித்தனர். அப்பொழுது அவர்கள் பல திசைகளைப் பார்த்து ஓடி மறைந்துகொள்ள நேர்ந்தது. தான் பிரீன் இரண்டு நாள் காட்டுப்புறத்தில் சுற்றித் திரிந்து, பின்னால் பூமிக்குள் தோண்டப்பட்டிருந்த ஒரு பாசறைக்குள் பதுங்கியிருந்தான். களைப்பு மிகுதியால் அவன் அங்கே விழுந்து உறங்கிவிட்டான். சிறிது நேரத்தில் பிரீ ஸ்டேட் பட்டாளத்தார் அங்கு சென்று, அவனைத் திடீரென்று சூழ்ந்துகொண்டு கைதுசெய்தனர். அவன் விழித்துப் பார்க்கையில் நாலு புறத்திலும் பட்டாளத்தார் துப்பாக்கிகளைத் தன்னை நோக்கிப் பிடித்திருந்ததைக் கண்டு திடுக்கிட்டுப் போனான். ஐந்து வருஷகாலம் வல்லமை மிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, எந்த நேரத்திலும் பகைவர்களுடைய கையில் சிக்காமல் சாமர்த்தியத்துடன் தப்பிவந்த தான் பிரீன், தன் நாட்டுச் சகோதரர்களுடைய கையில் எளிதாக அகப்பட்டுவிட்டான்! அவன் அளவற்ற துக்கமடைந்து பரிதவித்த போதிலும், எதிரிகள் முன்பு தைரியத்தைக் கைவிடாதது போல் பாவனை செய்து கொண்டான்.

பிறகு, அவன் கால்பல்லிக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கிருந்து திப்பெரரிக்குக் கொண்டு போகப்பட்டான். திப்பெரரியிலிருந்த பிரீஸ்டேட் அதிகாரிகள் அவனை லிமெரிக் சிறைச்சாலைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவன் இரண்டுமாதம் வைக்கப்பட்டிருந்தான். அந்தச் சிறையில் அவன் முன்னால் ஆஷ்டவுன் போராட்டத்தில் காயப்படுத்திய லோர்ட் பிரெஞ்சினுடைய கார் டிரைவரைக் காண நேர்ந்தது. அந்த டிரைவர் லிமெரிக் சிறையில் ஓர் உத்தியோகஸ்தனாயிருந்தான்.

லிமெரிக்கிலிருந்து தான் பிரீன் மௌண்ட்ஜாய் சிறைக்கு மாற்றப்பட்டான். அங்கே ஒரு வசதியுமில்லை. எனவே அவன் உண்ணாவிரதம் இருக்க நேர்ந்தது. 12நாள் உண்ணாவிரதமும், 6நாள் (நீரே பருகாமல்) தாகந்தணியா விரதமும் இருந்தபிறகு, அவன் விடுதலை செய்யப்பட்டான்!

அவன் சிறையிலிருந்த பொழுது திப்பெரரி வாசிகள் அவன் பால் நன்றி செலுத்தி, அவனையே தங்களுடைய குடியரசுக் கட்சியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தனர்.



### தமிழில் ப.ராமஸ்வாமி

சமாதான உடன்படிக்கைப்படி பிரிட்டிஷ் பார்லிமென்டால் அங்கீகரிக்கப்பட்ட சுதந்திர ஐரிஷ் ஆட்சி 1922ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டது அதன்படி அயர்லாந்துக்கு பிரிட்டிஷ் உறவு இருந்துவந்தபோதிலும், ஐரிஷ் பார்லிமென்டான 'டெயில் ஐரா'னின் தலைவர் இமன் டி வலரா நாளடைவில் அந்த உறவு இல்லாமல் செய்துவிட்டார். அதனால் குடியேற்ற நாடு குடியரசாகி விட்டது! ஆயினும் தொண்டர் படையினருக்குள் இடையில் ஏற்பட்ட பூசல்களால் என்றும் மறக்கமுடியாத பல கஷ்டங்கள் அயர்லாந்துக்கு ஏற்பட்டன. டப்ளினில் தொண்டர் படைத் தலைமையில் நின்று, எண்ணற்ற வீரத்தியாகங்கள் செய்து போராடிய மைக்கேல் கொலின்ஸ் தன்னுடைய பழைய நண்பர்கள் கையாலேயே மடிய நேர்ந்தது! நண்பரை நண்பரே வதைத்தனர். சொத்துக்கள் நெருப்புக்கு இரையாயின. எதிரிகள் கொக்கரித்துக் கொண்டிருந்தனர்!

ஆனால் ஐரிஷ் தலைவர்கள் அரசாங்கத்தை அமைத்ததோடு நில்லாமல், வெகு வேகமாக முற்போக்கான திட்டங்களைக் கையாண்டதால் நிலைமையை மாற்ற முடிந்தது.

ஐரிஷ் தலைவர்களில் முதலாவதாக டிவலராவைக் குறிப்பிடவேண்டும். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். 1913 லேயே அவர் சுதந்திரப் பட்டாளத்தில் சேர்ந்தவர். 1916ஆம் வருடம் நடந்த ஈஸ்டர் சண்டையில் அவரும் தலைமைவகித்து போராடினார். அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் 1917ஆம் ஆண்டு நடந்த சமாதான உடன்படிக்கையின் படி அவர் ஜூன் மாதம் 15ஆம் திகதி விடுதலை செய்யப்பெற்றார். அடுத்தவருடம் டப்ளினில் கூடிய குடியரசுச் சட்ட சபைக்கு அவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மறுபடி அவரை அரசாங்கத்தார் கைதுசெய்து லிங்கன் சிறையில் அடைத்தனர். அங்கிருந்து அவர் தப்பி வெளிவந்து, அமெரிக்கா சென்று அயர்லாந்துக்கு அரும்பெரும் வேலைகள் செய்தார் கடைசிச் சுதந்திரப் போருக்கு வேண்டிய பணத்தையும் அங்கேயே தட்டிக் கொண்டார். பின்னால், தாய்நாடு திரும்பி, சுதந்திர நாட்டிற்காக அல்லும் பகலுமாக உழைத்து வந்தார். அவருடைய ஆசைக் கனவுகள் ஒவ்வொன்றாகப் பலித்துவிட்டன. பின்னால் பிரிட்டிஷார் சூழ்ச்சியால், அல்ஸ்டர் மாகாணம் வேறு, அயர்லாந்து வேறு என்று அயர்லாந்து இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டதை மட்டும் அவரால் மாற்றவே முடியவில்லை! அல்ஸ்டர் தான் அயர்லாந்தின் பாகிஸ்தான்.

ஆர்தர் கிரிபித் என்ற அரசியல் ஞானியையும் அயர்லாந்தின் விடுதலைப் போரின் வீரச் சரித்திரத்தில் குறிப்பிட வேண்டியது அவசியம். அவர் நடத்திய பத்திரிகைகளும், எழுதிய நூல்களும் மக்களுக்கு வீரத்தை ஊட்டின. தாய் மொழியாகிய 'கெயிலிக்' மொழியின் மீது மட்டற்ற அன்பை வளர்த்தனர். 1922ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12ஆம் திகதி அவர் தமது காரியாலயத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, வழியில் களைப்பினால் இறந்து விழுந்துவிட்டார். அவருடைய கடுமையான உழைப்பே அவரைக் கொன்றுவிட்டது.


இளம் சிங்கம் மைக்கேல் கொலின்ஸையும் அயர்லாந்து ஒரு நாளும் மறக்காது. சிரித்த முகமும், செவ்விய உள்ளமும், கொண்டவன். 'பயம்' என்பது அவனைக் கண்டு பயப்படும். ஊர்முழுதும் அவனைப் பிடிக்கப் பொலிஸ்காரர்களும், பட்டாளத்தார்களும் திரியும் பொழுது,அவன் பெரிய வீதிகளின் முனையில் நின்று தொண்டர்களுக்கு வேலைத் திட்டம் வகுத்துக்கொண்டிருப்பான். அவனைப் பிடித்துக்கொடுப்பவருக்கு 10,000 பவுண் பரிசளிப்பதாக அதிகாரிகள் கூவிப்பார்த்தார்கள். கடைசிவரை அந்தப் பதினாயிரம் பவுணை வாங்க அயர்லாந்திலே ஆள் கிடைக்கவேயில்லை.

இத்தகைய தலைவர்களின் பெருமையாலும் தான்பிரீன், ஸீன் டிரீஸி, லியாம் லிஞ்ச், ஹோகன், மார்ட்டின் ஸாவேஜ் போன்ற பல்லாயிரம் வீரத் தொண்டர்களின் தியாகத்தாலும் அயர்லாந்து விடுதலை பெற்றது. உலக சரித்திரத்தில் ஒரு பொன் ஏட்டில் எழுத வேண்டிய சரித்திரம். 43 லட்சம் ஐரிஷ் மக்கள் ராட்சத வலிமையுள்ள ஓர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வென்றது விசித்திரமேயாகும்!

சுதந்திர ஜோதியில் அடிமை இருளும், அறியாமை இருளும் அகன்றன! ஒவ்வொரு நாளும் ஒரு முன்னேற்றம், பற்பல சீர் திருத்தங்கள்! ஐரிஷ் மக்கள் மற்ற நாட்டவரைப்போல், தலை நிமிர்ந்து மிடுக்குடன் வாழுகிறார்கள்!

வாழ்க சுதந்திரம்! வாழ்க வையகம்!

(முற்றும்)




# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 54

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

"உனக்கும் செய்தி வந்துவிட்டதா...?" என்றாள் கற்பகம்.

"ஊம்!" என்றாள் நளாயினி அழுது கொண்டே.

"கடவுள் நம்மை நிம்மதியாக இருக்க விடமாட்டான் போலிருக்கிறது! என்ன செய்வோம்? என் விஷயத்தில் என் கணவர் கவிஞரிடம் தான் யோசனை கேட்டார். அவரைக் கூப்பிட்டு வேண்டுமானால் என்ன செய்யலாம் என்று கேள்!" என்றாள் கற்பகம்.

"பம்பாயில் அவருக்கு யாரைத் தெரியும்?" என்று கேட்டாள் நளாயினி.

"எல்லா இடங்களிலும் அவருக்கு நண்பர்கள் உண்டு. அரசியல்வாதிகள், தொழில் முதலாளிகள் மூலமாகப் போவதை விட, அவர் மூலமாகப் போனால், நட்புக்குக் கட்டுப்படுவார்கள். நாளைக்கு என்ன வருமோ என்று பயப்படவும் மாட்டார்கள்!" என்றாள் கற்பகம்.

"நான் அவரோடு அதிகம் பேசியது இல்லையே..." என்றாள் நளாயினி.

"அவரைத் தெரிந்தால் போதாதா?" என்றாள் கற்பகம்.

பிறகு கற்பகம் என்ன நினைத்தாளோ, எனக்கு டெலி ஃபோன் செய்தாள்.

அதற்குள் விஷயத்தைப் பத்திரிகையில் படித்த நான், "இதில் நான் செய்வதற்கு என்ன இருக்கிறது?" என்றேன்.

"நீங்கள் நினைத்தால் முடியும். அவருக்கு ஆறுதலாவது சொல்லுங்களேன்...!" என்றாள் அவள்.

நான் தங்கசாமி வீட்டுக்குச் சென்ற போது, அங்கு தங்கசாமி இல்லை.

அவருக்கு தேர்தல் பரபரப்பு. தவிரவும் இந்தச் செய்தியில் அவர் துக்கப்பட என்ன இருக்கிறது? ஒரு வேளை சந்தோஷப்பட்டிருக்கலாம்! நளாயினி மட்டும் அங்கே இருந்தாள். அவளைச் சுற்றிலும் சில உறவுப் பெண்கள் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும் லலிதா சுடப்பட்டிருந்தாளே தவிர, சாகவில்லை.

செத்துப் போனால் சொந்தக்காரர்கள் எல்லாம், "ஐயோ பாவம் ! நல்லவள் போய் விட்டாள்!" என்று துக்கம் விசாரிக்கிறார்கள். சாகவில்லையே!

"இன்னும் சாகவில்லையா...?" என்று தெரிந்து கொள்ள வருகிறார்கள்.

என்னைக் கண்டதும் "வாங்கண்ணா" என்று எழுந்து வந்தாள் நளாயினி.

அரசியலிலும், சினிமாவிலும் அண்ணன் முறை போட்டுப் பெண்கள் அழைப்பதை அப்படியே ஏற்றுக் கொண்டுவிடக் கூடாது. அந்த நேரத்தில் 'அண்ணன்' அவ்வளவுதான்!

ஆனால் நளாயினிக்கு அரசியலும் தெரியாது, சினிமாவும் தெரியாது..

நான் என்னை அண்ணனாகவே பாவித்துக் கொண்டு விட்டால் அவள் தங்கைதானே?

"என்னம்மா, எல்லாம் கேள்விப்பட்டேன். ஒன்றுக்கும் கவலைப்படாதே," என்று சொன்னபடி அமர்ந்தேன்.



"எனக்கு ஒரு நிம்மதியும் இல்லை...!" என்று அழுதாள் நளாயினி.

நிம்மதி வேண்டும் என்றுதானே ஒவ்வொருவரும் அழுகிறார்கள்.

மனிதர்களின் நிம்மதியைக் கெடுப்பதற்கு, உலகத்தில் பலவகையான நோய்கள் இருக்கின்றன. சில நோய்கள் அவர்களது உடலுக்கு வருகின்றன. குடும்பம் என்ற பெயரில் சில நோய்கள் கூடவே இருக்கின்றன. 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்று சொன்னவன் தெரியாமலா சொன்னான்?

நான் நளாயினியைப் பார்த்தேன். "அம்மா, நாம் நினைக்காமல் நிகழ்ந்த துன்பங்களுக்கு அழுது பயனில்லை. வளர்க்கத் தெரியாமல் பிள்ளையை வளர்த்து விட்டால், அதுவே தலையோடு பிறந்த துயரமாகி விடுகிறது. ஆண்களுக்காவது ஒரு விதிவிலக்கு உண்டு. பெண்கள் எச்சரிக்கையாக வளர்க்கப்பட வேண்டும். வயசு வந்த பெண்ணையும், புத்தகங்களையும் மாற்றானிடம் கொடுத்துக் காப்பாற்றச் சொல்லக் கூடாது என்பார்கள். விவஸ்தையில்லாமல் வளர்த்தால் அவஸ்தைப் படத்தான் வேண்டியிருக்கும். இதை மறந்திருக்க ஒரே வழி, 'வி டிட் இட் வி ஆர் பவுண்ட் டு ஃபேஸ் இட்' என்று முடிவு கட்டுவதுதான் நாம் உண்டாக்கிய வினை. அதை எதிர்கொள்ள வேண்டியதும் நமது பொறுப்புதானே! கவலைப்படாமல் இருங்கள். பம்பாயிலுள்ள எனது நண்பர்களுக்கு டெலி ஃபோன் செய்து பார்க்கிறேன்!" என்றேன்.

இப்பொழுதெல்லாம், டிரங்கால் புக் பண்ணாமல் நேரடியாகவே பேசலாமே! அதனால்தானே டெலி ஃபோன் வைத்திருப்பவன் கடன்காரனாகவேண்டி இருக்கிறது!

பம்பாயில் எனக்கொரு நண்பருண்டு. மதன்லாலுக்கும் அவர் வேண்டியவர். 'கோஸ்வாமி' என்பது அவரது பெயர்; பூர்வத்தில் வங்காளி, பிறகு சென்னைவாசி; இப்போது பம்பாய்வாசி. அருக்கு டெலி ஃபோன் செய்து கேட்டேன்.

குமாரசாமியைக் கைது செய்து வைத்திருக்கிறார்களாம். லலிதா பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுக் குணமடைந்து வருகிறாளாம். குமாரசாமி கொடுத்த தகவலின் பேரில் லலிதாவை வைத்து விபசார விடுதி நடத்தியதாக, கமலும் கைது செய்யப்பட்டிருக்கிறாராம்.

நான் டெலிஃபோனை மூடிய போது, நளாயினி தரையில் உட்கார்ந்திருந்தாள்.

(அந்தரங்கம் வரும்)

# அகம்

பரீட்சை முடிவடைந்ததை விட சுற்றுலா செல்லப் போவதை எண்ணி அந்தப் பாடசாலை மாணவிகள் மகிழ்ச்சியில் மிதந்தனர். 'தலைக்கு நூற்றி ஐம்பது ரூபாய். சாப்பாடு, பெற்றோரின் கையொப்பம் இவை மூன்றும் முக்கியம்' என்று கலா ரீச்சர் அவர்களுக்கு அறிவுறுத்தினார். எல்லோரும் புற்றீசல்களாக வீடு நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

விடைத்தாள்கள் கட்டுக்கட்டாய் குவிந்து கலா ரீச்சரைப் பயமுறுத்தியது. அவற்றை அள்ளி எடுத்துக் கொண்டு பஸ்ஸைப்பிடித்து வீடு போய்ச் சேர்ந்தாள். ஆவி பறக்க அம்மா கொடுத்த காப்பியை மெல்லச்



சுவைத்தபடி சிந்தித்தாள். படிப்பித்தல் முன்போல இல்லை. பெருஞ்சுமைதான். சம்பளத்தைக் கூட்டி விட்டு ரீச்சமாரைப் படாதபாடு படுத்துகினம். சம்பளம் என்ன சம்பளம் இந்தக் காலத்தில சாமான் விற்கிற விலைக்குக் கூட்டத்தானே வேணும்? கலாரீச்சர் தனக்குள்ளே யோசித்தாள். விடைத்தாள்களைத் திருத்தி விடுமுறைக்கு முன் றிப்போட் கொடுக்கவேண்டுமென்று அவளுக்கு நினைவு வந்ததும் அவசர அவசரமாக எழுந்து உடைகளை மாற்றி விட்டு அறைக்குள் அமைதியாக உட்கார்ந்தாள்.

தமிழ்மொழிப்பாட விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டு வந்த கலாரீச்சரை திடீரென்று ஆச்சரியம் கௌவியது. பகுதி இரண்டில் கட்டுரை எழுத வேண்டிய இடத்தில்..... கடிதம்.

எனது பிரியமுள்ள ரீச்சர்.

மன்னிக்கவும். என்கதையே ஒரு கட்டுரைதான். தயவு செய்து கோபிக்காமல் கொஞ்சம் படியுங்கள். நீங்கள் கடந்த வாரம் சுற்றுலா போவது பற்றிச் சொன்னபோது நான் மிகவும் கவலையடைந்தேன். யூனிபோம், சப்பாத்து, ரை, ரிப்பண் இவற்றால் எல்லா மாணவரும் ஒன்று போல் தெரிந்தாலும். குடும்பச்சூழ்நிலையால் வசதியால் நான் வேறுபட்டவள். என் தாய்க்கும் தந்தைக்கும் நாங்கள் இரண்டு பெண்கள். அம்மாவுடன் அப்பா அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வதைப் பார்ப்போம். அம்மா மௌனமாகக் கண்ணீர் வடிப்பா. அப்பா ஏதோ தொழில் என்று வெளியில் போவார். மூன்று மாதத்துக்கொருமுறை வந்து ஐநூறோ ஆயிரமோ கொடுத்துவிட்டுப் போவார் அவர் எங்கே போகிறார் ஏன் போகிறார் என்று தெரியாது. அப்பா எங்களுடன் அன்பாகப் பேசமாட்டார். அவர் கொடுக்கும் பணத்தில் நாங்கள் காலங்கழிக்க முடியாமல் கஷ்டப்படுவோம். என் அம்மா படித்தவ. இதனால் சில வீடுகளில் ரியூஷன் சொல்லிக் கொடுத்து, குடும்பத்தை சமாளிப்பா பாவம்.

-ரூபராணி-

நாங்கள் இதைத்தான் சாப்பிடுவதென்றில்லை. ஏதோ கிடைப்பதைச் சாப்பிடுவோம். சாப்பிடாமலும் இருப்போம். பாடசாலைக்கு வந்து படிக்க வேணும் என்ற ஆசைதான். ஆனால் அம்மாவின் கண்ணீர் அதைத் தடுக்கும். அப்பா ஏன் இப்படி? பதில் தேட முடியவில்லை. வீட்டு நிலை எங்களை எவ்வளவு பாதிக்கிறது என்பதைப் பெற்றார் உணர்வதில்லை ரீச்சர் எனக்கும் சுற்றுலா போக ஆவல்தான். ஆனால்... என் நிலை இப்படி நான் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை என்று நீங்கள் சொல்லும்போது என்மனதால் அழுவேன். ஆனால் இன்று தங்களிடம் சொல்லியதில் ஆறுதல் அடைகிறேன் ரீச்சர்.

இப்படிக்கு
தங்கள் பணிவுள்ள மாணவி
விநோதினி....

உடைந்த கதிரையின் சுயசரிதைக்குப் பதில் ஓர் உடைந்த உள்ளத்தின் கதை. கலா ரீச்சரின் கண்களில் நீர் நிறைந்தது. அடக்கமும் அமைதியும் கொண்ட அந்த மாணவி. விநோதினி அதில் நிழலாடினாள். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் புறம் மட்டுமல்ல அகம் அதைவிட முக்கியம் என்பதைப் புரிந்து கொண்ட கலாரீச்சர், பெற்றோரைப் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பினாள்.

# 'ஜோன்ஸ்' என்று ஒரு நண்பன்

'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு'


என்றார் திருவள்ளுவர். ஆனாலும் என்னுடைய நண்பர்கள் என்னோடு சேர்ந்து சிரிக்கவும் கதைக்கவும்தான் பயன்பட்டார்கள். பிரச்சனை என்று வந்தபோது எல்லோருமே ஓடிவிட்டார்கள். ஜோன்ஸ மட்டும்தான் நல்ல மந்திரியாக தோள் கொடுக்க தயாராக இருந்தான். ஜோன்ஸை நண்பனாக பெற்றது என்னுடைய பாக்கியம் தான். "பலபேரோடும் நட்பு பாராட்டுபவன், ஒருதனுக்கு தன்னும் உண்மையான நண்பனாய் இருக்கமாட்டான்!" என ஜோன்ஸ் அடிக்கடி சொல்லுவான். அதனால் என்னுடைய பலரையும் சிலராக்கி, ஜோன்ஸை மட்டும் உண்மையான நண்பன் ஆக்கிக் கொண்டேன்.

எங்களுக்கிடையே ஒளிவு மறைவு என்று எதுவுமே இல்லை. அவன் ஒரு நல்ல மந்திரியாகவும் செயல்படுவான். அவனுடைய மதியூகத்தைக் கண்டு பலதடவை நான் வியந்ததுண்டு. என்னுடைய அம்மா, அப்பா, தங்கையை கூட அவனுக்கு மிகவும் பிடிக்கும். "மச்சான் உங்கடை நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்!" என்பான். அதே போல அவனுடைய அம்மாவையும் எனக்கு மிகவும் பிடிக்கும். அப்பா ஒரு பாதிரியார்.

"மனித உறவுகள் வெங்காயம் போன்றது!" என்கின்றார் சுஸின் ஸ்மித் என்ற சிந்தனையாளர். இரண்டு மாணவிகள் சேர்ந்து அரட்டை அடிப்பார்கள். ரீவி பார்ப்பார்கள். இவள் வீட்டிற்கும், அவள் வீட்டிற்கும் வந்து போவார்கள். கேட்டால் "நாங்கள் உயிர் சினேகிதிகள்!" என்பார்கள். ஆபத்தில்லாத, சங்கடத்தில் ஆழ்த்தாத வரை மனித உறவுகளில் நட்பு கூடப் புனிதமானது தான். ஒரு பிரச்சினை வரும்போதுதான் திரைவிலகும். விலக விலக நட்பின் தன்மையும் குறைந்து கொண்டே போகும். வெங்காயம் அழகாய் இருக்கும். தோலை உரிக்க உரிக்கத்தான் கண்ணீரும்வரும், உள்ளேயும் ஒன்றும் இருக்காது. ஆனால் 'எங்கள் உறவு அப்படியானதல்ல' என நான் சொல்லுவேன். 'என் மீது அவனா! அல்லது அவன் மீது நானா அதிகம் அக்கறை, நட்பு வைத்து இருக்கிறோம்' என்று கேட்டால் "அவன் மீது நான்!" என்று தான் சொல்லுவேன். ஏனென்றால் எனக்கு அவனை மிகவும் பிடிக்கும். அவனுக்காக ஏதாவது செய்து விசுவாசத்தை காண்பித்துவிட வேண்டும் என நினைத்துக் கொண்டேன். ஆகவே 'நான் சக அவன் சமன் நட்பு' என ஒரு சமன் பாட்டையே உருவாக்கி இருந்தேன்.

ஜோன்ஸ் இப்போது கொஞ்ச நாளாகவே சரியில்லை. அவனுடைய முகத்தில் ஒரு மாறுதல். பல தடவை நான் கேட்டும் பதில் சொல்லவே இல்லை. இதுதான் சந்தர்ப்பம். அவனுடைய பிரச்சினையை அறிந்து, அவற்றை தீர்த்து, என்னுடைய நட்பை புனிதமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்போடு என்னுடைய கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தேன். "ஜோன்ஸ் நீ என்னட்டை மறைக்கிற ஒரு விசயமும் இருக்கு தானே! பரவாயில்லை. உனக்கு என்னிலை நம்பிக்கை இல்லைப் போலை." என்று கூறிய போது அவன் துடித்துப்போனான். "இல்லை மச்சான் இதை உன்னட்டை எப்பிடிச்சொல்லுறது?" "பரவாயில்லை ஒரு நண்பனிட்டை எதையுமே சொல்லலாம் சொல்லு. நான் தீர்க்கிறன்" என்றேன். சொன்னான்.?

நான் ஏன் கேட்டேன் என்று இருந்தது? நான் வற்புறுத்தி இராவிட்டால் அவனும் சொல்லி இருக்க மாட்டான். நட்பையே பணயம் வைத்து மனதிலே உள்ளதை சொல்லுமாறு கேட்டது என் தவறுதான். ஆனால் அவனுடைய இந்த விருப்பத்தை என்னிடமே சொல்வதற்கு அவன் தான் மிகவும் சங்கடப் பட்டு இருப்பான். மொத்தத்தில் நானும்



இணுவில்-உத்திரன்

கேட்டு இருக்கக் கூடாது, அவனும் சொல்லி இருக்கீக் கூடாது. ஆனால் இரண்டுமே நடந்து விட்டது. 'கடும் கூர் கடும் மொட்டை' என்பார்கள். யார்கண் பட்டதோ? எங்கள் நட்பும் அந்த நிலைக்கு போய்க்கொண்டு இருந்தது.

எங்களால் முன்னை மாதிரி வெளிப் படையாக பேசிக்கொள்ளவோ பழகிக் கொள்ளவோ முடியவில்லை. மனதுக்குள் ஓர் இடைஞ்சல். மிகவும் கவனமாகவே வார்த்தையை பிரயோகிக்க வேண்டி இருந்தது. என்னுடைய வார்த்தைகள் எங்கே அவனைக் காயப்படுத்திவிடுமோ! என்ற பயம் எனக்கு நட்புக்கும் மற்றைய உறவுகளுக்குமிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும் எது உயர்வானது என்றால் என்னால் விடைகூறவே முடியாது.

"மச்சான் நீ உன்னுடைய குடும்பம், நான், என்னுடைய குடும்பம். எங்களுக்கை நிறைய வேறுபாடுகள் இருக்கு. நீங்கள் எல்லா வகையிலையும் மிக மிக உயரத்திலை இருக்கிறீங்கள். ஆனால் நான்? முக்கியமாய் நான் வேறை மதம். உன்ரை வீட்டுக்காரர் இப்பிடியான ஒரு உறவை விரும்ப மாட்டினம். அதனாலை உன்னட்டை நான் இதைப்பற்றி கதைத்து இருக்கக் கூடாது தான். எனக்காக உன்ரை உறவுக்காரரோடை. முரண்படுகின்ற ஒரு சங்கடமான நிலையை நான் எப்பவுமே உனக்கு தரமாட்டன்." என்று மனவருத்தப் பட்டான்.

எனக்குள் ஒரு சுயநலம். நான் சொல்வதற்கே சங்கடப்பட்ட; ஆனால் சொல்லவேண்டிய பதிலை அவனே சொல்லிவிட்டான். ஆனா "நட்புக்கு மட்டும் எந்த தடையுமே சொல்லா மதம்; உறவு என்று வரும்போது மட்டும் எப்படி தடையாய் இருக்க முடியுமா?" என்று அவன் கேட்டு விடக்கூடாது, என நினைத்தேன்.

எனக்கும் ஜோன்ஸுக்குமான உறவுக்கு ஒரு புது வடிவத்தைக் கொடுக்க எனக்கு மிகவும் விருப்பம் தான். ஆனால் இதற்காக மற்றவர்களோடு மோதி மூக்கு உடைபடத் தான் நான் தயாரில்லை. இதை ஒரு சுயநலம் என்று கூட சொல்லலாம். ஆனாலும் எனக்கு கவலை இல்லை. ஏனென்றால் அவனுக்கு என்மேல் எப்போதும் போல் மதிப்பும் மரியாதையும் நிறையவே உண்டு. அதுபோலத்தான் எனக்கும். பாவம் அவன் மனம் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தது. என்னைவிட்டால் அவனுக்கு தன்மனதில் உள்ளதை கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை. 'அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றிவைக்க முடியுமா?' என்பது பற்றி இன்றைக்குவரையுமே என்னால் விடை காணமுடியவில்லை. அவனுக்கு ஆறுதல் சொல்வதைத் தவிர வேறு வகை புலப்படவில்லை.

அன்று தான் ஜோன்ஸைக் கடைசியாக சந்தித்தேன். என்னோடு பேசவேண்டும் என்றான். "மச்சான் இப்பெல்லாம் என் மேலை நீயும் உன்மேலை நானும் ஏதோ ஒரு வித சந்தேக மனதோடைதான் பழகிறம். இது நட்பு என்ற உறவுக்கே நல்லதல்ல. என்னை பொறுத்தவரை நூறுவீதமும் ஒருதருக்கு ஒருதர் விசுவாசமாய் இருக்கிறதுதான் நட்பு. நாங்கள் தான் அப்படி இல்லையே! அதனாலை அந்தப் புனிதமான உறவை நாங்கள் மாசுபடுத்த வேண்டாம். சோ நாங்கள் சந்தோசமாகவே விலகிடுவோம். நான் தரையிலையும் நீச்சல் அடித்துப் பழக்கப்பட்டவன் தானே? எப்படியாவது சமாளித்துக் கொள்றன்!". என்றபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் என்னால் எதையுமே சொல்ல முடியவில்லை. அவன் எடுத்த அந்த முடிவு எனக்கு மனவருத்தமாக இருந்தது. அவன் என் கைகளைக் குலுக்கிவிட்டு போய்க் கொண்டிருந்தான். அதை மறுக்கவோ அவனை கூப்பிடவோ என் மனம் ஏனோ தயாராக இல்லை. 'இப்போதைக்கு இந்த நட்பு வேண்டாம்' என்று மட்டும் நினைத்தேன். ஆனாலும் என்மனதில் அவன்மேலும் ஒருபடி உயர்ந்தே நின்றான். பாவம் பரிதாபத்துக்குரியவன் ஜோன்ஸ். சங்கடமான நிலை என்று வரும்போது எங்கள் நட்பும் ஒரு வெங்காயம் ஆக ஆகிக் கொண்டு இருந்தது. அவன் கடைசியாக சொன்னவார்த்தை "மச்சான் சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்பது தான்.

என்வீட்டுக்காரர் கேட்டால் சொல்வதற்கென்றே ஒரு பொய்யை தயார் படுத்திக் கொண்டேன். இறுதியாக ஒன்று அவன் என்னிடம் என்ன கேட்டு அல்லது சொல்லி, இருப்பான் என்பது உங்களுக்கும் தெரிந்தது தானே!

# அடையாள அட்டை

சுவரிலே தொங்கிக் கொண்டிருந்த கடிகாரம் இரவு பத்து மணியைக் காட்டியது. கண்ணன் நாளை இன்ரவியூவுக்குக் கொண்டு செல்லும் ஆவணங்களை எடுத்து ஒழுங்கு படுத்தி வைத்துக் கொண்டிருந்தான்.

அந்த வேளையிலே கண்ணனின் தந்தை வேலன் குறுக்கிட்டு "எடுத்து வைக்கிறதுகள கெதியா எடுத்து வச்சித்து போய் படு தம்பி நாளைக்கு நேரத்தோட எழும்ப வேணுமல்லவா?"என்று கூறி வாய் மூடுவதற்கிடையில் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்த கண்ணனின் தாய் மரகதமும், "அதுதானே இருந்தாரெண்டா இருக்கிறது தான் நேரம் போற தெரியாம.." எனக் கூறி முடித்தாள். இருவரினதும் சொற் கேட்ட கண்ணன் படுக்கச் சென்றான்

வேலனுக்கும் மரகதத்துக்கும் கிடைத்த மூத்த பிள்ளையே கண்ணன். செல்லம் என்ற ஒரேயொரு சகோதரிக்கு அவன் அண்ணன்! பல பிரச்சனைகளின் மத்தியிலும் கல்வியைத் தொடர்ந்து ஏ.எல். பரீட்சை எழுதிப் பாஸ் பண்ணியவன் அவன். 'ரீச்சிங்' வேலை ஒன்றுக்காய் விடாமுயற்சி செய்து கொண்டிருந்த அவனுக்கு தெய்வமும் இரங்கியது. நாளை அவனுக்கு நேர்முகப் பரீட்சை. ஏழெட்டு செக் பொயின்ருகள் தாண்டி இன்ரவியூவுக்காக ரவுண் செல்ல வேண்டும் கண்ணன்.

இராப் பொழுது கடந்து அதிகாலை ஐந்து மணியாகியது. அவ்வேளையில் நித்திரை விட்டெழுந்த மரகதம் "கண்ணா... கண்ணா..... எழும்பு மனே! அஞ்சு மணியாப் போச்சு..." அம்மாவின் குரல் கேட்டு எழுந்த கண்ணன் காலைக் கடன்களை முடிப்பதற்காகச் சென்றான். செல்லமும் நித்திரை விட்டு எழுந்து "அம்மா அண்ணாவுக்கு சாப்பாடு கட்டிக் கொடுக்க வேண்டுமல்லவா..?" எனக் கேட்டவாறு சருவப் பானைக்குள்ளே கிடந்த இரண்டு சுண்டு அரிசியை எடுத்து வந்து கழுவி உலையில் இட்டாள்.

மரகதம் போத்தல் ஒன்றுள் போட்டு வைத்திருந்த மாசித் துண்டை எடுத்து நறுக்கி எடுத்தாள். தாயும் மகளுமாக இணைந்து சோறும் கறியும் கடுகதியாய் சமைத்து முடித்தனர். நேரமும் ஆறு மணியாகியது.



கண்ணனும் காலைக் கடன்கள் அனைத்தையும் முடிந்து விட்டு வந்து வெளிக்கிட்டுக் கொண்டிருந்தான். அச்சமயத்தில் தூக்கம் விட்டு எழுந்த வேலன், "வெளிக்கிடுவதற்கு முன்ன கொண்டு போற சாமானுகள முதல்ல எடுத்து வை தம்பி!" எனக் குரல் கொடுத்தான். அதற்கு கண்ணன், "இரவே எடுத்து வச்சாச்சுத் தானே அப்பா. இப்போ வெளிக்கிட்டா சாப்பாட்ட சாப்பிட்டா... சாப்பாட்டுப் பார்சலையும் கையில எடுத்தா பயணத்த தொடர வேண்டியது தான்!" எனப் பதிலளித்தான்.

பஸ்ஸ்ராண்ட் மட்டும் கொண்டுபோய் வழியனுப்பி விட்டு வருவதற்காக வேலன் முஞ்சைச் கழுவி மூலையில் கிடந்த துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு வந்தான். கண்ணனும் சோறு சாப்பிட்டு முடித்தான்.

"போவமாப்பா?" எனத் தகப்பனைக் கேட்டவாறு இன்ரவியூவுக்காகக் கொண்டு செல்லவேண்டிய ஆவணங்களையும், சாப்பாட்டுப் பார்சலையும் கையில் எடுத்துக் கொண்டு மரகதத்திடமும் தங்கை செல்லத்திடமும் "நான் பொயிற்று..." என்ற அரைகுறை வார்த்தையைக் கூறியவாறே தகப்பன் பின்னே சென்றான். தாயும் மகளும் இன் முகத்தோடு கண்ணனை வழியனுப்பி வைத்தனர்.

ஒரு மணித்தியாலம் சென்ற பின்னர் கண்ணனை பஸ்சில் ஏற்றி விட்டு வேலன் வீடு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாக தாயும் மகளுமாக, "இஞ்ச பாருங்களன் மேசையில கண்ணன் அடையாள அட்டையைப் போட்டுத்துப் போயிற்றானே..! என வேலனிடம் கூறி கண்ணீர் சிந்தி நின்றனர். வேலனுக்கு என்ன பேசுவதென்றே தெரியாத கடும் ஆத்திரம்.

"இந்தக் காலத்தில ஐடேன்ரிக் காட்டையும் மறக்கிறதா...? அவனுக்கு புள்ள குட்டிக் காரனப் போல கவனயீனம்...", எனப் பல்லைக் கடித்தவாறு திட்டித் தீர்த்தான் வேலன். "என்னத்துக்குக் கிளம்புறியள்? எங்க போற என்றாலும் என்ர புள்ள அடையாள அட்டையத்தானே பொக்கேற்றுல முதல் எடுத்து வைக்கிறவன். இண்டக்கி அவன சனியன் தடுத்துத்தாக்கும்..." என்று கூறி முடித்தாள் மரகதம். தாய்க்குப் பக்கத்தில குந்திக் கொண்டிருந்த செல்லம் "அண்ணா விட்ட ஐடேன்ரி கேட்காம விட்டுருவானுகளெண்டா.." எனப் புறுபுறுத்துக் கொண்டிருந்தாள். இருப்பினும் தெய்வாதீனமாக கண்ணன் வீடு வந்து சேருவான் என்ற நம்பிக்கை மூவருக்கும் இருந்தது. எனவே வழி மேல் விழிவைத்து மூவருமாக கண்ணனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாலை ஐந்து மணியாகியும் கண்ணன் வீடு வந்து சேரவில்லை. எதிர்பார்த்து ஏமாற்றமே அவர்களுக்குக் கிடைத்தது. ஏமாற்றம் ஏக்கத்தைக் கொடுத்தது. நாழிகைகள் நாட்களாகி நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி ஒருவருடமே கடந்து விட்டது தேடித் தேடி அலைந்து கண்ணனைக் கண்டபாடில்லை. அடையாள அட்டை இல்லாமல் போனதனால் கண்ணன் ஆளடையாளம் இல்லாமலே போய்விட்டான்.

'வெல்லவூர்' சரவணமுத்து நவேந்திரன் — எருவில்

# உவமை கூற முடியாத பெண்மைப் பேரழகு

# இலக்கிய நயம்

பெண் என்னும் பேரதிசயப் பெட்டகத்தை வியந்து, வியந்து விடும் மூச்சுகளைச் சூடாக்கிக் கொள்ளும் வயதுக்கு வந்து விட்டிருந்தான் சசாங்கன்.

பெண்ணின் கால் ஸ்பரிசம் இல்லாவிட்டால் இந்தப் பூமி சுற்றாமல் நின்றுவிடுமோ என்ற பயம் அவனுக்கு வர ஆரம்பித்திருந்தது.

பெண்களைப் பார்க்கிற போதெல்லாம் அவன் நரம்புகளிலிருந்து செய்யப்பட்ட பல வயலின்கள், சிம்பொனிக்காகச் சிணுங்குவது கேட்டது.

அதிவேக ரயில் கடந்த தண்டவாளமாய் இதயம் அதிர்ந்தது. தசைகளுக்குள் தேன் சுரந்து, அங்கம் ஒவ்வொன்றும் இன்பபோதையில் தங்களை மறந்து குதியாட்டம் போடுவதாய்த் தெரிந்தது.

விரல்களை எந்தப் பொருளில் தட்டினாலும் வீணையின் ஒலி கேட்டது.

சிகரெட் பிடிக்கிறவர்களைப் பெண்களுக்குப் பிடிக்காது என்று சிகரெட்டைத் தவிர்த்தான்.

நாலுபேரோடு வம்பளந்து சுற்றுவதும் பிடிக்காது என்றறிந்து, நட்புகளையும் தவிர்த்தான்.

இந்தப் பெண்கள் சமுத்திரத்தில் எங்கோ ஒளிந்திருக்கும் தன் காதல் இளவரசிக்காக தனிமை சூழ்ந்த நந்தவனத்தினுள் காத்திருந்தான் சசாங்கன். அப்போதுதான் அவள் வந்தாள்.

முதல் பார்வையில் அவன் மனசு நடுங்கியது. இதயத்தை அதிர வைக்கும் அழகாக அவள் இருந்தாள்.

பூமிக்கு ஒளியாக இருப்பது சூரியன்தான் என்பது எவ்வளவு பெரிய பொய் என்றுணர்ந்தான். பெண்கள்தான் உலகுக்கு ஒளியாக இருக்கிறார்கள். அவர்களது பிரசன்னத்தில் அந்தச் சூழலையே கண்ணுக்கு இனிமை நிரம்பியதாகச் செய்துவிடுகிறார்கள்.

அவளால்தான் இந்த உலகம் இத்தனை அழகாய்த் தெரிந்தது என்ற உண்மைகளை அவன் கண்டுபிடித்தான்.

இன்னும் எழுதப்படாத பல கவிதைகளைத் தன்னுள் அடக்கியிருக்கும் அவளது அந்த அகன்ற கண்கள்.... இந்தப் பிரபஞ்சத்துக்கே ஒளிவழங்கப் போதுமான வெளிச்சத்தைக் கொண்டிருந்தன.



அவள் நடக்கையில், நிற்கையில், சிரிக்கையில், முகம் சிவக்கையில் சிந்துகின்ற கவிதைகளைச் சேர்த்து உலக மகா காவியம் ஒன்றை உருவாக்கி விடலாம் என்ற பேரவாவில் அவளைப் பின்தொடர்ந்தான்.

பகலிரவு சூரியனால்தான் வருகின்றன என்று சொல்பவர்களைப் பார்த்துச் சிரிக்கத் தோன்றியது.

பகல்கள் எல்லாம் அவள் கண்களிலிருந்தும் இரவுகள் எல்லாம் அவள் கூந்தலில் இருந்துமல்லவா வருகின்றன!

"மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக்கில்லை.
மீன் விழி உடையாளென்றால்
மீனிலே கருமை இல்லை.
தேன்மொழிக்குவமை சொன்னால்
தெவிட்டுதல் தேனுக்குண்டு.
கூன் பிறை நெற்றி என்றால்
குறைமுகம் இருண்டுபோகும்...."

என்றெல்லாம் தான் பார்த்த 'அவளை' உவமைகளால் அடுக்கிப் பிறகு அந்த உவமைகள் அவளுக்கு உறைபோடக் காணாது என்று விலக்கியும் செல்கிற நாமக்கல் கவிஞர் அவளை வர்ணித்து தனது நீண்ட உவமைப் பட்டியலை முடிக்கும் விதம் சசாங்கன் ஞாபகத்தில் வந்தது.

"பற்பல உவமை சொல்லிப்
பண்டிதர்களுக்கும் கூடக்
கற்பனை புரிந்திடாத
கட்டுரை பின்னிக் காட்டும்
சொற்பல அடுக்க வேண்டாம்
சுருக்கமாய் சொல்லப் போனால்
அற்புத அழகு முற்றும்
இயற்கையில் அமைந்த நங்கை"

என்று சோர்ந்துபோய், அவளை வர்ணனைகளுக்குள் அடக்கிவிட முடியும் என்று நினைத்த பேதமையை எண்ணிவெட்கமுற்று நிறுத்துகிறார். வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாத அழகுதான் அவளுடையது ஒரு வேளை வயலின் இருந்தால் அந்த அழகை வாசித்துக் காட்டலாமோ என்னவோ....

பெண்ணின் அழகினால் பாதிப்புற்றுத் தடுமாறிக் குழப்பமடைகிற ஆண்களின் அவலம், மிக ஆதி நாளிலிருந்தே தொடர்ந்து வருகிறது.

புற வாழ்வுக்குத் தேவையான மின்சாரத்தைக் கண்டுபிடித்ததுதான் பிந்திய காலங்களிலேயே தவிர, மனதுக்குள் திடீர்த் தாக்குதலை நிகழ்த்தி நிலைகுலைய வைத்துவிடுகிற மின்சாரத்தை நம்முன்னோர் ஆரம்ப நாட்களிலேயே கண்டு பிடித்து விட்டனர்.

நாமக்கல் கவிஞரைப் போலவே கலித்தொகைப் புலவனும் தான் பார்த்த பெண்ணை வர்ணிக்க முனைந்து, 'உவமைகள் எல்லாம் உண்மைகள் அல்ல உந்தன் முன்னாலே' என்று விலகிச்

## தருவது முழடில்யன்

சோர்ந்திருப்பதை சசாங்கன் நினைத்தான்.

அவளது நெற்றியை முகத்தை, தோள்களை, கண்களை, மெல்லிய சாயலை, தேனினுமினிய சொல்லைக் கண்டு முதலில் வியந்து நிற்கிறான் ஆண்மகன். அந்த அழகை உவமைகள் கொண்டு விவரித்துப் பார்க்கலாமா என்ற முயற்சியில் இறங்குகிறான்.

ஆனாலும், எந்த உவமையும் அவளது அழகை ஒப்பிட அருகேயும் வரமாட்டா என்றறிந்து தளர்ந்து போகிறான். மொழிக்குள் அடங்கிவிடாத முழுநிலவு அவள்! அவளது நெற்றி குறுகித் தேய்ந்து ஒளி வீசுகின்றது; ஆனால் அது- பிறைச்சந்திரனல்ல. மாசு மறுவற்ற ஒளி காலும் அவள் முகம் முழுமதியும் அல்ல.தோள்களை மூங்கில்கள் என்று சொல்ல அங்கே மூங்கில்கள் தோன்றுமிடமான மலை இல்லை. கண்களிலிருந்து வீசும் ஒளியையும் குளுமையையும் மலர்களோடு ஒப்பிடலாமென்றால், அவை பூத்திருக்கும் சுனையை அவளிடம் காணமுடியாது. அவள் மென்மையாக அசைந்து நடக்கும் சாயலில் மயிலுக்கு நடக்க முடியாது. அவள் குரலின் குழைவை கிளிகள் நினைத்தும் பார்க்க முடியாது.இவ்வாறு பழகிய உவமைகளுக்கெல்லாம் மறுப்புக்குரல் எழுப்பி, ஒப்பில்லாமணியாக உயர்ந்த அவள் அழகு நயத்தில் மயங்குகிறது கலிப்பாடல்.

**நில் என நிறுத்தான் நிறுத்தே வந்து**
**நுதலும் முகனும் தோளும் கண்ணும்**
**இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ**
**ஐதேய்ந் தன்று பிறையும் அன்று**
**மை தீர்ந் தன்று மதியும் அன்று**
**வேயமர்ந் தன்று மலையு மன்று**
**பூவமர்ந் தன்று சுனையும் அன்று**
**மெல்ல இயலும் மயிலும் அன்று**
**சொல்லத் தளரும் கிளியும் அன்று.**

(கலி : 5 :56-14)

# சிந்தியா பதில்கள்

**★ பேயைப் பற்றி என்ன நினைக்கிறீர்? முடிந்தால் ஒரு குட்டிக் கதை?**

பா.கமலச்சந்திரன், மட்டக்களப்பு.

*சிறுகதைக்கு உதாரணமாகச் சொல்லப்படும் பிரபலமான அந்த ஒரு வரிக் கதை. நடு இரவில் அடர்ந்த காட்டுப் பாதை வழியே நடந்து கொண்டிருந்த இருவரில் ஒருவர், "உனக்குப் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உண்டா?" என்று கேட்க, அருகில் வந்த உருவம் "ஆம்" என்று சொல்லிக் காணாமல் போனது.*

*பேய்கள் அவரவர் உள்ளேதான் இருக்கின்றன; வெளியே இல்லை!*

●●

**★ ஹலோ சிந்தியா; வருடத்திற்கு 365 நாட்கள் தான் வரும். இவ்வருடம் 366 நாட்கள் வந்துள்ளதே?**

சிவகுமார், கலஹா.

*ஹலோ சிவா, வருடத்தில் 365 1/4 நாட்கள் உண்டு, கலண்டர் வசதிக்காக நான்கு வருடங்களுக்கொருமுறை 366 நாட்களைப் போட்டுச் சமாளிக்கிறார்கள்.*

●●

**★ சிந்தியா, சுஷ்மிதாசென், ஐஸ்வர்யாராய், யுக்தா முகே இவர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? காரணம்?**

எஸ்.சுதாகரன், கொட்டகலை.

விளிப்புக் குறி இல்லாததால் 'சிந்தியா தான்' என்று பதில் சொல்லிவிடத்தான் ஆசை. பெருந்தன்மையோடு என்னைத் தவிர்த்து விட்டுப் பதில் சொல்கிறேன். அழகென்று பார்த்தால் மூவரையும் விட அழகிகள் வேறு பலர் இருக்கிறார்கள் என்பதை காதலிக்கும் ஆண்கள் எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். நடிப்பில் யுக்தா முகேயை அளவிட ஒரு வருடம் பொறுத்திருக்க வேண்டும். மற்ற இருவரில் அந்த நளினம், கனவுக் கண்கள், முகத்தில் கொப்பளிக்கும் உணர்வுகள், கவிதை அசைவுகள் எல்லாவற்றிலும் 50Kg தாஜ்மஹால்தான் அதிசயமாகத் தெரிகிறார்.

●●

**★ மனம், குணம், உறவுகளைவிட பணமே பிரதானம் என மதிப்பவர்களைப் பற்றி?**

புஷ்பகலா பாலா, இறக்குவானை.

*இப்போதைய ரூபா நோட்டுகள் சில்லறைகள் வராத காலத்தில் தங்கம்தான் பணமாக இருந்தது. அப்போதே அதை 'மஞ்சள் பிசாசு' என்று அழைத்தார்கள். இனம் இனத்தை நாடும்.*

●●

**★ ஆனையிறவு எப்படி?**

மு.சிற்சபேசன், கொழும்பு-06.

*ம்.. கொழும்பில் அல்லவா இருக்கிறோம் நாம்.*

●●

**★ இலண்டனில் சுபவீரபாண்டியன், கனடாவில் வை.கோபால்சாமி போன்றோரின் உரைகளைக் கேட்டீர்களா?**

சி.துஷ்யந்தன், மண்டூர்.

*எனக்கு வருத்தம் ஒன்று உண்டு. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தலைவர்களாயினும் சரி சாதாரண குடிமகனாயினும் சரி, இலங்கைப் பிரச்சனை அவர்களுக்கு நல்லதொரு தமிழ்ப்படம் பார்ப்பதைப் போன்ற உணர்வைத் தருவதாகத்தான் தோன்றுகிறது. வீர உணர்வு பொங்கக் கூடிய 'திறில்' காட்சிகள்,கண்ணீரைப் பிழிந்து உணர்ச்சி வசப்படக்கூடிய சோகக் காட்சிகள், ஹீரோ கடைசியில் 'எல்லாம் சுபம்' என்று முடித்து விடுவார் என்ற எதிர் பார்ப்பில் சந்தோஷம்- என்று இவ்வாறாக ஒரு தமிழ்ப் படத்தின் இரசிகர்களாகத்தான் நம் பிரச்சினையை அவர்கள் பார்ப்பதாகத் தோன்றுகிறது. நம்மவர்களில் பலரும் அவர்களது அனுதாபத்தில் குளிர் காய்ந்தபடி கண்ணீரையும், வீரப்பிரதாபங்களையும் விநியோகம் செய்யும் வள்ளல்களாகத் திருப்திப் பட்டுக் கொள்கிறார்கள்.*

*இரத்தமும் சதையுமாக நாம் படும் இன்னல்களுக்கு அவர்களால் ஏதேனும் மாற்றத்தினைத் தரமுடியும் என்று தோன்றவில்லை. நாங்கள் உசார் மடையர்களாக இல்லாமல், நமக்குரிய தேவையை உணர்ந்து கவனத்துடன் நம் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளும் வழியைப் பார்க்க வேண்டும்.*

●●



ஐஸ்வர்யா ராய்

**★ சிந்தியா! தமிழ்க் கட்சிகள்?**

ஏ.எம்.நிசாம்தீன், முசலிபிட்டி, புத்தளம்.

*நிசாம்தீன்! உங்கள் கேள்வி அடையாளத்துக்கு என்ன அர்த்தம். 'என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?' என்பதா, 'ஏன் இருக்கிறார்கள்?' என்பதா...*

●●

**★ வெற்றிபெற நல்ல எண்ணம் போதுமா?**

ஏ.ஏ.எம்.பாரூக், குருணாகல்.

*இல்லை. வல்லவராகவும் இருக்க வேண்டும்.*

●●

**★ சிந்தியாவுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்? காரணம்?**

ஏ.எல்.முகமட் றஷ்மி, அட்டாளைச் சேனை.

*"புவியனைத்தும் போற்றிட-வான்*
*புகழ் படைத்துத் தமிழ் மொழியைப் புகழிலேற்றும்*
*கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையென்னும்*
*வசையென்னாற் கழிந்த தன்றே"*

*என்று எட்டயபுரம் மன்னரிடம் நிதி உதவி கோரி சீட்டுக்கவி எழுதவேண்டி ஏற்பட்டபோது பாரதி எழுதுகிறான்.*

*"...வசவு வாங்கியும் வாழ்த்துக்கள் கேட்கும் எனக்கு அனுபவம் உண்டு. என்னை முதலில் கோட்டிக்காரனாக நல்ல காலமாக நானே அந்தப் பெயரை வைத்துக் கொண்டேன்- மதித்தார்கள். பிறகு படிப்படியாக மதித்தார்கள்; சனியன் வாயை மூடமாட்டான் என்று புகழ ஆரம்பித்தார்கள். என்னிடம் வந்து எனது 'அரிய' கதைகளின் அருமை பெருமைகளை கலை நுட்பங்களை என் எதிரில் புகழும் போது கழுத்தில் கயிற்றை மாட்டிக் கொள்ள வேண்டும் என்று தோன்றும்; அல்லது எதிரில் இருக்கிறவனை அறையத் தோன்றும். இரண்டொரு தடவை சகிக்க முடியாமல் அறைந்திருக்கிறேன். எனது கதைகள் அருமையாக இல்லாமல் வேறெப்படி இருக்கும்?..."*

*அது கதைத் தமிழின் மன்னர் புதுமைப் பித்தனின் குரல். "...பாரதி நமது ஆசான். நம்மிலிருந்து அவன் வேறல்ல, நமது கனவுகளிலிருந்து பிறந்தவன் அவன். நம்முடைய நவீன இலக்கியத்தின் ஒவ்வொரு கிளையும் அவனால் தொடங்கப்பட்டதுதான். ஒரு தடவை க.நா.சுப்பிரமணியம் கேட்டார், "பாரதி பாரதி என்று சொல்லிக்கொண்டிருக்கிறாயே பாரதி எழுதவில்லையென்றால் என்ன பண்ணியிருப்பே" என்று. நான் பதில் சொன்னேன்: "அதையெல்லாம் நான் எழுதியிருப்பேன்..."*

*அது ஜெயகாந்தனின் பிரகடனம். அந்த மூவரது எழுத்துக்களுடன் அவர்களது வித்துவவீறும் எனக்குப் பிடிக்கும்.*

●●

**★ காதலித்துப் பார் கவிதை வரும் என்பார்கள். திருமணம் முடித்தால் என்ன வரும்?**

எ.ஜெகதீஸ், தெகிவளை.

*நீங்கள் சரியாக இருந்தால் திருமணத்தின் பிறகும் கவிதை வரும். அதற்கும் மேலாக, கண்ணதாசன் பாடல் வரி ஒன்று உங்களுக்கும் தெரிந்திருக்கும். "ஒருவரின் துடிப்பினிலே விளைவது கவிதையடா! இருவரின் துடிப்பினிலே விளைவது மழலையடா."*

# கிரிக்கெட் சூதாட்டம் ..............

(6ம் பக்கத் தொடர்ச்சி....)

அதெல்லாம் சரி, கிரிக்கெட் வீரர்கள் பங்கு இதில் என்ன என்பது பற்றித்தான் சிக்கலே. எந்த ஒரு அணிக்கும் பணம் கொடுத்து, சிறப்பாக விளையாட வைத்து, எப்பாடுபட்டேனும் வெற்றிபெற வைப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. ஆனால் வேண்டுமென்றே விக்கெட்டுகளையிழக்க வைக்கலாம், தோற்றுப்போக வைக்கலாம். அப்படியும் ஒரு அணி தோற்றுப்போவதற்கு பதினோரு பேரில் ஐந்தாறு பேரையாவது புக்கிகள் தங்கள் பக்கம் இழுக்க வேண்டும். அதுவும் சுலபமல்ல. க்ரோன்யே குறித்த பிரச்சினையில் கூட மேலே குறிப்பிடப்பட்டது போன்று அந்த பந்தயத்தில் தென்னாபிரிக்காவே வென்றது.



அதுமட்டுமல்ல. கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம். மிக வலுவான குழு கூட சாதாரண ஆட்டக்காரர்களிடம் தோற்றுப் போகலாம். மேற்கிந்தியத் தீவுகள் அணி கென்யாவிடம் தோற்றது போன்று. தற்செயலாக நிகழ்ந்த தோல்வியா, வேண்டுமென்றே இழக்கப்பட்டதா என்று முடிவு செய்வது கடினம். ஆனாலும் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல கிரிக்கெட் வீரர்கள் மீதும் இப்படிப் புகார்கள் வந்துள்ளன பல்வேறு காலகட்டங்களில்.

இந்தியாவில் மனோஜ் பிரபாகர் அசாருதீன் மீது சுற்றி வளைத்துப் புகார் கூறியிருக்கிறார். ஆனால் ஆதாரம் எதுவும் அவர் அளிக்கவில்லை.

பாகிஸ்தானில் வசீம் அக்ரம், சலீம் மாலிக் ஆகியோர் மீது தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. இவற்றில் உண்மையிருக்கிறதா என்று தெளிவாக யாரும் சொல்ல இயலவில்லை.

அசாருதீன் பணத்தில் மிதக்கிறார், ஆடம்பரமாக வாழ்கிறார், எனவே அவர் புக்கிகளுக்கு ஏஜெண்ட் என்று சிலர் கூறலாம். ஆனால் ஆதாரம் என்ன? இந்தியா போன்ற அவ்வளவு வலு இல்லாத ஒரு குழுவினை, பணம் கொடுத்துத்தான் தோற்கடிக்க வேண்டுமா என்றுகூட சிலர் கிண்டலடிக்கிறார்கள்.

அசாருதீனை விடுவோம், டெண்டுல்கர் போன்ற மிகச்சிறந்த வீரர்களைக்கூட சூதாடிகளுடன் இணைத்து செய்திகள் வருகின்றன. எப்படி நம்புவது?

புகார் கொடுக்கும் மனோஜ் பிரபாகரும், பாகிஸ்தானின் சர்ஃப்ராஸ் நவாசும் பல்வேறு காரணங்களினால் குழுவில் தங்கள் இடங்களை இழந்தவர்கள். அவர்கள் வெறுப்பில் கூட அவதூறுகளை அள்ளி வீசலாம் அல்லவா?

தீவிர விசாரணை தேவைதான். ஆனால் எத்தனை விசாரணை செய்தாலும் திட்டவட்டமாக எதையும் கூற இயலாது என்பதுதான் உண்மை. புக்கிகளைப்பிடிப்பது சுலபம். ஆனால் அவர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் தொடர்பிருக்கிறதா என்று கண்டறிவது கடினம். மாட்டிக்கொள்ளும் புக்கிகள் வேண்டுமென்றே புகழ்பெற்ற வீரர்களை சிக்க வைக்கக்கூடும். அதுவும் ஹவாலா வழியில் பணம் கைமாறும் போது, அதையெல்லாம் நிரூபிப்பது மிகமிகக் கடினம்.

ஜெயலலிதாவிலிருந்து தொடங்கி வாழபாடி, இராமதாஸ், தினகரன், கருணாநிதி, மாறன் என்று பல்வேறு தமிழக அரசியல்வாதிகள் வெளிநாட்டு வங்கிகளில் பணம் சேர்த்து வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. ஆமின் ஆதாரமில்லையே க்ரோன்யே போன்று வேறு எவர்மீதும் டெலிஃபோன் உரையாடல்களை ஆதாரமாக வைத்து குற்றச்சாட்டுகள் எழவில்லை.

இந்தச் சூழலில் என்ன செய்யலாம்? தீவிரமான புலன் விசாரணை தேவை. புக்கிகள் அனைவரையும் உள்ளே தள்ளவேண்டும். ஆதாரம் கிடைத்தால் சம்பந்தப்பட்ட விளையாட்டு வீரர்கள் மீது கடும் நடவடிக்கையெடுக்க வேண்டும். அப்புறம்? திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. அவ்வளவே. புரையோடிப் போன முதலாளித்துவ சமுதாயம் என்றேனும் ஒரு நாள் குணப்படுத்தப்படும் என்ற நம்புவோமாக. இத்தகைய வக்கிரங்கள் தொடர்ந்தாலோ, ஒட்டு மொத்தமாக மனித சமூகம் அழிந்து, மீண்டும் மனிதன் குகைகளை நோக்கிச் சென்று விடுவான்.

# மன்னாதி மன்னன் 03

# அலங்காரவல்லி

அடுத்தநாள் அதிகாலையில் துயிலெழுந்த போஜ ராஜன் காலைக் கடன்களை முடித்துவிட்டு அன்றாடப் பணிகளை தனது அமைச்சர்களிடம் பிரித்துக் கொடுத்துவிட்டு, தங்கச் சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்த அரண்மனை மண்டபத்துக்குள் வந்து சேர்ந்தார். மன்னர் வருவதற்கு முன்னதாகவே சிம்மாசனத்துக்கு உரிய பூஜைகள் முதலியவற்றை வேதியர்கள் நிறைவேற்றி வைத்திருந்தனர்.

சிம்மாசனத்தில் முதலாவது படியில் மன்னர் காலை வைத்தார். அந்தப் படிக்குரிய பதுமையான விநோதரஞ்சிதப் பதுமை மன்னாதிமன்னன் விக்கிரமாதித்தனின் தோற்றம் பற்றிய வரலாற்றினை கூறத் தொடங்கியது.

நந்தியாபுரம் என்ற நாட்டைச் சேர்ந்தவன் சந்திரவர்ணன். பிராமண வகுப்பைச் சேர்ந்த சந்திரவர்ணன் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவன். இருப்பினும் கலைகள் முழுவதையும் முழுமையாகக் கற்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவனை வாட்டியது. துறவு பூண்டு சிறந்த குரு ஒருவரை அண்டி அவருடைய தயவிலேயே ஏனைய கலைகளைக் கற்றுணர முடியும் என்று கருதினான். இதன் பயனாக துறவறத்தை மேற்கொண்டு தனக்கு கலைகளை கற்றுத்தரக் கூடிய ஒரு குருவை நாடி பல இடங்களிலும் அலைந்து திரிந்தான். சோர்வும் களைப்பும் மேலிட்டதே தவிர அவனுக்கு ஏற்ற குரு எவரும் கிட்டவில்லை.

ஒரு குளத்தின் கரையில் நிழல் தரும் அரச மரமொன்றைக் கண்டான். அதன் நிழலில் படுத்து கண்ணயர்ந்து விட்டான்.



அரச மரத்தின் மீதிருந்த வண்ணம் பிரம்ம ராட்சதன் ஒருவன் தவம் செய்துகொண்டிருந்தான். தியானம் கலைந்து, சிரம பரிகாரங்களைச் செய்வதற்காக மரத்திலிருந்து கீழே இறங்கிய பிரம்ம ராட்சதன், மர நிழலில் படுத்திருந்த சந்திரவர்ணனைத் தட்டி எழுப்பினான். "நீ யார்? எங்கிருந்து வந்தாய்? இந்த மரத்தின் கீழ் நீ ஏன் படுத்திருக்கிறாய்?" என்று பிரம்ம ராட்சதன் கடுமையான குரலில் கேட்டான்.

பிரம்ம ராட்சதனின் உருவத்தைக் கண்டதும் சந்திரவர்ணன் களிப்படைந்தான். தான் இதுவரை காலமும் தேடிவந்த குருவைக் கண்டு விட்டதாக அவன் கருத்து அவனுக்கு உணர்த்தியது. உடனடியாக தரையில் வீழ்ந்து பிரம்மராட்சதனின் இரு தாள்களையும் இறுக்கமாகக் கட்டிக் கொண்டான்.

"குருவே! தங்களைக் காணவே நான் இத்தனை காலம் துறவு பூண்டு எங்கெல்லாமோ தேடியலைந்தேன். நான் செய்த தவப்பயன் இன்று பலித்து விட்டது. எல்லாக் கலைகளையும் கற்றறிய வேண்டும் என்ற பேராவலினால் உரிய குருவைத் தேடியலைந்தேன். இதோ இன்று எனது குரு நாதர் என் முன்னே காட்சி தந்துவிட்டார். ஆகவே குருவே உடனடியாகவே என்னை தங்கள் சீடனாக ஏற்றுக் கொண்டு, சகல கலைகளையும் எனக்கு கற்றுத் தந்தருள வேண்டும்!" என்று கெஞ்சிக் கேட்டான்.

பிரம்ம ராட்சதன் சந்திரவர்ணனின் குருபக்தியை மெச்சி, "சீடா! எனக்குத் தெரிந்த கலைகளையும் வித்தைகளையும் உனக்குக் கற்றுத் தர சம்மதிக்கிறேன். ஆனால் இதற்காக நீ மிகவும் கடினமான சோதனைகளுக்குட்படுத்தப்படுவாய்!" என்று கூறினான்.

சந்திரவர்ணன் தான் எத்தகைய கடினமான சோதனைகளையும் தாங்குவதற்குச் சித்தமாக இருப்பதாக பிரம்ம ராட்சதனிடம் தெரிவித்தான்.

"இன்று முதல் ஆறு மாதங்கள்வரை எந்தவிதமான உணவையும் உண்ணாமலும், நீரைப் பருகாமலும் உறங்காமலும் இந்த மரத்தின் கீழே இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் மரத்தின் மேலிருந்து அரச இலைகளில் எனக்குத் தெரிந்த கலைகளையும் வித்தைகளையும், மந்திரங்களையும் எழுதி கீழே போடுவேன். அந்த இலைகளைச் சேகரித்து படித்து அவற்றிலுள்ள வாக்கியங்களின்படி நீ பயிற்சி செய்ய வேண்டும்!" என்று பிரம்ம ராட்சதன் கூறினான். அதன்படி தான் நடக்கச் சித்தமாக இருப்பதாக சந்திர வர்ணன் ஒப்புக் கொண்டான்.

சந்திரவர்ணனின் பயபக்தியையும் பணிதலையும் கண்டு மகிழ்ச்சியடைந்த பிரம்ம ராட்சதன் சந்திரவர்ணனை குளத்தில் குளித்து விட்டு வரும்படி கூறினான்.

முதலாவது மந்திரமாக சந்திரவர்ணனின் காதுகளில் ஒரு மந்திரத்தைக் கூறினான். அதன்படி பசி, தாகம், தூக்கம் எதுவுமின்றி எத்தனை காலமும் இருக்கலாம் என்றும் பிரம்மராட்சதன் கூறிவிட்டு மரத்தில் ஏறிக் கொண்டான்.

இதிலிருந்து தொடர்ந்து ஆறு மாதங்களுக்குப் பிரம்ம ராட்சதன் கூறியபடியே ஒவ்வொருநாளும் அரசம் இலைகளில் மந்திரங்களையும், வித்தைகளையும் எழுதிப் போட்டு வந்தான். ஆறு மாதங்கள் முடிவுற்றன. சந்திரவர்ணனும் கற்க வேண்டிய அனைத்துக் கலைகளையும் வித்தைகளையும் கற்றுக் கொண்டான்.

இவ்வாறு சந்திரவர்ணன் தனது கற்றலை முடித்த அன்றைய தினமே பிரம்ம ராட்சதனின் தியான வாழ்வும் முடிந்து, மரத்திலிருந்து கீழே இறங்கினான். தொடர்ந்து ஆறு மாதங்கள் தன்னை குருவாக ஏற்று கட்டுப்பாட்டுடன் நடந்த சந்திரவர்ணனை வாழ்த்தி வரமருளிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

அன்றுவரை தனது குருவாகி இருந்த பிரம்ம ராட்சதனுக்கு நன்றிப் பெருக்கோடு விடையளித்துவிட்டு சந்திரவர்ணன் தனது ஊரை நோக்கி நடக்கலானான்.

வித்தைகள், கலைகள் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்ட அரச இலைகளை ஒரு மூட்டையாகக் கட்டி தோளில் சுமந்த வண்ணம், கன்னியாபுரி என்ற ஊரையடைந்தான். தொடர்ந்து ஆறு மாதங்கள் பசி, தூக்கம் அனைத்தையும் மறந்திருந்த சந்திரவர்ணன் முதலாவதாக அந்த ஊரைக் கண்டதும் அவனுக்குக் களைப்பு வந்து விட்டது. அந்த ஊரின் கடைத் தெருவில் ஒரு பெரிய வீடு அவன் கண்ணில் பட்டது. வீட்டின் முன்புறமிருந்த திண்ணையில் அமர்ந்தான். அவனையறியாமல் அவன் கண்கள் இறுக மூடிக் கொண்டன. இலை மூட்டையை தலையணை போல் வைத்து படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அந்த வீட்டின் சொந்தக் காரியான அலங்காரவல்லி என்பவள் தனது தோழிகளுடன் ஆலயத்திலிருந்து திரும்பிவந்தாள். தனது வீட்டுத் திண்ணையில் ஓர் ஆண்மகன் படுத்திருப்பதைக் கண்டாள். அவன் யாராக இருக்கலாம் என்று விசாரித்தறிய தனது தோழிகளைக் கொண்டு சந்திரவர்ணனை எழுப்பும்படி கூறினாள்.

நல்ல உறக்கத்திலும், கடுந் தவத்தால் ஒளிர்ந்து கொண்டிருந்த அவனுடைய முகம் பிரகாசமாக ஒளி வீசியது. இதனால் அலங்காரவல்லி சந்திரவர்ணன் பால் ஈர்க்கப்பட்டாள். அவளுடைய தோழிகள் எவ்வளவோ முயன்றும் சந்திரவர்ணனை எழுப்ப முடியவில்லை. ஒரு வேளை அவன் மரணமடைந்திருக்க லாமோ என்றுகூட அலங்காரவல்லி கருதலானாள். ஆனால் அவன் சுவாசித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அலங்காரவல்லி அந்த நகரத்திலுள்ள பிரதான வைத்தியரை அழைத்து வரும்படி ஆளனுப்பினாள். வைத்தியர் வந்து பரிசோதனை செய்துவிட்டு, "உணவு, உறக்கம் எதுவுமின்றி இருந்தமையினால் தான் இந்த மனிதன் களைப்படைந்திருக்கிறான். ஆகவே முதலில் நீராகாரமும் மென்மையான உணவு வகைகளும் கொடுப்பதுடன், இன்னும் சில நாட்கள் மருத்துவ வசதிகள் செய்து ஓய்வாக இருப்பாரானால் குணமடைந்து விடுவார்!" எனக் கூறினார்.

அலங்காரவல்லி சந்திரவர்ணனை தனது இல்லத்தின் உப்புறம் எடுத்துச் சென்று படுக்க வைத்து வைத்தியரின் உதவியுடன் வேண்டிய உபசரணைகளைச் செய்தாள்.

இவ்வாறு எட்டு நாட்களின் பின்னர் களைப்பு நீங்கி, தூக்கம் கலைந்து சந்திரவர்ணன் எழுந்திருந் தான். அப்போது அவனருகில் எவரும் இருக்கவில்லை. உடனடியாக இலை மூட்டையைத் தோளில் தூக்கிய வண்ணம் வெளியேற முற்பட்டான்.

சந்திரவர்ணன் வீட்டை விட்டு வெளியேறுகிறார் என்பதை தோழிகள் மூலம் அறிந்த அலங்காரவல்லி ஓடி வந்து சந்திரவர்ணனின் தாளைப் பற்றி "இத்தனை நாட்கள் பேச்சு மூச்சற்றுக் கிடந்த தங்களை உயிருடன் மீட்ட என்னிடம் ஒரு வார்த்தைகூடக் கூறாமல் போகப் பார்க்கிறீர்களே! இது நியாயம் தானா?" என்று கேட்டாள்.

(மன்னன் வருவான்...)

இராஜகுமாரன்

# சோக்கான ஜோக்ஸ்



ஒரு கணவனும் மனைவியும் தினமும் சண்டை போட்டுக் கொள்வார்கள். ஒருநாள் பக்கத்து வீட்டுக்காரன் கணவனிடம் வந்து,

"ஏன் நீயும் உன் மனைவியும் தினமும் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்குக் கணவன்,

"வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்கிறோம்" என்று சொன்னான்.

பக்கத்து வீட்டுக்காரன் குழப்பத்துடன்,

"என்ன சொல்கிறாய்?" என்று கேட்க,

அதற்கு அந்தக் கணவன்,

"சண்டையிடும்போது என் மனைவி பாத்திரங்களைத் தூக்கி என்மீது வீசுவாள். அவை என்மீது படாமல் போனால் நான் சந்தோஷப் படுவேன். அவை சரியாக என்மீது பட்டு விட்டால் என் மனைவி சந்தோஷப்படுவாள்" என்று சொன்னான்.

***



ஒரு சிறுமி தன் தோழியிடம்,

"ரோஸி ஏன் இந்த மட்டமான வாசனையுடைய பவுடரை தோட்டம் முழுவதும் தூவிக் கொண்டு வருகிறாய்?" என்று கேட்டாள்.

அதற்கு அவள்,

"லின்ஸி, இங்கே முதலைகள் வராமல் இருக்கத்தான் இதைத் தூவுகிறேன்" என்றாள்.

"-ஏய் பைத்தியமே, இங்கே எப்படி முதலைகள் வரும்?" என்றாள் லின்ஸி.

"வராது. நான்தான் சொன்னேனே இந்தப் பவுடர் அவ்வளவு சக்தி வாய்ந்தது" என்றாள் ரோஸி.

***



மனோவசியம் செய்யும் நிபுணரைத்தேடி ஒருவன் வந்தான்.

"மனோவசியம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றான்.

உடனே நிபுணர் விளக்கம் சொன்னார்:

"அதாவது ஒருவனைத் தன் ஆளுகையின் கீழ் கொண்டு வருவதும், பின் நீங்கள் விரும்புவதை எல்லாம் அவனைக் கொண்டு செய்விப்பதுமே மனோவசியம்."

இதைக் கேட்டது தான் தாமதம், வந்தவன் அலட்சியமாக எழுந்தான்.

"இதுதானா? இது 'திருமணம்' அல்லவா? தினம் என் மனைவி இதைத் தானே செய்கிறாள். இதை உங்களிடம் கற்பானேன்!" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

***



இலக்கண சுத்தமாகப் பேசும் ஒருவர், மற்றவர்கள் தவறாகப் பேசினால் உடனே திருத்தி விடுவார்.


இவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. இவர் ஒழுங்காகக் குளிக்க மாட்டார். எப்போதும் அழுக்கான உடைகளோடு, இருப்பார்.

ஒரு நாள் விருந்து ஒன்றுக்குப் போனார். அங்கே இவருக்குப் பக்கத்தில் இருந்த பெண் இவரிடம்

"உங்கள் மீது ஏதோ வாசனை வருகிறதே!" என்று முகத்தைச் சுளித்தபடி சொன்னாள்.

இதைக் கேட்டு வருத்தப்பட வேண்டியவர்,

"நீங்கள் செல்வது தவறு. உங்களிடமிருந்து வருவதுதான் வாசனை. என்னிடமிருந்து வருவது நாற்றம்" என்று வழக்கம் போல் திருத்திச் சொல்லி விட்டுச் சிரித்தாராம்.



அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS

# மலை வண்ணம்




→ அமெரிக்காவுக்கும் மெக்ஸிக்கோ நாட்டுக்கும் போகும் பாதையில் சிறிய மலை ஒன்றுள்ளது. இந்த மலையில் ஒரு தேவாலயம் இருக்கிறது.

இந்த தேவாலயத்தைக் கடந்த 15 வருடங்களாக தன்னந்தனியாக இருந்து கவனித்து வருகிறார் ஒரு முன்னாள் இராணுவ வீரர்.

மலையில் இருக்கும் செடி கொடிகளை வெட்டிச் சுத்தம் செய்து, அந்த மலைக்கு பல வண்ணங்களால் பெயிண்ட் அடித்து மலைக்க வைத்திருக்கிறார் இந்த மனிதர். ■


ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# பிரமிக்க வைக்கும் பிரமாண்டம்



→ "மை நேம் இஸ் பொண்ட்! ஜேம்ஸ் பொண்ட்!!" இந்த வார்த்தைகள் உலகிலுள்ள சினிமா இரசிகர்களை வசீகரிக்க வைக்கும் மந்திர வார்த்தைகள்.

அதிரடி சாகசங்கள் புரிந்து அசர வைக்கும் சாகச மன்னன் ஜேம்ஸ் பொண்ட் தனது படங்களில் தன்னை அறிமுகப்படுத்தும் வார்த்தைகள்தான் அவை.

இதுவரை 19 ஜேம்ஸ் பொண்ட் படங்கள் வந்து விட்டன. முதல் படம் 'டொக்டர் நோ'. கடைசியாக வந்திருப்பது 'வோர்ல்ட் இஸ் நொட் இனஃப்' (படத்தில் இருப்பது).

பிரபல இங்கிலாந்து எழுத்தாளர் இயன் ஃபிளெமிங் உருவாக்கிய கற்பனைப் பாத்திரம் தான் ஜேம்ஸ் பொண்ட். இங்கிலாந்து உளவாளியான இவரது இரகசிய எண் 007.

இயன் ஃபிளெமிங் வழமையாகச் செல்லும் பேருந்து இலக்கம்தான் 007. இதையே தனது கதையில் வரும் பாத்திரத்தின் இரகசிய எண்ணாக்கி விட்டார்.

ஜேம்ஸ் பொண்ட் படங்களில் ஆரம்பம் முதல் முடிவுவரை ஒரே ஆக்ஷன் மயம்தான். பல நாடுகளின் இயற்கை எழில் கொஞ்சும் இடங்கள், வித்தியாசமான, விநோதமான வில்லன்கள், விஞ்ஞானக் கற்பனைக் கருவிகள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அழகிகள் எனப் பிரமிக்க வைக்கும் பிரமாண்டம் தான் ஜேம்ஸ் பொண்ட் படங்கள்.

ஹொலிவூட்டில் தயாரிக்கப்பட்டாலும் சர்வதேச அளவில் திரையிடப்பட்டு வசூல் சாதனைகள் புரிகின்றன. ஆங்கிலம் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், படித்தவர்கள், பாமரர்கள் என அனைவரையும் கவர்ந்திழுக்கும் திறமை பொண்ட் படங்களுக்கு உண்டென்றால் அது மிகையாகாது. ■

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



லிப்னி 03.05.2000

நாவற்குழி தச்சந்தோப்பை சேர்ந்த இந்திரன் - ஜெஸ்லின் தம்பதிகளின் செல்வப் புதல்வி லிப்னி தனது முதலாவது பிறந்தநாளை 03.05.2000 அன்று சுவிஸிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, (இலங்கையிலுள்ள) அப்பப்பா, அப்பம்மா, பாட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், (சுவிஸிலுள்ள) மாமாமார், அத்தை, (லண்டனிலுள்ள) மாமா, அண்ணாமார், அக்காமார், மச்சாள், மற்றும் உற்றார் உறவினர்கள் எல்லாம் வல்ல இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் சகல நலன்களுடன் நீடூழி காலம் இன்புற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ஜெஸ்லின் பெரியம்மா (இலங்கை)

# தானம் செய்த அழகி

↓ கடந்த சில வருடங்களில் இந்திய அழகிகள் மூவர் உலக அழகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களில் முதலில் தெரிவான சுஷ்மிதா சென், "வறுமையில் வாழும் குழந்தைகளுக்கு தன்னால் இயன்றதைச் செய்வேன்." என்று அறிவித்தார்.

அடுத்து வந்த ஐஸ்வர்யா ராயும் இதையே சொன்னார். இருப்பினும் தன் இறப்பின் பின் தனது கண்களைத் தானம் செய்ய முன் வந்தார்.

இவர்கள் இருவருக்கும் பின் வந்த சென்ற வருட அழகி யுக்தா முகி, தனது உடலையே தானம் செய்வதாக அறிவித்து முன்னவர்கள் இருவருக்கும் ஒருபடி மேலே போய்விட்டார்.

தனது உடலைத் தானம் செய்து அதற்கான ஆவணங்களிலும் ஒப்பமிட்டுத் தனது சம்மதத்தைத் தெரிவித்துவிட்டார் யுக்தா முகி.

முன்னைய அழகிகள் அழகிப் பட்டம் பெற்ற பின் திரையுலகில் நுழைந்தார்கள். இதே வழியை யுக்தா முகியும் பின்பற்றுகிறார்.

யுக்தா முகி இந்திப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டார். பிரமாண்டமான படங்களை எடுக்கும் ஷங்கர் அடுத்து இயக்கும் படத்தின் நாயகி யுக்தா முகிதான் என்று இப்போதே பேச்சுக்கள் அடிபடுகின்றன. ■

